# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 8 வள்ளுவர் ஆண்டு 2029 [புரட்டாதி 24 சனிக்கிழமை [10-10-1998] SANJEAVY- Regenerative Tamil Weekly இதழ்: 20


# கிளிநொச்சியில் 1900 படையினர் உயிரிழந்தனர் என்கிறார் ரணில்!

## அவசரகால நீடிப்பு விவாதத்தில் தகவல்

கொழும்பு, ஒக்டோபர் 10

கடந்த மாத இறுதியில் கிளிநொச்சியில் நடந்த சமரில் 1900 படையினர் வரை உயிரிழந்தனர்; இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்தனர். பீரங்கிகள், யுத்த டாங்கிகள், பவள் கவச வாகனங்கள், ஜீப்புகள், டிரக்குகள் உட்பட பெருந் தொகையான யுத்த தளபாடங்களை புலிகளிடம் படையினர் பறி கொடுத்தனர்.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிட்டார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீது உரையாற்றியபோதே கிளிநொச்சிச் சமரில் அரசுப் படைகளுக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து தமக்குச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலம் நீடிப்பு!

கொழும்பு, ஒக். 10

அவசர காலச் சட்டத்தை நாடு முழுவதும் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை 26 வாக்குகள் அதிகமாகப் பெற்று நிறைவேறியது.

பிரேரணைக்கு ஆதரவாக 107 வாக்குகளும், எதிராக 81 வாக்குகளும் கிடைத்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ரெலோ ஆகியன ஐ. தே. கவுடன் சேர்ந்து எதிர்த்து வாக்களித்தன.

சு. பி. டி. பி. மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன ஆதரவு தெரிவித்து வாக்களித்தன.

[உ-7]

## கிளிநொச்சி இழப்பு தற்காலிகமானதே!

### சபையில் ரத்வத்த

கொழும்பு, ஒக். 10

"கிளிநொச்சியில் படையினர்வசம் இருந்த நாலரைக் கிலோமீற்றர் நீளமான வீதிப் பகுதி புலிகளின் கைகளில் வீழ்ந்தமை தற்காலிக நிலையே" — என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகால நீடிப்புப்பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசுகையிலேயே அவர் இப்படிக்கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றை கடந்த 29 ஆம் திகதி மேற்கொள்வதற்கு எமது படைகள் தயாராகிக் கொண்டிருந்தபோது—

புலிகள் தமது முழுப்பலத்தையும் திரட்டி கடந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 'ராகிங்' செய்தால் கடும் நடவடிக்கை!

## துணைவேந்தர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ் பல்கலைக்கழகத்தில் "ராகிங்" நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து சுற்றறிக்கை ஒன்றினையும் அவர் பல்கலைக்கழகத்தின் சகல பீடத்தலைவர்களுக்கும் மற்றும் மாணவர் அமைப்புகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

துணைவேந்தரின் முன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# செம்மணி புதைகுழி விடயம்: பக்கச்சார்பற்ற நடவடிக்கை

## ஆணைக்குழுதலைவர் உறுதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10

செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டுவது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் மனித நேய அமைப்புகள் அனுப்பிய கடிதத்துக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஓ. எஸ். எம். செனிவிரத்ன நேற்றுப் பதில் ஒன்றை அனுப்பி வைத்தார்.

இந்த விடயத்தில் நீதியான — நியாயமான — பக்கச் சார்பற்ற — விசாரணை நடைபெறும் என அவர் அக்கடிதத்தில் உறுதியளித்துள்ளார். அக்கடிதத்தின் சாராம்சம் வருமாறு:-

செம்மணியில் உள்ளதாகக் கூறப்படும் புதைகுழிகள் குறித்து பக்கச் சார்பற்ற முறையில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என தங்கள் அமைப்பு தெரிவித்த கருத்தை ஆணைக்குழுவும் ஏற்றுக் கொள்கிறது.

இந்த விடயத்தில் ஆணைக்குழு எடுத்த சில நடவடிக்கைகளைத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

1) கிரிஷாந்தி கொலை வழக்கு எதிரியிடமிருந்து செம்மணிப் புதைகுழிகள் பற்றிய தகவல் வெளியான

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஊரடங்கு வேளையில் நடமாட வேண்டாம்!

## இராணுவம் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 10

"யாழ். குடாநாட்டில் இரவு 9.00 மணி முதல் அதிகாலை 5.00 மணி வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் மக்கள் தேவையற்ற முறையில் பொது இடங்களில் நடமாடுவதாகத் தகவல் கிடைத்துள்ளது. ஊரடங்கு வேளையில் இவ்வாறு பொது இடங்களில் நடமாடுபவர்கள் பயங்கரவாதிகளாகக் கணிக்கப்பட்டு படையினரின் தாக்குதலுக்கு இலக்காகக்கூடும்.

—இவ்வாறு பலாலியில் உள்ள இராணுவத் தலைமையகம் எச்சரித்துள்ளது.

ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நேரங்களில் தேவையில்லாமல் பொது இடங்களில் நட

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தப்பி ஓடிய 35,000 படையினரை கைது செய்யப் பெரும் தேடுதல்!

## பொலீஸார் தயாராகி வருகின்றனர்

கொழும்பு, ஒக். 10

இராணுவத்திலிருந்தும் கடற்படையிலிருந்தும் தப்பியோடிய சுமார் 35 ஆயிரம் படையினரைக் கைது செய்வதற்காக பொலீஸாரும் முப்படையினரும் இணைந்து பாரிய தேடுதல் வேட்டை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

தப்பி ஓடிய படையினரைக் கைது செய்யும் முழுப் பொறுப்பும் பொலீஸாருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் —

பொலீஸாரின்மேற்பார்வையிலேயே இந்தத் தேடுதல் வேட்டை நடைபெறும் எனவும்—

பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைது செய்வதற்குத் தேவையான தகவல்கள் அனைத்தும் பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்கள் ஊடாக சகல பொலீஸ்நிலையப் பொறுப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

"வெற்றி உறுதி" படை நடவடிக்கைக்கு ஆளணிப் பற்றாக்குறை இருப்பதாலும்—

நாடெங்கும் இடம்பெற்று வரும்கொலைகள், கொள்ளைகள் மற்றும் கிரிமினல் நடவடிக்கைகளில் தப்பி ஓடிய படையினரே பெரும்பகலும் ஈடுபட்டு வருவதாலும்—

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் இன்று!

யாழ்ப்பாணம், ஒக். 10

கடந்த ஒகஸ்டில் நடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் இன்று கொழும்பில் வெளியாகின்றன.

யாழ்ப்பாணத்துக்கான பெறுபேறுகள் அடுத்துவரும் தினங்களில் இங்கு அனுப்பி வைக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இப்பரீட்சையில் யாழ்ப்பாணத்துக்கான வெட்டுப்புள்ளி 110 என்றும், கொழும்புக்கான (தமிழ்மொழி மூல) வெட்டுப்புள்ளி 114 என்றும் முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள் மற்றும் யாழ். மாவட்டத்தில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாண

(8 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழகம் செல்ல முயன்ற

# 46 தமிழ் அகதிகள் மன்னாரில் கைது!

இலுப்பைக் கடவையில் இருந்து தமிழகம் நோக்கி படகு ஒன்றில் சென்று கொண்டிருந்த 46 தமிழ் அகதிகளை நேற்று அதிகாலை மன்னார்க் கடலில் வைத்துக் கடற்படையினர் கைது செய்தனர்.

மன்னார் பொலீஸில் ஒப்படைக்கப்பட்ட அகதிகளும் இரு படகோட்டிகளும், மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் நீதிவான் அவர்களை விடுதலை செய்தார்.

மன்னார் மேலதிக அரச அதிபரால் பொறுப்பேற்கப்பட்ட அகதிகள் பேசாலை அகதி முகாமில் சேர்க்கப்பட்டனர்.

(உ-3-164)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சடலம் அரச செலவில் அடக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 10 சுன்னாகம் பொலிஸாரால் கடந்த புதன்கிழமையன்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட— இனந்தெரியாத நபரின்—சடலம் மூன்று நாள்களின் பின் நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

(உ–15)

# மரண அறிவித்தல்கள்

## கைலாயம் செட்டியார் முத்துக்குமாரசாமி

பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட கைலாயம் செட்டியார் முத்துக்குமாரசாமி வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கைலாயம் செட்டியார்—சின்னம்மாவின் அன்பு மகனும் காலஞ் சென்ற பழனிச்சாமி, தையல் முத்து, சின்னையா காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், காலஞ் சென்ற பார்வதபத்தினி அம்மாவின் கணவரும் சிவலோகநாதன், சுவாமிநாதன் கைலேஸ்வரி, கனகேஸ்வரி ரவீந்திரநாதி, கைலாசநாதன், அமரநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சறோஜினிதேவி, கிருஸ்ணமூர்த்தி, சிதம்பரநாதன், வனிதா, வசந்தி, சிந்தியா ஆகியோரின் மாமனாரும், மதனகீதன், சங்கீர்த்தா, மாதுஷி, மதுசுதன், தர்சனா பிரியன், தனஞ்சயன் ஆகியோரின் பேரனும் சீனிவாசகம், அருணாசலம், லீலாவதி, ஆதிலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியை இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு சிவலோகநாதன்
(மகன்)

443, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.

(59773)

## திருமதி இரத்தினம்மா இராசரெத்தினம்

திருமதி இரத்தினம்மா இராசரெத்தினம் அவர்கள் 09 – 10 – 1998 காலை 7.00 மணியளவில் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த கே. வி இராசரெத்தினம் (இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர் யாழ்- விமான நிலையம் பலாலி) அவர்களின் அன்பு மனைவியும், திருவாளர்கள் சுரேந்திரரெத்தினம், விஜயேந்திரரெத்தினம் (பபா), றவீந்திரரெத்தினம், பாலசிருஷ்ணன், நாகேஸ்வரி, சந்திரலேகா, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருவாளர்கள் பரமசிங்கம், காலஞ்சென்ற சந்தனராசா, பவளகாந்தன் திருமதிகள் சிவபூரணம், புஸ்பமாலா, சத்தியபாமா, கமலராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

பேரப்பிள்ளைகள் சூழ அன்னாரின் ஈமக்கிரியைகள் சங்கத்தானை பபாவின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஞாயிறு காலை 10 மணியளவில் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
இ. விஜயேந்திரரெத்தினம்
(பபா)

சங்கத்தானை,
சாவகச்சேரி.

(59786)

## சறோஜா கதிரவேலு

தென்னிந்திய திருச்சபையினால் நடத்தப்பட்டு வருகின்ற ''நம்பிக்கை இல்லத்தில்'' (House of Hope — Inuvil) 4 வருடங்களாகப் பராமரிக்கப்பட்டு வந்த சறோஜா கதிரவேலு (வயது 15) 09-10-98 இல் காலமானார்.

இவரின் நல்லடக்க ஆராதனை 09-10-1998 இல் நம்பிக்கை இல்லத்தில் மாலை 4-30 மணிக்கு நடைபெற்று உடுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பாதுகாவலர்.

'நம்பிக்கை இல்லம்',
இணுவில்.

(சி/5139)

## சின்னத்தம்பி செல்லத்துரை

(இளைப்பாறிய பொலீஸ் அதிகாரி (I.P.)
பொலீஸ் நிலையம், யாழ்ப்பாணம்)

நுணாவில மத்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை அவர்கள் 7 – 10 – 1998 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்தம்பியின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்தம்பியின் (கொக்குவில்) அன்பு மருமகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வமேனன் (லண்டன்), செல்வரமேஷ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகிர்தாவின் (லண்டன்) மாமனாரும், செல்லையா, சதாசிவம், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் கொழும்பு கிரிலப்பனை மயானத்தில் 11 – 10 – 98 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பா. அனோஷன்
(பேறாமகன்)

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

(59807)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், ஒக். 10 நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் மகா கும்பாபிஷேக தினத்தைத் தொடர்ந்து இம்முறை கேதாரகௌரி விரத விசேட அபிஷேக ஆராதனைகள் கடந்த 30 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கௌரிக்காப்பு எடுக்கும் நிகழ்வுடன் விரத நிகழ்வுகள் பூர்த்தியாகவுள்ளன.

(ஐ-8-30)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 10 சோண்டாவில் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் இடம் பெறவிருக்கும் ஆட்டங்களில் பங்கு பற்றவிருக்கும் கழக அணிகளின் விவரம் வருமாறு:-

★ இன்று பி.ப. 3.30 மணி: அன்ரனீஸ் எதிர் பாடும்மீன்,

★ பி.ப. 4.30- றோயல் எதிர் சென்நீக்லஸ்

நாளை பி.ப. 3 30- சென்றோக்ஸ் எதிர் கிறீன் பீல்ட்,

★ பி.ப. 4. 30- பாடும்மீன் எதிர் பொற்பதி. (உ-3)

## தவறிவிட்டது

செல்வரெட்னம்
சிறிஸ்கந்தரெட்னம்

ஆகிய எனது லயன் ஏயரிக்கட் யாழ். நகரில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து

183, நாலாம்
குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும் சன்மானம் வழங்கப்படும்.

[59805]

## றீகல் டாக்கீஸ்

ஈச்சமோட்டை.
40 அடி திரையில்
10 — 10 — 1998
அரவிந்தசாமி நடித்த
பம்பாய் 11 மணிக்கு
விஜய் நடித்த
தேவா 2-30 மணிக்கு
(யாவும் புதியநேரப்படி)

[59808]

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
அரவிந்தசாமி
மதுபாலா ■ ஸ்ரீவித்தியா
ஜனகராஜ் ■ நாஸர்
நடித்த
**ரோஜா**
இனிய பாடல்கள்
நிறைந்தது
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/5020)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
மம்முட்டி - அஞ்சு
விஷ்ணுவரதன் நடித்த
சத்திரிய வம்சம்
[illegible]
காட்சி: 10-30, 2-30

(59810)

கொடிகாமம்

# ஆத்தியடி விநாயகர் ஆலய

அறநெறிப் பாடசாலையின்

# ஆண்டு விழா

இந்து கலாச்சார அமைச்சும்
அகில இலங்கை
சைவக்குருமார் அர்ச்சகர் சபையும்
இணைந்து வழங்கும்
பரிசளிப்பு விழாவும்
சைவ ஆகம கிரியை சம்பந்தமான கண்காட்சியும்.

இடம்: ஷெ ஆலய மண்டபம்

தலைவர்: திரு. த. கந்தையா
(அதிபர், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்)

ஆசிவழங்குபவர்: வேதாகம சோதிட பூஷணம் பிரம்மஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள்

பிரதம விருந்தினர்: திரு. பு. சுந்தரம்பிள்ளை
(பிரதேச செயலர் தென்மராட்சி)

சிறப்பு விருந்தினர்: சிவஸ்ரீ க. கிருபானந்தகுருக்கள்
(தலைவர், அ. இ. சை. கு. அ. சபை தென்மராட்சி)

கண்காட்சி ஆரம்பித்தல்: சிவஸ்ரீ இ. குமாரசுவாமி குருக்கள்
(பிரதிதலைவர், அ. இ. சை. கு. அ. சபை தெ. பி.)

கலைநிகழ்ச்சிகள்: மாலை 4 மணிக்கு

ஷெ பாடசாலை ஆசிரியை திருமதி யோ. தேவகலை அவர்கள் தயாரித்து வழங்கும்

சத்தியவான் சாவித்திரி (நாடகம்)

சைவ அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'சுபம்'

அ. இ. சை. கு. அ. சபை (தெ. பி.),
அறநெறிப் பாடசாலை
ஆசிரியர்களும், மாணவர்களும்.

ஆத்தியடி விநாயகர் ஆலயம்,
கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(சி/5133)

# OBITUARY

## Revd. Harold A. Fernando B.D.

The Former President of the Methodist Conferance the Revd. Harold A. Fernando B.D. passed away on 09-10 98. The funeral will take place on Sunday the eleventh at Moratuwa.

The Supdt Minister,
Methodist Church,
Jaffna Circuit.

(59812)

## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 | 10 |
| — | — |
| 02 | 10 |
| — | — |
| 1928 | 1997 |

அணைந்தும் அணையாத அமரஜோதி

அருள்மிகு

**அறிவர் டேவிட் ஜெயரட்ணம் அம்பலவாணர்**

(தென் இந்திய திருச்சபை, யாழ். ஆதீன 2 ஆம் பேராயர்)

மார்க்கம் தனையறிந்த மட்டிலாச் சுடர்மணியே
தீர்க்கமாகத் தேவபணி செய்து முடித்தவரே
இறைமாந்தரின் நல்லாயனே
மக்கள் தொண்டே இறைத் தொண்டென
வாழ்ந்து காட்டிய எம் அண்ணலே!
ஆண்டு ஒன்றென்ன ஆயிரம் தான் ஆனாலும்
ஆண்டவன் திருமுன் உமை மீண்டும் சந்திப்போம்.

இதுவே எம் நம்பிக்கை!
இதுவே எம் ஆறுதல்!

''ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு
அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது''
— திருப்பா. 116: 15

அம்பலவாணர் குடும்பத்தினர்

மிஷன் இல்லம்,
மானிப்பாய்.

(59695)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரண வெட்டால் பாதிக்கப்பட்ட

# வன்னி மக்களுக்கு உதவ நிதிசேர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்: 10
நிவாரண வெட்டினால் பாதிக்கப்பட்டுள்ள வன்னிப் பகுதி மக்களுக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளிலுள்ள ப. நோ. கூ. சங்கங்களினால் உதவிப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்குடன் மேற்படி ப. நோ. கூ. சங்கங்கள் பொது மக்கள் மற்றும் பொது நிறுவனங்களிடமிருந்து உணவுப் பொருள்கள் மற்றும் நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

அரசின் நிவாரண வெட்டினால் வன்னிப் பகுதியிலுள்ள இடம் பெயர்ந்த மக்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்கியுள்ளனர்.

இவர்களின் பட்டினி நிலையைச் சிறிதளவேனும் குறைக்கும் நோக்குடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் அனுசரணையுடன் இந்த நிதி மற்றும் உணவுப் பொருள் சேகரிப்பு நடைபெறவுள்ளது.

இதே வேளை —
இந்த மக்களுக்கு உதவும் நோக்குடன் யாழ். மாவட்டத்தின் ஒவ்வொரு பங்குகளிலும் நிதி சேகரிக்கப்பட்டு வன்னிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

(ஐ-5)

## ஜனாதிபதி விஜயம்:

## மாத்தளையில் தமிழர் வீட்டில் குண்டு, ரவைகள்

கொழும்பு, ஒக். 10
ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் மாலை மாத்தளைக்கு மேற்கொண்ட விஜயத்துக்கு முன்னோடியாக மேற்கொள்ளப் பட்டபாதுகாப்பு நடவடிக்கையின்போது தமிழர்ஒருவரின் வீட்டில்இருந்து குண்டு மற்றும் ரவைகள் கைப்பற்றப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் வருகையையொட்டி மாத்தளை நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்றும் — அந்த ஏற்பாடுகளின் ஓர் அங்கமாக மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது தக்கவேலு கனகாரசா என்பவர் வீட்டில் இருந்து குண்டு, ரவைகள் கைப்பற்றப்பட்டன என்றும்- தெரிவிக்கப்பட்டது.

(இ-2-10)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரி:

## அம்புலன்ஸ் இன்றி கடும் நோயாளர் பாதிப்பு

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டி இல்லாததினால் அவசர நோயாளர்களை— குறிப்பாக கர்ப்பிணித் தாய்மாரை— யாழ். அரசினர் போதனா வைத்திய சாலைக்கு இரவு வேளையில் கொண்டு செல்வதில் பலத்த கஷ்டங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இரவுவேளைகளில் கடும் நோயாளர்களை எடுத்துச் செல்வதற்கு இங்குள்ள தனியார் வாடகைக் கார் உரிமையாளர்கள் தயக்கம் காட்டி வருவதாகவும் தெரியவருகின்றது. இவ் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்றை வழங்கி உதவுமாறு வைத்தியசாலை அபிவிருத்தி சபை யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரிடமும், அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், 'யுனிசெவ்' ஆகிய வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(ஐ-135)

## மாங்குளத்தின் வடக்கே விமானத்தாக்கு

கொழும்பு, ஒக். 10
மாங்குளத்தின் வடக்குப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் எனச் சந்தேகிக்கப்படும் இடங்கள் மீது விமானப் படையைச் சேர்ந்த கிபிர் ஜெட் விமானங்கள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

இதே வேளை வன்னி மாவட்டத்தில்வன்னிவிளாங்குளம் பகுதியில் நேற்றைய தினம் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது 25 கண்ணி வெடிகள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

## பாராட்டு விழா

சுன்னாகம், ஒக். 10
யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம்பெற்ற துரைச்சாமி கலியுகவாதனைப் பாராட்டிக் கௌரவிக்கும் பாராட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தில் நடைபெறும்.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(இ-27)


★ 56 விதமான ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிக்கிறோம்.
★ I. S. O. 9002 சர்வதேச சான்றிதழ் கிடைத்துள்ளது.
★ உங்கள் பிரதேசத்திற்கு எமது விற்பனை வானை அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.
★ உங்கள் வர்த்தக நிலையத்திற்குத் தேவையான ஆயுர்வேத மருந்துகளைப் புறக்கோட்டையிலுள்ள எமது நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சித்தாலேப H.
ஹெட்டிகொ. குரூப்

ஹெட்டிகொட குறூப்
33/3, ஸ்ரீ தர்மாராம வீதி,
ரத்மலான.

தொலைபேசி: 736910
பக்ஸ்: 735465

(சி/4892)


## வலி. மேற்கில்

## 45 ஆயிரம் பனம் விதை நடுவதற்குத் திட்டம்

வலி. மேற்கு, ஒக். 10
வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் சுமார் 45 ஆயிரம் பனம் விதைகள் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அராலி, மூளாய், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தினரும், பனை அபிவிருத்திச் சபையினரும் இணைந்து சுமார் 45 ஆயிரம் பனம் விதைகளை நடவுள்ளனர்.

அராலிப் பகுதியிலேயே கூடுதலான பனம் விதைகளை நாட்டுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராம உத்தியோகத்தர்கள் பனம் விதைகளை நடுவதற்குரிய இடங்களைத் தெரிவு செய்துள்ளனர்.

(ஐ-175)

## கலைஞர் அறிஞர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10
இந்து சமயப் பேரவையின் கலைஞர், அறிஞர், கௌரவிப்பு விழாவும் 'இந்து தர்மம்' ஆத்மீக சஞ்சிகை வெளியீடும் நாளை காலை 9 மணிமுதல் நல்லை ஆதீனத்தில் அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட நீதிவான் மு. திருநாவுக்கரசு, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய துறைசார் கலைஞர்கள், அறிஞர்கள் 11 பேருக்கு கௌரவ விருதுகள் வழங்கப்படும்.

(ஐ)

## நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 10
1998/99 கல்வியாண்டுக்கு முழுநேரப்பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கை நெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 12ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ் வலய அலுவலகத்தில் நடை பெறும்.

இந்தப்பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான கடிதங்கள் தபால்மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

(இ-3)

# நினைவஞ்சலி

**37ஆம் நாள்**



அமரர்
**ஆறுமுகம் இலகுர்பிள்ளை**

தோற்றம் 10-04-1905 — மறைவு 04-09-1998

இனிமையான கதைகள் பேசி இன்புற்றிருந்தவரே!
முதுமை வந்த போதும் முனைப்புடனே திரிந்தவரே!
வறுமை எம்மை வாட்டாது வளமான
வாழ்வு கொடுத்தவரே!
பொறுமை எனும் பொக்கிஷமாக வாழ்வாங்கு
வாழ்ந்தவரே!
ஐயா! கொழும்பு செல்லத்தானே நாம்
அனுப்பி வைத்தோம்
கொடிய காலனிடம் செல்ல யார் உம்மை அனுமதித்தார்
உறங்கு என்று தானே நாம் உறங்க வைத்தோம்
பறந்து செல்ல யார் உம்மை அனுமதித்தார்?

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பாண்டியன்தாழ்வு,
கண்டுக்குளி.

**7ஆம் ஆண்டு**



அமரர்
**நடராசா சண்முகநாதன்**

தோற்றம் 19-06-1941 — மறைவு 28-09-1991

ஏழாண்டுகள் என்ன எழுபது ஆண்டுகள் போனாலும்
ஏழைப்பங்காளனே உம்மை மறக்க முடியவில்லையே
பாழாய்ப் போன பழைய நினைவுகளை
மறக்க முடிந்திருந்தால்
பாரினிலே உம்மை நாம் மறக்க முடிந்திருக்கும்
தூணாக நின்று தோள்கொடுத்து எம்மை வளர்த்ததை
-ஏனோ
எமனாக உருவெடுத்து ஏமாற்றி அழைத்து விட்டான்
அடக்க முடியவில்லையே அருவியாகப் பாயும்
எம் கண்ணீரை
பொறுக்க முடியவில்லையேபொல்லாத உம்நினைவுகளை.

உம் நினைவுடனே என்றும் வாழும்
மனைவி, பிள்ளைகள்,
மருமகள்.

(59782)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய் மாஜியம் பதி வீதியில், தமிழ்ப் பாடசாலைக்கு எதிரே 17½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.15, குளப்பிட்டிலேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். [59710]

## தவறிவிட்டது

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த தம்பி ஐயா சிவசரணம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (552422023V) நல்லூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கோகிளாரீறும், கொடிகாமம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். [சி/5128]

யோகராசாசிவகுமார் ஆகிய எனது தேசிய (751441177V), வி சேட (0909031134), அடையாள அட்டை இராணுவப் பாஸ் (524 Brigade-153552) என்பன 5-10-98 அன்று வல்லிபுர ஆழ்வார் சமுத்திர தீர்த்தோற்சவம் அன்று ஆலய சூழலில் தவறிவிட்டன. (ஒரே கவரில் வைத்தபடி) கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ரஜனி பீடா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை வீதி, உடுப்பிட்டிச் சந்தி, உடுப்பிட்டி. (59753)

## மணமகள் தேவை

இந்துசமயத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் நகைத் தொழில் செய்கின்ற 33 வயது 8 இல் செவ்வாய் கிரக நிலையை உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 798, மே/பா உதயன், இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [59760]

இந்து, 32 வயது, பூரம் டென்மார்க்கில் நல்ல பதவியிலுள்ள மணமகனுக்கு மரவேலைத் தொழில் (Carpentery) புரியும் தந்தை மணமகளை எதிர்பார்க்கின்றார். சேவை நம்பகம் திருமண சேவை, வைமன் வீதி, நல்லூர். (59733)

வயது 34, செவ்வாய்க்குற்றமுள்ள 6' 1'' உயரமுள்ள கனடாவில் கணனி பொறியியலாளராக (Computer Engineer) தொழில் பார்க்கும் மணமகனுக்கு படித்த, ஒழுக்கமான, உயரமான அழகான மணப்பெண் தேவை. தொடர்பு இல. 797, பே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ். (59747)

## வகுப்புகள்

புவியியல் A/L, G A Q Part II, நில அளவை என்பன கற்பிக்கப்படும். ஆசிரியர் K. A. ஞானி, B. A. (Hons) இல. 49, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (59712)

## O/L கணிதம் 98

ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறு பேறடையக்கற்பிக்கப்படும். த. ஆறுமுகநாதன், 10, நச்சேரிகிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. [59650]

## திருத்துதல்

சகலவிதமான கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணை சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: S. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி (மேல்மாடி), யாழ்ப்பாணம். [59206]

## வீடு விற்பனைக்கு

ஆவரங்கால் சிவன் ஒழுங்கையில் வசதியான வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் நேரில் தொடர்பு: திருமதி கு. மீனலோசனி (தேவி), சிவன் ஒழுங்கை, ஆவரங்கால். (59718)

## வியாழ, சனி மாற்றம்

செப்ரெம்பர் 12 இல், 29 இல் வியாழ, சனி வக்கிர மாற்றங்கள் விற்பனையாகின்றன. ரூபா 12. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். கணிப்பாசிரியர்: த: சத்தியதாஸன் (சதீயா) (Mech E, Elect E — Cey, & Lond), பொறியியல் விரிவுரையாளர் Lanka Cement Ltd. (59757)


# வவுனியாவில் எலும்புக்கூடு

வவுனியா, ஒக் 10

வவுனியா வீரபுரம் என்னும் இடத்தில் மனித எலும்புக் கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இருவாரங்களுக்கு முன்னர் காணாமற்போன மெக்கானிக்கான தங்கராசா தமிழ்செல்வன் என்பவருடைய எலும்புக் கூடாக அது இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. எலும்புக் கூடு வவுனியா ஆஸ்பத்திரியில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. (இ-164-3)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 15 — 05 — 1910

ஆண்டவன் அடியில் 20 — 09 — 1997

அமரர்

### செல்லையா சின்னத்துரை

(செட்டியார்)

திதி: 10–10–98

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்த தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அன்னை இல்லம்,
வல்வெட்டி. (C/5124)

## கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட

இளவாலை

பேராசிரியர்

### கந்தையா பாலசுப்பிரமணியம்

அவர்களைப்

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

இளவாலை சித்திரமேழியில் பிறந்து வளர்ந்து—

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் கல்வி பயின்று —

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தாவரவியல் சிறப்புப் பட்டம் பெற்று அமெரிக்க இந்தியானாப் பல்கலைக்கழகத்தில் அதிவிசேட புலமைப்பரிசில் பெற்று —

உயிர் இரசாயனத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்று —

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீடத்திலும், கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவபீடத்திலும் இணைப் பேராசிரியராயும் - துணைத்தலைவராயும் பணியாற்றி —

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் பேராசிரியராயும் - துறைத்தலைவராயும் - பதில் உபவேந்தராயும் சேவைசெய்து 'விஞ்ஞானி' எனும் கௌரவப் பட்டமும் பெற்றுச் சிறந்து இளைப்பாறிய பின்னரும் — கௌரவ விஞ்ஞான கலாநிதிப் பட்டம் வழங்கப்பெற்று பிறந்த ஊரும் - நாடும் - உறவும் பெருமை பெறவைத்த —

கலாநிதி பாலசுப்பிரமணியம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

''ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி''

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கியமாகிய இவரும் —

''தற்காத்துத் தற்கொண்டாற்பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்னும் வாக்கிற்கு ஏற்ப வள்ளுவனுக்குவாய்த்த வாசுகி போன்ற இவரது துணைவியும் - அறிவறிந்த பிள்ளைகளும் எல்லா நலமும் பெற்று இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

சித்திரமேழி பழனியானந்தன் சபையினர்,
சித்திரமேழி ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையினர்,
மெய்கண்டான் ம. வி. கல்விச் சமூகத்தினர்.

இளவாலை. (59741)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### ஞானசிங்கம் அன்ரன் குணசேகரன்

(றாயு)

(சன் றைஹோடிங் ஸ்போட், யாழ்ப்பாணம்.)

மலர்வு: 05 - 09 - 1972

உதிர்வு: 10 - 09 - 1998

திங்களொன்று வந்ததம்மா! திருவிளக்காம் ஞானசிங்கம்
அன்ரன்குண சேகரனை அன்புறாயு புத்திரனை
எங்களது மனத்திருத்தி ஏக்கப் பெருமூச்செறிய
வன்செயலால் வலைவிரித்து வதைபல புரிந்துயிரை
அங்கிருக்க அனுப்பினரோ! ஆண்டவர்தம் சித்தமதோ!
அகத்தான் ஜெமேலாவும் அன்னைதந்தை சுற்றமதும்
இங்கிருந்து வேண்டுகின்றோம் ஈசனது பாதமதை
எங்களுக்காய் மன்றாட! இடர்நீங்க!! வாழ்வுபெற

அப்பா, அம்மா,
அன்பு மனைவி,
சகோதரர்.

53/3, மவுண்கார்மல் வீதி,
யாழ்ப்பாணம். (59772)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 26 – 07 - 1970

அநியாயத்தின் பிடியில் 10 – 09 – 1998

அமரர்

### கந்தையா விநாயகமூர்த்தி

(ஞானம்)

எங்கள் நண்பர்கள் அன்புடன் அழைக்கும்
ஞானம் நீயல்லவோ?
நீ பூத்து குலுங்கவில்லையடா
வாழ்வரிசி நாம் போடவில்லையடா
வாய்க்கு மண் நாம் போட்டுவிட்டோமடா
ஆலமரமாய் நீயிருந்தாய் அன்று
அங்கு அநேக(ம்) பறவை (உறவு)கள்
வந்து போயினவே
விழுதுகள் விட்டு நீயும் வளருமுன்
உன்னை வீதியிலே வீழ்த்திவிட்டார்கள்
கதிகலங்கி கதறினோமே நாங்கள் அன்று
நிலைகுலைந்து அலறியதே உந்தன் கூட்டம்
கதிகலங்கி நிற்கின்றோம் விநாயக (மூர்த்தி) மேல்
பாரம் போட்டு
மாதம் ஒன்று என்ன ஓராயிரம் தான் போனாலும்
என்றும் எம் துயர் ஆறாது! ஆறாது!

என்றும் உன்பிரிவால் துயருறும்
உன் நண்பர்கள்

டச்சு றோட்,
உடுவில். (59745)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவான இலக்கு இல்லாத போர் இது; மீள்பரிசீலனை செய்யும் காலம் வந்துவிட்டது

**வடக்கில் கிளிநொச்சியில் இராணுவ நிலைகள் மீது விடுதலைப் புலிகள் தொடுத்த பெருஞ் சமர் தொடர்பாக இந்தியாவில் வெளியாகும் 'இந்து' பத்திரிகையின் கடந்த 3 ஆம் திகதி பதிப்பில் வெளியாகியுள்ள ஆசிரிய தலையங்கம் இது;**

இலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கும் போரில் இன்னொரு கொடூரமான சண்டை வடக்கிலே இடம் பெற்றிருக்கிறது; ஆயுதப் படைகளுக்கு ஒரு பின்னடைவாக விடுதலைப்புலிகள் கிளிநொச்சியை மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருக்கும் அதே வேளை மாங்குளத்தைக் கைப்பற்றியதன் மூலம் இராணுவம் திருப்தி கண்டிருக்கிறது; இரு தரப்பிலும் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பலியாகியிருப்பதுடன் அப்பாவி குடிமக்கள் உட்பட எண்ணற்றவர்கள் காயமடைந்திருக்கிறார்கள்;

முன்னர் சில பின்னடைவுகளைச் சந்தித்ததால் புலிகளைப் பொறுத்தவரை கிளிநொச்சி சண்டை ஓர் 'இனிப்பான பழிவாங்கலாக' அமைந்திருக்கிறது.

1995 டிசம்பரில் தலைநகர் யாழ்ப்பாணத்தை இழந்த புலிகளுக்கு மீண்டும் கிளிநொச்சியைக் கைப்பற்றியமை பெருமைக்குரிய ஒரு விடயமாக இருக்கக்கூடும்; வவுனியாவையும் யாழ்ப்பாணத்தையும் இணைப்பதற்கு பாதையைத் திறப்பதே இலங்கைப் படைகளின் பிரதான இலக்குகளில் ஒன்றாக இருந்து வருகிறது; இதுவரை படையினர் இந்த இலக்கை அடைவதை புலிகள் வெற்றிகரமாக முறியடித்து வந்திருக்கிறார்கள்;

### இருதரப்புகளும் எதிர்நோக்கும் சிக்கல்

வடக்குக் கிழக்கில் தொடரும் இந்தப்போரில் பிரதான கவனம் பிராந்தியத்தின் மீதும் நிலைகளை வலுப்படுத்துவதற்கான கேந்திர முக்கியத்துவப் பகுதிகள் மீதுமானதாகவே இருக்கின்றது; கைப்பற்றிய பகுதிகளை நீண்டகாலத்துக்கு தங்கள் பிடியில் வைத்திருப்பதில் ஆயுதபடைகளும் விடுதலைப் புலிகளும் அடிக்கடி சிக்கலை எதிர்நோக்கிய வண்ணமே இருக்கின்றார்கள்;

தங்களால் தொடர்ந்தும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாத எந்தவொரு நகரில் இருந்தும் பகுதியில் இருந்தும் புலிகள் எளிதாக வாபஸ் பெற்றுவிடுகின்ற அதேவேளை இராணுவத்தினரால் கைப்பற்றபபட்ட பகுதிகளை தாங்கள் விரும்புகின்றபோது மீளக் கைப்பற்றுவதற்கான சண்டையைத் தொடக்கும் வழிமுறைகளையும் அவர்கள் அடிக்கடி கடைப்பிடிக்கிறார்கள்; ஊசச் செய்வதற்குப் புலிகள் பெரும் எண்ணிக்கையில் அலை அலையாக வரும்போதெல்லாம் ஆயுதப் படைகளினால் அத்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் போகிறது.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் அவரது இராணுவத் தலைமைத்துவமும் தங்களின் போர்த் தந்திரோபாயத்தை மீள்பரிசீலனை செய்வதற்கான சரியான தருணம் இதுவாக இருக்கலாம். இது காலவரை இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை இலங்கை அரசாங்கம் அரசியல், இராணுவ அணுகுமுறையொன்றையே கடைப்பிடித்து வந்திருக்கிறது. அரசியல் இணக்கத் தீர்வொன்று காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்ற அதேவேளை, புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தும் நோக்குடனும் [வடக்கு—கிழக்கில் முக்கிய பகுதிகளையும், கேந்திர முக்கியத்துவ நிலைகளையும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்காகவும் அரசாங்கம் போரைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது

### தெளிவான நோக்கு இல்லை

அடிப்படையில் நோக்குகையில் போரைப் பொறுத்தவரை தெளிவான இலக்கோ திசையோ இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் போர் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இன்னமும் இருக்கும் பகுதிகளை கைப்பற்றி புலிகளுடன் தொடர்ந்து சண்டையிடுவதற்காகவா? அல்லது புலிகளை முற்றாக அழித்தொழித்து விடலாம் என்று அரசாங்கம் நம்புகிறதா?

தெளிவான திசையொன்று இல்லாவிட்டால் 15 வருடங்களுக்கும் அதிகமான காலமாக நீடிக்கும் இந்தப்போரை எந்தவொரு இராணுவத்தாலும் வெற்றிகரமாகத் தொடர இயலாது.

ஒரு சில மாதங்களில் திடீர்த் தேர்தலொன்றை நடத்துவது குறித்து ஜனாதிபதி திருமதி குமாரதுங்கவும் அவரது அரசாங்கமும் சிந்தித்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் தமிழர் பிரச்சினை தொடர்பில் தெளிவான கொள்கையொன்று வகுக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது.

தமிழர்களுக்கான அதிகாரப்பரவலாக்கல் திட்டம் ஒன்றின் மூலமாக அரசியல் தீர்வொன்றைக் காண்பது தொடர்பில் இருதரப்புக் கருத்தொருமிப்பு Bipartisan Consensus) இல்லாத நிலையில் இந்த அழிவுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இலங்கை மக்களிடம் இருந்து தெட்டத்தெளிவான ஆணையொன்றைப் பெறுவதற்கேதுவாக பொதுஜன ஐக்கிய முன்னணி இந்தப் பிரச்சினைக்கான அதன் அணுகுமுறையில் உறுதியான நிலைப்பாடொன்றை எடுக்கவேண்டிய அவசியத்தேவை இருக்கிறது.

இலங்கைப் படைகளால் புலிகளை முற்றாக அழித்தொழிக்க முடியாமல் போகலாம் என்று இராணுவ அவதானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்: புலிகளுடன் பேசுவதற்கு இப்போதும் தயாராக இருப்பதாகவும், பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரமான அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பதில் நாட்டம் கொண்டிருப்பதாகவும் திருமதி குமாரதுங்க கூறியிருக்கிறார்;

### நம்பகத் தன்மை வேண்டும்

1994 இல் நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதித்தேர்தல்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றிபெற்றதையடுத்து திருமதி குமாரதுங்க ஆரம்பித்த பேச்சுவார்த்தைகளை விடுதலைப்புலிகளே முறித்துக் கொண்டனர்: எந்த வகையான மத்தியஸ்தத்தையும் இலங்கை அரசாங்கம் விரும்பாத அதே வேளை பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றைப் பெறுவதில் புலிகள் முனைப்புக் காட்டுகிறார்கள்;

வடக்கில் போர் தீவிரமடைந்திருக்கின்றபோது, போர் சம்பந்தமான செய்திகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் அரசாங்கத்தின் தணிக்கை எந்தப்பயனையும் தருவதாக இல்லை என்று தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இனநெருக்கடி போன்றசூழ்நிலைகளிலே அரசாங்கம் அதன் நடவடிக்கைகளுக்கு மக்களின் ஆதரவைப் பெற்று நம்பகத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும்: அடிப்படைத் தகவல்களை மக்கள் அறியமுடியாமல் செய்வதன் மூலம் இனநெருக்கடிக்கு நம்பகமான அணுகுமுறையொன்றை வகுப்பதில் அரசியல் ரீதியில் மக்களிடம் இருந்து கூடுதலான அளவுக்கு தனிமைப்படுத்தப்படும் நிலைமையையே அரசாங்கம் காணவேண்டியேற்படும்;

★

**IN LOVING MEMORY**
OF
**Rt. Rev. Dr. D. J. AMBALAVANAR**
Second Bishop of JDCSI

The Death of the Most Noblest Knights of Christ
Left a deep chasm in our hearts.
But the noble goal that guided his Pilgrimage
Shall inspire us to tread his path of
Love and Service.

Director, Staff & Students,
JCIT
Vaddukoddai.

(C/5130)

## புத்தக கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக் 10

தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கழகம் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்துடன் இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சியும் நூலக மேம்பாட்டு நிகழ்வும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் அகதிகள் புனர்வாழ்வு உபதலைவர் அ. நல்லதம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். பிற்பகல் 4மணிவரை புத்தகக் கண்காட்சி இடம்பெறும்.

(ஐ-8)

## உளவள நாள்

வலி. வடக்கு, ஒக். 10

சர்வதேச உளவள நாள் இன்று 10 ஆம் திகதி உலகெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது;

(ஐ-86)

## சிறுவர்தின விழா

யாழ்ப்பாணம், ஒக் 10

சஜமுகன் பாலர் பாடசாலை சிறுவர் தின விழாவும், பரிசளிப்பும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் செல்வி மகேஸ்வரி பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளது;

பிரதம விருந்தினராக வலி. கிழக்கு பிரதேசத் தலைவர் பூ. குணசிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக வலி. கிழக்கு பிரதேசசபை செயலர் செ. இகதாசன், [illegible] ஆகியோரும் கலந்து கொள்வர்;

(ஐ)

யா/வண் கிழக்கு
**அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில்**
நவக்கிரக ஹோமமும் பிரார்த்தனை வழிபாடுகளும்

வெகுதானிய வருடம் புரட்டாதி மாதம் 24 ஆம் நாள் (10–10–98) சனிக்கிழமை காலை 8–00 மணி முதல் நவக்கிரக பூசை ஹோமங்களுடன் ஆரம்பமாகி நண்பகல் 12–00 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்று பிரார்த்தனை வழிபாடுகளுடன் நிறைவு பெறும்.

அடியார்கள் தங்கள் கிரக தோஷங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டும், நாட்டின் நலன் கருதியும் நடைபெறும் இக் ஹோமங்களில் பங்கு பற்றி எம் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு பணிவுடன் வேண்டி நிற்கும்:

கோயில் நிர்வாகம்

அன்பளிப்பு:
**நியூ பிரியங்கா ஜுவலர்ஸ்**
177A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்;
(59781)

சாவகச்சேரி - சங்கத்தானை
**கந்தசுவாமி கோயில்**
**திருப்பணி விஞ்ஞாபனம்**

கந்தன் அடியார்களே!

கலியுகவரதனாம் கந்தப் பெருமானின் மேற்படி ஆலய ஸ்தம்ப மண்டபம், வசந்த மண்டபம் இணைத்தமைக்கும் திருப்பணி வேலைகள் இறையருளால் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்து நடைபெறுகின்றன;

இத்திருப்பணிகள் செம்மையாக நிறைவுபெற நிதியுதவி செய்ய விரும்பும் அடியார்கள் தங்கள் மனமுவந்த அன்பளிப்பை இவ்வாலய பரிபாலன சபைப் பொருளாளரிடம் செலுத்திச் சங்கத்தானைக் கந்தன் கருணை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

– ஆலய பரிபாலன சபை.

(59721)

**கண்ணீர் அஞ்சலி**

எமது சக ஊழியர்
திரு. சி. தவலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தையாரும்
குரும்பைகட்டி புலோலியைச் சேர்ந்தவருமான
**கிட்டினர் சிதம்பரப்பிள்ளை**
அவர்கள்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

08 - 10 - 98 இல் காலமானதையிட்டு அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்;

முகாமையாளர், ஊழியர்கள்.
இலங்கைவங்கி, சாவகச்சேரி.

(59779)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு

ஆண்டு ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் விரைவில் வெளிவர இருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பரீட்சைக்குப் பெயரே "பிரபல பாடசாலைகளில் மாணவரைச் சேர்ப்பதற்கும் புலமைப் பரிசில் வழங்குவதற்குமான பரீட்சை" என்பதுதான்.

அதாவது பிரபல பாடசாலைகளில் மாணவரை அனுமதிப்பதற்காகச் சகல ஆண்டு ஐந்து மாணவர்களுக்குமாகப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சை இது.

ஆனால் இந்தப் பரீட்சை முடிவு வெளிவருவதற்கு முன்னர் கூடா நாட்டில் சில பிரபல பாடசாலைகள் மாணவர்களைத் தரம் ஆறில் அனுமதிப்பதற்குத் தன்பாட்டில் தனிப்பட்ட பரீட்சைகளை நடத்தத் தயாராகி வருகின்றன.

கடந்த காலங்களில் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் தாமதமாகும் நிலை காணப்பட்டதால் — புதிய வகுப்புக்களை ஆரம்பிக்க ஏதுவாக — மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான மாணவர்களைத் தனிப்பட்ட பரீட்சைமூலம் தெரிவு செய்யக் கல்வித் திணைக்களம் அனுமதி வழங்கியிருந்தது.

ஆனால் இம்முறை புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேரத்துடன் வெளியாகும் சூழ்நிலை நிலவும்போது, அந்த முடிவு வரமுன்னர் தமது பரீட்சைகளை நடத்தி முடிக்கச் சில பிரபல பாடசாலைகள் முயற்சிப்பதாகத் தெரிகிறது.

அதுவும் முழுக்கமுழுக்க புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களை அனுமதிக்க வேண்டிய முன்னணிப் பாடசாலைகளும் இதில் விழுந்தடித்துக் கொண்டு வேகம் காட்டுவதுதான் விந்தையாக இருக்கிறது.

இத்தகைய தனிப்பட்ட பரீட்சையை நடத்துவதால் ஏற்படக்கூடிய சிக்கல்கள் இரண்டு.

ஒன்று — சில பிரபல பாடசாலைகளில் தனிப்பட்ட பரீட்சைகள் மூலம் தெரிவான மாணவர்களுக்கு அனுமதி கிடைக்க, பின்னர் வெளியாகும் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளில் சித்தியடைவோர் வெளியே நிற்க வேண்டி வரும்.

இரண்டு — தனிப்பட்ட பரீட்சையில் அனுமதி கிடைக்காத மாணவன் வேறு பாடசாலை ஒன்றில் "டொனேஷன்" கட்டிச் சேர்ந்த பின்னர் புலமைப் பரீட்சையில் சித்தி பெற்றால் பிரபல பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்படும். கட்டிய "டொனேஷன்" பணம் வீணானாலும் பிரபல பாடசாலைக்கு மாற்றம் பெறுவதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கிய பாடசாலை அதிபர் அனுமதிக்க மாட்டார். இது கடந்த வருடம் நாம் நேரில் கண்டது.

இக்குளறுபடிக்கு உரிய தீர்வைக் காண வேண்டிய பொறுப்பு வலயம் ஒன்றின் புதிய கல்விப்பணிப்பாளருக்கு உரியது. அவருக்கு இது சமர்ப்பணம்.

* * * * *

அண்மையில் நடந்த வல்லிபுர ஆழ்வார் தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாவுக்குச் சென்ற பக்தர் ஒருவர் விசனத்துடன் எழுதிய கடிதத்தின் சில பகுதிகள் இவை:-

பெருந் திரளாக வந்த பக்தர்கள் கோயிலில் செலவழித்த நேரத்தை விட, வடமராட்சி புகுமுக முகாம்களில் தற்காலிக பாஸைப் பெறவும், திரும்பி வரும்போது அதுவரை அடகு வைத்த அடையாள அட்டையை மீளப் பெறவும் செலவிட்ட நேரம் அதிகம் (சந்நிதி திருவிழாவின் போதும் இதே இழுபறிதான்!)

என்றாலும் நல்லூர் போலன்றி ஆழ்வார் கோவிலில் இளைஞர்கள் வம்புத் தனங்கள் குறைந்து சுமாராக இருந்தது. பக்தி சிரத்தை அதிகம் காணப்பட்டது.

படையினர் இன்றி இவ்வளவு காலமும் எப்படி இந்தத் திருவிழாவை நடத்தினார்களோ எனக் காண்பவர் வியக்குமளவுக்கு துருப்பினர் குவிக்கப்பட்டிருந்தனர். அவர்களால் பக்தர்கள் ஆள் ஆளாக கண்காணிக்கப்பட்டு வாகனங்கள் துருவித் துருவி பரிசோதிக்கப்பட்டு ஆழ்வாரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது — இது பக்த கோடிகளுக்கு பெரும் சிரமத்தையே கொடுத்தது.

இதனால் எதுவித குண்டுத் தாக்குதலும் இன்றி ஆழ்வார் தப்பித்துக் கொண்டார். அதற்காகப் படையினருக்கு நன்றி.

ஆலயத்தை அண்டிய வடமராட்சிப் பிரதேச முகாம்களில் அன்று சோதனைகளைத் தளர்த்துவதற்குப் பதிலாக — பெருந்திரளான மக்களைக் கண்ட குதூகலத்தில் படையினர் — துருவித்துருவி "ஸ்கானிங்" செய்து கொண்டனர். வழமையாக வெறிச்சோடிக் கிடக்கும் வீதிகளிலெல்லாம் பெருந்திரளாக வாகனங்களில் வந்தவர்கள் இறக்கிச் சோதிக்கப்பட்டனர்.

ஆலய வாயில் நெரிசலைக் கட்டுப்படுத்த முடியாமற் திண்டாடிய படையினர் கடுத்தமுகத்துடன் கைகளை ஓங்கியும் பயமுறுத்தல்களை மேற்கொண்டனர். அவர்கள் சூழலை அவதானித்து, உள்ளே புகாமல் விட்டிருந்தால்கூட சற்று இடநெருக்கடி தணிந்திருக்கும்.

உதவிக்கு நின்ற தொண்டர் படையினர்கூட — அரசபடையினரிடம் பயிற்சி பெற்றவர்கள்போல — கடுப்புடனே செயற்பட்டமை தமிழ்ச் சமூகம் செய்த மாதவம்தான். மண்ணின் மைந்தர்கள் அல்லவோ அவர்கள்! இவர்களெல்லாம் சீறிச்சினக்கும் அளவுக்கு மக்கள் முரண்டு பிடித்ததாகத் தெரியவில்லை.

கோயிலுக்கு வடக்குப் பக்கமிருந்து வரும் பாதையை ஒருவழிப்பாதையாக்கி இருந்தனர். அணி அணியாகவந்த வாகனங்கள் ஆள்களை இறக்கியபின் கோயில் வாசலுக்கு செல்லவும் அனுமதிக்கப்படவில்லை. இடநெருக்கடிகாரணமாம். திரும்பிச்செல்லவும் அனுமதிக்கப்படவில்லை. ஒருவழிப்பாதையாம்.

இதனால் பல மணி நேரம் வாகனங்களில் வந்தவர்கள் இடமிருந்தும் அடம்பிடிப்பால் திரும்பிச் செல்ல வழியின்றிப் பட்ட அவஸ்தை சொல்லிமாளாது. இதையிட்டு முறைப்பாடு செய்யப் போனால் முறைப்புத்தான் பதில். ஒருவழிப்பாதை என்றால் தடங்கல் இன்றி வாகனங்களைச் செல்ல அனுமதிக்க அல்லவா முடியும்? கோவிலுக்குப் போய் பூசை வாங்கிக் கட்ட பக்தர்கள் தயாரில்லை.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கப்போனால் வழிபடுவதற்குச் சுதந்திரம் இல்லை என்று கூறிவிடலாம். இனிவருங் காலங்களில் நிலைமைகள் திருந்துமா?

— இது அக்கடிதத்தின் சாரம். சம்பந்தப்பட்டோருக்கு இது சமர்ப்பணம்.

* * * * *

**யாழ்.** பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை "சுகமஞ்சரி" என்ற பெயரில் சமூக, சுகாதார சேவையாளர்களுக்கான காலாண்டு சஞ்சிகை ஒன்றை வெளியிட்டு வருகின்றது. மிகப் பயனுள்ள சஞ்சிகை அது.

அந்த சஞ்சிகையின் கடைசியாக வந்த இதழில் **Weekly Epidemiological Report** ஐ மேற்கோள்காட்டி — சாதாரண சுகப் பிரசவத்திற்கு உதவுபவை எனத் தெரிவித்து — ஏழு விடயங்களைக் குறிப்பிட்டுள்ளனர். அவற்றில் மூன்று விடயங்கள் வருமாறு:

★ பிரசவ நேரத்தில் தாய்க்கு உதவி செய்யவும், ஊக்குவிக்கவும், தாய்க்கு நெருங்கிய பெண் ஒருவரை அனுமதித்தல்/அருகில் இருத்தல்.

★ தாய்க்குரியதான சொந்த விடயங்களையும் கௌரவத்தையும் மதித்தல்.

★ தாய்க்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் வழங்கி சுகப்பிரசவத்துக்கு தாய் விரும்பும் நிலையை ஊக்குவித்தல்.

— இந்தத் தகவல்கள் யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கும், பிரசவ விடுதி பணியாளர்களுக்கும் சமர்ப்பணம்.

மேற்படி மூன்று விடயங்களிலும் முதல் விடயம் யாழ். ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரை நடைமுறைச் சாத்தியமற்றதாக இருக்கலாம்.

ஆனால் மற்றைய இரண்டு விவகாரங்கள் தொடர்பில் யாழ். ஆஸ்பத்திரியில் பிரசவம் முடித்துச் செல்லும் தாய்மாரில் அனேகமானோர் திருப்தி கொள்வதில்லை; நற்சான்றிதழ் தருவதில்லை.

புனிதமான மருத்துவத் தொழிலில் ஈடுபட்டிருப்போரிடமிருந்து இப்போதுள்ளதைக் காட்டிலும் மேலும் தயவு, தாட்சண்யம், கருணை, பரிவு, உபசரிப்பு ஆகியவற்றைச் சமூகம் உரிமையோடு எதிர்பார்க்கிறது.

* * * * *

**யாழ்.** பல்கலைக்கழகத்தில் 'ராகிங்' மீண்டும் சூடு பிடித்திருப்பதாகத் தகவல். நிலைமை எல்லை மீறாமல் கட்டுக்குள் கொண்டு வரச் செய்வது யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தின் கடமை.

கடந்த வருடம் போலல்லாது இம்முறை நிர்வாகத்துக்கு மேலும் வலுவூட்டப்பட்டிருக்கின்றது. 'ராகிங்'கிற்கு எதிரான புதிய சட்டம் என்ற "ஆயுதம்" தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதை நிர்வாகம் மறந்து விடக்கூடாது; மாணவர்களும் அதனைப் புரிந்து கொள்ளத் தவறக்கூடாது.

அந்த ஆயுதத்தை நிர்வாகம் பயன்படுத்த வேண்டிய நிலையை ஏற்படுத்தாமல் பார்ப்பது மாணவர்களின் பொறுப்பு.

நிலைமை மேலும் மோசமாகும் போது தவறிழைக்கும் மாணவர்கள் மீது நிர்வாகம் குற்றஞ் சாட்டும்; நிர்வாகம் மீது சமூகம் குற்றம் சுமத்தும்.

சமூகம் தலையிட வேண்டிய நிலையை உருவாக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்பதுதான் மக்களின் விருப்பம்.

— மின்னல்

## கிளிநொச்சியில் மிதிவெடி

வவுனியா, ஒக். 10

கிளிநொச்சிப்பகுதியில் வீடு பார்க்கச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்கி வலது காலை இழந்தார்.

கடந்த புதனன்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கா. றூபன் என்பவரே காலை இழந்தவர் ஆவார்.

(இ-3-164)

## காந்தி சிலை திறப்பு

வடமராட்சி, ஒக் 10

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மகாத்மாகாந்தி சிலை கடந்தவாரம் திறந்து வைக்கப்பட்டது.

75 ஆயிரம் ரூபா செலவில் பருத்தித்துறை நகரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட இச்சிலையை பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வி. விஜயரத்தினம் திறந்து வைத்தார்.

பருத்தித்துறைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் விக்கினேஸ்வரமூர்த்தி மங்கள விளக்கேற்றி வைத்தார். நகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மகாத்மா காந்தி சிலைக்கு மலர்மாலை அணிவித்தனர்.

நகர வர்த்தகர்கள், அரச திணைக்கள ஊழியர்கள் உட்பட பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

(ஐ. 173)

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

வடமராட்சி, ஒக். 10

துன்னாலைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது, குறிப்பாக காலையிலும் பிற்பகலிலும் பாடசாலைகளுக்குச் சென்று வரும் சிறுவர் சிறுமியர்களை கட்டாக்காலி நாய்கள் பெரிதும் தொல்லைப்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-173)

## மொரட்டுவ செல்லும் மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 10

மொரட்டுவ பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் தொழில் நுட்ப தேசிய டிப்ளோமா பரீட்சைக்குத் தோற்ற தெரிவு செய்யப்பட்டு அனுமதிவழங்கப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எட்டுப் பேரையும் அவர்களது பயண ஏற்பாடு தொடர்பாக கலந்துரையாடுவதற்காக இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு தமது அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு யாழ். வலயம்-1 கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இம் மாணவர்களின் பெயர் விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தன.

(ஐ)

## அரச காணிகளை இனங்கண்டு தேர்தல் தொகுதிகள் தோறும் 100 வீடுகளை அமைக்கத் திட்டம்

வலி.மேற்கு, ஒக். 10

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் 100 வீடுகளை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல தேர்தல் தொகுதிகளிலும், பிரதேச செயலகங்களின் உதவியுடன் முடிக்குரிய அரச காணிகளைக் கண்டறிந்து 100 வீடுகளைக் கட்டி வீடுகள் இல்லாதவர்களுக்கு வழங்குவதற்கு யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் திட்டமிட்டுள்ளனர்.

தற்போது பிரதேச செயலர்களை அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முடிக்குரிய காணிகளை இனங்கண்டு விவரம் தருமாறு கோரப்பட்டுள்ளது.

(ஐ-175)


## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
திரு. ம. விஜயரட்ணம்
அவர்களின் அன்புத் துணைவியார்
திருமதி
பரமேஸ்வரி விஜயரட்ணம்
அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோட்டக் கல்வி அதிகாரி,
அலுவலர்கள், ஊழியர்கள்,
கோட்டக்கல்வி அலுவலகம்
வேலணை/ ஊர்காவற்றுறை.

(59792)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ இளவாலை

# கன்னியர்மடம் மகா வித்தியாலயம்

# நூற்றாண்டு விழா

எமது பாடசாலையின் நூற்றாண்டு விழா நாளை 11-10-1998 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணிக்குப் புனித அன்னாள் ஆலயத்தில் நன்றித் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து பாடசாலைத் திறந்த வெளியரங்கில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்களால் நூற்றாண்டு விழா மலர் வெளியீடும் சிறப்பு நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன. இம் மங்கல நிகழ்வில எமது பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(59801)


# படை நடவடிக்கையில் பங்குபற்றாத அதிகாரிகளுக்கும் வீரப்பதக்கங்கள்

கொழும்பு, ஒக். 10

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளின் போது தங்கள் உயிரைத்துச்சமென மதித்துப் போராடிய முப்படைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் படையினருக்கும் ஜனாதிபதியால்வழங்கப்படும் வீரப்பதக்கங்களுக்கு இராணுவத் தளபதி உட்பட இராணுவ நடவடிக்கைகளில் பங்குபற்றாத இராணுவ அதிகாரிகளும் தகுதிபெற்றுள்ளனர் எனத் தெரியவருகிறது.

1995–96 ஆம் ஆண்டுகளுக்கான பதக்கம் வழங்கும் வைபவம் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்த வைபவத்தில் பதக்கம் வழங்கப்படவிருக்கும் அதிகாரிகளுள் பலர் இறந்துள்ளனர்; அல்லது காயமடைந்துள்ளனர். ஆனால் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான்தளுவத்த, ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த கப்டன் டி. சி. எஸ். முனசிங்கா ஆகியோருக்கு 'வீர விபீஷண' பதக்கம் வழங்கப்படவுள்ளது. இந்தப் பதக்கம் வழங்கப்படவுள்ள ஏனைய நால்வரும் யுத்தத்தின்போது இறந்துள்ளனர்.

முல்லைத்தீவுத் தாக்குதலின்போது கொழும்பில் தங்கியிருந்த அதிகாரிகளுக்கும் 'வீர விக்கிரம', 'வீர சூர' பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

கடற்படை மற்றும் விமானப்படைகளைப் பொறுத்தவரையில் இறந்த அல்லது காயமடைந்தோரே இந்தப் பதக்கங்களைப்பெறத் தகுதி பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)


# மலிவு விற்பனை

பெண்கள் சிறுவர்கள் ஆடைகள்
தீபாவளித் திருநாளை முன்னிட்டு
10-10-98 முதல் 19-10-98 வரை
எமது ஸ்தாபனத்தில் மலிவு விற்பனை

இனுவை
**கனகதயாபரன் களஞ்சியம்**
64, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(59811)



# 31 ஆம் நாள் நினைவு

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்"
வெளி. 14: 13

தோற்றம்
26 – 07 – 1970



மறைவு
10 – 09 – 1998

அமரர்
**கந்தையா விநாயகமூர்த்தி**
(ஞானம்)

சாவற்றோர் பூரிக்கும் தேசத்தில்
சந்திப்போம், பாடுவோம், ஆடுவோம்...
துக்கம் நோவழிந்த ஸ்தலத்தில்
சேமமாய் நாம் இளைப்பாறுவோம்
அங்கே நம் இரட்சகர் என்றென்றும்
ஆளுமை செய்து வீற்றிருப்பார்
துக்கம், நோ, சாவுகள் நீங்கிடும்
தேவன் என் கண்ணீரைத் துடைப்பார்.

மனைவி.

உடுவில்.

ஆதி உறவுமின்றி
பாதி வழியினில் ஒன்றாகி
மீதிப் பயணத்தில் தனியாகி
நாதியற்றவராய் எமையாக்கி
ஜோதியுடன் கலந்தவனே!
பேதினியில் உன்நினைவுடனே வாழ்ந்திடுவோம்.

– குடும்பத்தினர்

No: 15, மெமோறியல் லேன்,
மானிப்பாய்.

(59785)


## இணைந்து செயற்பட அங்கீகாரம்

சர்வதேச ரீதியில் பல நிலைகளில் பொதுக் கணனிப் பரீட்சைகளை நடத்தும் பிரித்தானிய நிறுவனமான ஐ. எம். ஐ. எஸ். (I.M.I.S.) ஸ்தாபனத்துடன் இணைந்து செயற்படுவதற்கான அங்கீகாரம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த "இன்ஸ்ரிடியூட் ஒவ் இன்போமற்றிக் ஸ்ரடீஸ்" (I.I.S.) கல்வி நிறுவனத்துக்குக் கிடைத்துள்ளது.

சர்வதேசரீதியில் அங்கீகாரம் கிடைத்திருப்பதால், பிரித்தானிய நிறுவனத்தின் அனுசரணையுடன் டிப்ளோமா, உயர் டிப்ளோமா, பட்டத்துக்குரிய டிப்ளோமா பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்து அவர்கள் ஐ.எம்.ஐ.எஸ். நிறுவனத்தின சான்றிதழ்களைப் பெற வசதி செய்யும் வாய்ப்பு "இன்ஸ்ரிடியூட் ஒவ் இன்போமற்றிக் ஸ்ரடீஸ்" ஸ்தாபனத்துக்குக் கிடைத்துள்ளது. (அ)


உ
சிவமயம்

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின்
# முதலாவது பட்டமளிப்பும் கலைஞர், அறிஞர் கௌரவிப்பு விழாவும்

இடம்:
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

காலம்:
11 10 1998 ஞாயிறு காலை 9.00 மணி

தலைவர்:
அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள்

பிரதம விருந்தினர்கள்:
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(துணை வேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள்
(யாழ். மாவட்ட நீதிபதி)

'இந்து தர்மம்'
வெளியீட்டுரை:
பேராசிரியர் ப. கோபாலகிருஸ்ண ஐயர் அவர்கள்
(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

பாராட்டுரை:
திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள்
(துணைத் தலைவர், இந்து சமயப் பேரவை)

இந்து சமயக் குருமார்கள், பேரவை உறுப்பினர்கள், இந்து ஆலய அறங்காவலர்கள், இந்து சமய அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சீ சக்திகிரீவன்
கௌரவ செயலாளர்
7-10-98

சீ. விநாசித்தம்பி
தலைவர்

(சி/5135)



# பண்டிகைக்கால விசேட விலைத் தள்ளுபடிகள்!

தீபாவளி தினுசுகளைத் தேர்ந்தெடுக்க யாழ். நகரில்
'சிவகணேசன்' புடைவையகம் தேடிவாரீர்!
பெரியகடை வீதியிலே பிரியமுள்ள புடைவையகம்
பெறுமதியான துணிவகைகள் மலிந்த கூடம்
அரிய திறம் சாறிகளும் ஆடவர், நங்கையர் உடைவகையும்
அற்புதம் பொங்கும் ஜவுளிகள் உறையுமிடம்
பிரியமுடன் வருக! யாவும் பெறலாம் மலிவாய்!

**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்**

41, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(59813)



யாழ். மக்களுக்கொரு மகிழ்ச்சிகரமான நற்செய்தி!

யாழ். மக்களின் எண்ணற்ற வாடிக்கையாளரின் நன்மதிப்பைப் பெற்ற
**நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல் 30ஆவது ஆண்டு நிறைவையொட்டி**
**தீபாவளிப் பண்டிகைக்கான மலிவு விற்பனை**
10-10-98 தொடக்கம் 20-10-98 வரை நடைபெறுகின்றது என்பதை அன்பான வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

# நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்

இல. 58(23), பெரியகடை, யாழ்ப்பாணம்

(59796)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்)
கிடைத்த தகவல்களை வெளியிட்டார்.

பின்வருவனவற்றை அரசுப் படைகள் அங்கு இழந்ததாக அவர் தெரிவித்தார்.

★ 122 மி. மீ. பீரங்கிகள் — 04
★ ரி-55 யுத்த டாங்கி — 02
★ பவள் கவசவாகனங்கள் — 08
★ ஜீப், டிரக், டிராக்டர்கள் — 75
★ கவச வாகனங்கள் — பல
★ சிறியரக ஆயுதங்கள் — 2,500
★ பீரங்கி ஷெல்கள் — 1,000
★ துப்பாக்கி ரவைகள் — இருபது லட்சத்துக்கு மேல்

அவசரகால சட்ட மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் ரணில் கூறியதாவது:-

கிளிநொச்சி நகர இழப்பு நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய இராணுவத் தோல்வியாகும்.

சீரான யுத்த உபாயம் இல்லாமை, போதிய ஆள்பலம் இல்லாமை, விடுதலைப் புலிகளின் ஆள்பலத்தைக் குறைவாக மதிப்பிட்டமை ஆகியனவே இந்தத் தோல்விக்குக் காரணம்.

அனுபவம் உள்ள இராணுவ தளபதிகளின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் புறக்கணித்து அரசியல் திட்டத்துக்கமைய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதன் விளைவாக கடந்த 94 ஆம் ஆண்டு முதல் 11 ஆயிரத்து 548 படையினரை இழந்துள்ளோம். 23 ஆயிரத்து 37 பேர் காயம் அடைந்துள்ளனர்.

இந்த நிலையைக் கருத்தில் கொண்டு அனுபவம் உள்ள இராணுவத் தளபதிகளிடம் இராணுவ நடவடிக்கையை ஒப்படைக்க வேண்டும்.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது வவுனியா—கிளிநொச்சிப் பாதையைப் பிடிப்பதும் புலிகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்துவதும் என்று தெரிவிக்கப்பட்டது. 12 மாதங்களுக்குப் பின்னும் நடந்தது என்ன?

கிளிநொச்சியை இழந்தோம். அத்துடன் யாழ். குடாநாட்டைச் சங்கிலி போன்று சுற்றி நின்று புலிகளால் தாக்க முடிந்துள்ளது. இது மிகப் பயங்கரமான நிலைமையாகும்.

இத்தகைய திருப்தியற்ற நிலை இருக்கும்போது நாடாளுமன்றத்தையும், மக்களையும் அரசாங்கம் வழி தவறி நடத்தி அரசியல் லாபம் பெறுகிறது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் 192 படையினர் கிளிநொச்சியில் இறந்ததாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். ஆனால் பின்னர் விடுக்கப்பட்ட இராணுவ அறிக்கையில் 632 படையினர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்று சபையில் 186 பேரே இறந்ததாக அரசு தரப்பில் கூறப்பட்டது.

இந்தச் சபைமீது நம்பிக்கை வைத்து உண்மை நிலையை வெளியிட வேண்டும்.

இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர பொறுப்புடன் உண்மை நிலையை அரசு வெளியிட வேண்டும்.

அரசாங்கம் விசுவாசமாக நடக்குமானால் அரசின் தீர்வு யோசனைக்கு ஆதரவுவழங்குவது குறித்து பரிசீலிக்க நாம் தயார்.

பத்திரிகைத் தணிக்கை காரணமாக உண்மை நிலை வெளிவருவது தடுக்கப்படுகிறது. ஆகவே பத்திரிகைத் தணிக்கை நீக்கப்பட வேண்டும்.

இராணுவ நடவடிக்கை காரணமாக உயிர்கள் பலியாவது போதும் இப்பொழுதாவது யுத்த நடவடிக்கையில் அனுபவம் உள்ள தளபதிகளிடம் யுத்தத்தை ஒப்படைத்து அவர்கள் ஆலோசனைப்படி நடவுங்கள்— இப்படி அவர் மேலும் கூறினார். (உ-3-ரீ)

---

### புலமைப்பரிசில்...

(முதலாம் பக்கத் தொடர்)
வர்களின் விவரங்கள் போன்றவை நாளைய உதயனில் பிரசுரிக்கக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பரீட்சை முடிவுகள் அறிவிக்கப்படுவது பற்றிய தகவல் வெளியாக முன்னர் எழுதப்பட்ட தகவல் 'அதிரடி அரங்கு' பகுதியில் பிரசுரமாகியுள்ளது. (உ)

---

### ராகிங்...

(முதலாம் பக்கத் தொடர்)
அனுமதியின்றி புதிய மாணவர்களிடமிருந்து மாணவர் அமைப்புக்கள் பணம் சேகரிக்கக் கூடாதெனவும்—

ராகிங்கை பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் தடை செய்வதற்கு சிரேஷ்ட மாணவர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும் எனவும் அவர் அச்சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார். (உ-6-9-7)

---

### ஊரடங்கு..

(முதலாம் பக்கத் தொடர்)
மாட வேண்டாம் எனவும் —

பொதுமக்கள் சட்டத்தைக் கடைப்பிடித்து அமைதியை நிலைநாட்ட ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும்—

பலாலி இராணுவத் தலைமையகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் கோரியுள்ளது. (உ)

---

### தப்பி ஓடிய...

(முதலாம்பக்கத் தொடர்)
இத்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

---

### ஐ. தே. க. காலத்தில்

# புலிகளுக்கு ஆயுதம்; விசாரிக்க ஆணைக்குழு

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தின் போது விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் பணம் தொடர்பாக விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கேட்டுள்ளனர்.

இதுதொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

# கிளிநொச்சி குறித்தும் அமெ. பிரதிநிதி பேசுவார்

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் சிறிலங்கா, இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஹரி உஸ்றே சிறிலங்கா அரசின் உயர்மட்டத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள இவ்வார இறுதியில் சிறிலங்கா வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் தமது விஜயத்தின் போது கிளிநொச்சித் தாக்குதல் குறித்தும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வார் எனவும்—

இங்கிருக்கும் காலத்தில் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், நீதி அரசமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசாங்க உயர் மட்டத் தலைவர்களுடன் பேச்சுக்களை மேற்கொள்வார் எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

---

### கிளிநொச்சி..

(முதலாம் பக்கத் தொடர்)
27 ஆம் திகதி அதிகாலை கிளிநொச்சி முன்னணிக் காவலரண்கள் மீது பெருந்தாக்குதலை நடத்தி கணிசமான இழப்பை ஏற்படுத்தினார்கள்.

மாங்குளம் நடவடிக்கையில் இருந்து எமது கவனத்தைத் திசை திருப்புவது புலிகளின் இத்தாக்குதல் நோக்கங்களில் ஒன்று.

மாங்குளம் தாக்குதலுக்கு தயாராக வைத்திருந்தபடையினரைக் கொண்டு கிளிநொச்சியைக் காப்பாற்றுவதா அல்லது திட்டமிட்டபடி மாங்குளம் மீதான நடவடிக்கையை நடத்துவதா என்ற முக்கிய தந்திரோபாய முடிவை இராணுவம் இக்கட்டத்தில் எடுக்க வேண்டி ஏற்பட்டது.

விரைவாகச் செய்யப்பட்ட மதிப்பீடுகளை அடுத்து கிளிநொச்சிக்கு துருப்புக்களை நகர்த்துவதில்லை எனவும்—

மாங்குளம் நகர்வை திட்டமிட்டபடி மேற்கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சியில் மிகத்தீவிரமாகப் போரிட்ட படையினர் தமது முன்னணி நிலைகளை மறு ஒழுங்கு செய்யும்படி பணிக்கப்பட்டனர். இதனால் படையினரிடம்இருந்த நாலரைக் கிலோ மீற்றர் நீளமான வீதிப்பகுதி புலிகளின் கைகளில் வீழ்ந்தது. இது ஒரு தற்காலிக நிலையே.

கிளிநொச்சிச் சமரில் 186 படையினர் உயிரிழந்தனர். 426 படையினர் காயமுற்றனர்; 789 பேர் காணாமற் போயினர். படையினரால் 717 புலிகள் கொல்லப்பட்டனர்; 1100 புலிகள் காயமடைந்தனர்.

இழப்புக்களை சதவீதத்தில் அளவிட்டால் உயிரிழந்த மற்றும் பலியான படையினரின் வீதம் மொத்தப்படையினரின் எண்ணிக்கையில் 0.9 வீதம் மட்டுமே. காயமடைந்த படையினர் 1.3 வீதம். புலிகள் தரப்பில 33 வீதமான உறுப்பினர் உயிரிழந்தனர்; 20 வீதமானோர் காயமடைந்தனர்.

அடுத்த 48 மணி நேரத்தில் பெரிய இழப்புக்கள் இன்றி மாங்குளத்தைத் திட்டமிட்டபடி கைப்பற்றினர். 11 கிலோ மீற்றர் முன்னேறிய எமது படைகள் 227 புலிகளைக் கொன்றனர்; 369 புலிகள் காயமுற்றனர்.

கிளிநொச்சிக்கு மேலதிகத் துருப்புக்களை அனுப்புவதில்லை என எடுக்கப்பட்ட சாதுரியமான முடிவால் கிளிநொச்சியில் இழந்தது போன்று மூன்று மடங்கான வீதியை படையினர் மாங்குளத்தில் பிடித்தனர்.

1994 இல் வடக்கில் 171 சதுர கிலோ மீற்றர் நிலமே அரசப் படைகளிடம் இருந்தது; 7 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பிரபாகரன் கைகளில் இருந்தன. கடந்த மூன்று வருடங்களில் நாம் நிலைமையை தலைகீழாக்கி இருக்கின்றோம்.

பயங்கரவாதப் பிரச்சினையை இராணுவ ரீதியில் தீர்ப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணிலின் ஐ. தே. க. அரசு கொண்டிருந்த தேசிய கொள்கை மற்றும் யுத்த தந்திரங்களைப் பகிரங்கப்படுத்துமாறு நான் அவருக்கு சவால் விடுகின்றேன்—என்று தெரிவித்தார். (உ-7)

---

## செம்மணிப் புதைகுழி...

(முதலாம் பக்கத் தொடர்)
தும் ஆணைக்குழு அந்த எதிரியை விசாரணை செய்து வாக்கு மூலத்தைப் பதிவு செய்தது.

2) வாக்கு மூலத்தைப் பரிசீலித்த ஆணைக்குழு குற்றச்சாட்டுக்கள் குறித்து மேல் விசாரணை தேவை என முடிவு செய்தது.

3) அதைத் தொடர்ந்து சர்வதேச தரத்துக்கும் நடைமுறைக்கும் ஏற்ப புதைகுழிகளைத் தோண்டுவதற்காக சர்வதேச சட்ட வைத்திய நிபுணர்களைத் தந்துதவ முடியுமா என ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகளுக்கான ஐ. நா. தூதரை ஆணைக்குழு கடிதம் மூலம் கேட்டது.

4) அதற்கு உதவ முன்வந்த ஐ. நா. அவற்றைச் செயற்படுத்துவதற்குச் சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என ஆணைக்குழுவுக்குப் பதில் அளித்தது. இந்த விடயத்தை அரசுக்குத் தெரியப்படுத்திய பின்னர் அரசின் பதிலை ஆணைக்குழு எதிர்பார்த்திருக்கின்றது.

5) மேஜர் ஜெனரல் பலகல்லவுடனும் ஆணைக்குழு தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட பாரிய புதைகுழிப் பிரதேசத்துக்கு தேவையான பாதுகாப்பை வழங்குமாறு எழுத்து மூலம் கேட்டுக் கொண்டது.

6) இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துவதற்குப் பொலீஸாரும் சட்டமா அதிபர் திணைக்களமும் எடுத்த நடவடிக்கைகள் குறித்து அறிவதற்குச் சட்டமா அதிபருடன் ஆணைக்குழு பின்னர் [illegible] இவ்வாணைக்குழு பக்கச்சார்பற்ற விசாரணை நடத்துவதற்குத் தன்னாலியன்ற அனைத்து நடவடிக்கைகளையும் உறுதி செய்யும் என்பதைத் தங்கள் கவனத்துக்குத் தெரியப்படுத்துகிறேன்.

என்றாலும் கிரிமினல் குற்றம் போன்ற இத்தகைய குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கும் பொறுப்பு அடிப்படையில் நாட்டின் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் அமைப்புகளையே சார்ந்தது. அத்தகைய அமைப்புகளே சட்டரீதியாக அவற்றைச் செய்யக் கடப்பாடு உடையவை என்பதோடு அதற்கான மூலவளமும் அவற்றிடமே உண்டு.

புதைகுழி தோண்டப்பட்ட பின்னர் ஏதேனும் எச்சங்கள் இருந்தால் அவை காணாமல் போன யாரேனும் நபர்களினுடையவையா என்பது தாமதமின்றி அடையாளம் காணப்படவேண்டும்.

புதைகுழி தோண்டப்பட்ட பின்னர் மேலும் தாமதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக — இத்தகைய தகவல்களை முன்னரே சேகரிப்பதற்காக — ஆணைக்குழுவின் உறுப்பினர் ரி. சுந்தரலிங்கம் இவ்வாரம் யாழ்ப்பாணம் வரவிருந்தார்.

ஆனால் விமானப் பயணம் தடைப்பட்டதால் தமது பயணத்தை அவர் ஒத்திவைக்க வேண்டியதாயிற்று.

மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளின் அடிப்படையில் நீதியான — நியாயமான — விசாரணை நடைபெறுவதற்கு பயமோ, பக்கச் சார்போ இன்றி ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என்று உறுதி கூறுகின்றோம். (உ-5)

SALE! SALE!!
இதோ!
(முந்துங்கள்)
உள்ளம் துள்ளும் தீபாவளிப் பரிசு!
மகாநதி வழங்கும்
மாபெரும் சிறப்புத் தள்ளுபடி
இத்தள்ளுபடி 19-10-98 வரை மட்டுமே!
நதிகளின் சங்கமம் கடலில்
சகலவித புடைவைகளின் சங்கமம்
மகாநதியில்
புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்
தீபாவளிப் புடைவைகளுக்கு
ஆம்
மகாநதி
புடைவை அகம்
முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு
கைராசியான நிறுவனம்
16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
4, நவீன சந்தை சாவகச்சேரி.
சாறி பிளவுஸ் பீஸ் துணிவகைகளுக்கு
பிரத்தியேக காட்சி அறைகள்
16, நவீன சந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம்,
IKUF நவீன சந்தை, (மேல் மாடி) சாவகச்சேரி.
(சி/5136)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-10-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சஞ்சீவி

சஞ்சிகை

10 – 10 – 1998 சஞ்சீவி



றெனி மூக்குக்கண்ணாடி அகம்



உங்கள் கண்களைச் சரியாகப் பரிசோதித்து கண்ணாடிகளை உடன் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்:

றெனி மூக்குக் கண்ணாடி அகம்

இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.

பிரதேச செயலகம் முன்பாக, கண்டிவீதி, சாவகச்சேரி.

(சி–5093)


## கருத்துக் கலசம்

மயூரா

### பொறுப்புணர்க!

எமது மண் போரினால் சிதைந்து போயுள்ளது. மண்ணைப் போலவே மக்களின் வாழ்க்கையும் பல வகைகளாலும் சுக்குநூறாகி இருக்கிறது. இவை இரண்டையும் பழைய சீர்பெறு நிலைக்குக் கட்டி எழுப்பியாக வேண்டும்.

மக்களின் அன்றாட வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டது — பின்னிப் பிணைந்தது — புனர்வாழ்வு. மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் பணிகள் சிலவாகவும் சிறிதாகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை வீச்சாகவும் வேகமாகவும் இயற்றப்பட வேண்டியவை.

புனர்வாழ்வுப் பணிகளில் பல வகை சார்ந்தவற்றை குடாநாட்டில் இயங்கும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன.

நிதி, பொருள், தொழில் நுட்பம் ஆகியவற்றைத் தாம் வழங்கினாலும், உடலுழைப்புச் சம்பந்தப்பட்ட பணிகளையேனும் வேலைகளையாவது, சிரமதான அடிப்படையில் மக்களே செய்ய வேண்டும் என்று தொண்டர் நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. அவற்றின் எதிர்பார்ப்பு முற்றிலும் நியாயமானது.

எமக்குரிய தேவைகளை நிறைவேற்றுவதும் பணிகளைச் செய்வதும் எங்களுடைய பொறுப்பு. அந்தப் பொறுப்பில் இருந்து நீங்கிக் கொள்வது, தூர நிற்பது, தவிர்த்துக் கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. எங்களது பொறுப்புக்களை மற்றவர் மீது சுமத்துவதோ எங்களுக்குரிய பணிகளில் நாம் பங்காளிகளாக அன்றி, வெறும் பார்வையாளராக இருந்து கொண்டு நல்ல பெறுபேறுகளை எதிர்பார்ப்பதோ எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

ஆனால் இத்தனை சோதனைகள் வேதனைகளின் பின்னரும், எங்கள் மக்கள் தமது பொறுப்பையும் பணிகளையும் உணர்ந்ததாக இல்லை. தாம் வெறும் பார்வையாளராக இருந்து கொண்டே மற்றவர்களின் உதவிகளையும் உழைப்பையும் பெற்று பயனாளிகளாகிப் பயனடைய நினைக்கிறார்கள்! இது வெட்கத்துக்குரிய நிலை. நாம் கடும் உழைப்பாளிகள், முயற்சி உடையவர்கள் என்று பெருமை பேசுவது இதன் பின்னர் எவ்வாறு பொருத்தம்?

சமூகத்துக்கு தாம் ஆற்றும் பணியும், பங்கும் தமக்கும் நன்மை செய்கிறது, பயன் தருகிறது என்பதனை ஒவ்வொருவரும் உணர்வது அவசியம். தனக்கு உதவி தனது கையே என்பதனை மறந்துவிடலாமா?

சமூகப் பணிகளில் தமக்கு உள்ள பொறுப்பையும் பங்கையும் உணர்ந்து, முழு மனதோடு உழைப்பதற்கு எம்மவர் முன்வராதவரை எமது பிரதேசத்தின் புனர்வாழ்வு வேகமாகவும் சிறப்பாகவும் நிறைவேறும் சாத்தியமில்லை; மக்கள் வாழ்வு வளமடையும் வாய்ப்பும் இல்லை. இதனை அனைவரும் உணர்வது எப்போதோ...?

# புதைகுழியில் சடலங்கள் அடையும் மாற்றங்கள்

1996இல் காணாமற் போன பல நூற்றுக் கணக்கான வடபகுதித் தமிழர்கள் செம்மணியில் புதைக்கப்பட்டிருப்பதாக வெளியான தகவல்களை அடுத்து அந்த மனிதப் புதைகுழியைத் தோண்டுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தற்போது வலுவடைந்து வருகின்றன.

புதைகுழியில்புதைக்கப்பட்ட சடலங்களுக்கு என்ன நடக்கும்? அவற்றின் எச்சங்களை வைத்துக் கொண்டு சடலத்துக்குரியவரை அடையாளங் காணலாமா? என்பதை ஆராய்கிறது இக் கட்டுரை.

### உடம்பு அழுகும் நிலை புதைகுழியில்

புதைகுழியில் உள்ள இறந்த மனிதனின் சடலங்களும் ஏனைய மிருகங்கள், தாவரங்கள் அடையும் மாற்றங்கள் போல், பல்வேறு விதமான மாற்றங்கள் அடையும் தன்மை வாய்ந்தன. குறிப்பாக, இரசாயன—நொதிய தாக்கங்கள் மூலமாகவும், பக்றீரியா, பங்கசு போன்றவற்றினால் ஏற்படும் தாக்கங்கள் மூலமாகவும். நிலத்தில் வாழும் சிறுசிறு ஜந்துக்களுக்கு உணவாகுவதன் மூலமாகவும் உடல்கள் முன் இருந்த நிலை மாறி உருக்குலைந்து அடையாளங் காண்முடியாத நிலை ஏற்படும்.

இத்துடன்உடல்கள் அழுகி, இளையங்கள்நீராகமா றிசீரழிந்து உருமாற்றமடையும்; இரைப்பையில் உள்ள நுண்ணங்கிகள் பல்கிப் பெருகுவதால் அவ்வுடல்கள் மாற்றமடையும்; தோல் தானாகவே உரிந்து நீர்ப்பதார்த்தங்களை வெளியேற்றும்; கடினமான சில பகுதிகளைத் தவிர்ந்த உள் உடல், வெளி உடல் ஆகியன காலகதியில் அழிந்து போய்விடும்.

### நீர் உள்ள இடத்தில் உடம்பு அழுகும் நிலை

நீர்ப்பிடிப்பு உள்ள இடங்களில் புதைக்கப்பட்ட உடல்கள், உஷ்ணமான நிலத்தில் புதைக்கப்பட்ட உடல்களிலும் பார்க்க அதிவிரைவாக —அதாவது 2 முதல் 4 மடங்கு வேகத்தில் உருக்குலைந்து போகும். நீர் இருக்கும் இடத்தில், அல்லது நீர் இருக்கும் இடத்துக்கு அருகில், அல்லது மழை நீர் தங்கியுள்ள இடங்களில் புதைக்கப்பட்ட உடல்கள் அதிவிரைவில் உருக்குலைந்து போவதற்கு ஏதுவாகும். பெட்டியில் இட்டு புதைகுழியில் இடப்படின் உடல்கள் மிக மந்தகதியில் அழுகும். நீர் அதற்குள் புக நேர்ந்தால் உடல்கள் வெகுவிரைவில் அழுகிச் சீரழிந்து போகும். நீர் உள்ள இடத்தில் தோல் மிக விரைவில் அற்றுப்போக, உடம்பைக் காப்பாற்றும் தன்மை இழக்கப்படுகிறது. உள்உடலுக்குள் நீர் சென்றதும், அது அதிவிரைவில் சீரழிகின்றது.

### மாற்றமடையா எலும்புக்கூடு

எலும்புடன் உள்ள இழையங்கள் கால கதியில் அழிந்துபோகும். அதனுள் இருக்கும் வஸ்துக்களும் அழிந்து போகும். எலும்புகள் கடினமாக இருப்பதனால், அதனை நுண்ணங்கிகள் அழிப்பது முடியாததாகும். நீண்ட காலம் சென்றால் நீர் இருக்கும் இடங்களில் எலும்புகள் உக்கவுங்கூடும். எனினும் எலும்புகள் புதைகுழியில் உள்ள உடல்களின் நம்பகமான தரவுகளைத் தர வல்லவையாகும். எலும்புகள் உஷ்ணமான தரைகளில் மாற்றமடையாது நீண்ட காலத்துக்கு அப்படியே இருக்கும். இதனை உயிர்ச்சுவடு (Fossil) என்று அழைப்பர். எலும்பிலிருந்து எடுக்கப்படும் புரதம், அமினோஅமிலங்கள், குருதியின் தன்மைகள் மூலமாக அவ்வுடல் எப்போது அங்கு புதைக்கப்பட்டதென அறிய முடியும். இதனால் கை எலும்பு, கால் எலும்பு, இடுப்பு எலும்பு ஆகியவற்றின் தரவு மிக முக்கியமாகும்.

### புதைகுழியில் உள்ள உடல்களில் காயங்கள்

வெளி உடம்பு அழுகி வருவதனால் அப்பகுதியில் ஏற்பட்ட காயங்களைக் காண்பது கடினம். உடல் அழுகுவதற்கு முன் அதில் உள்ள காயங்கள் தென்படும். நிலத்துள் உள்ள பூச்சி, புழுக்கள் போன்றவற்றினால் ஏற்படும் காயங்கள், உடலில் ஏற்படும் வெட்டுக் காயங்களிலும் பார்க்க வித்தியாசமாக இருக்கும். வெட்டுக் காயங்கள், அடி காயங்கள் போன்றவை அவற்றின் அடையாளங்களில் இருந்து இனங் கண்டு கொள்ளலாம். இவை உடம்பு



அழுகும் நிலைக்கு முன்னதாகவே கண்டு கொள்ள முடியும். எலும்புகள் வெட்டப்பட்டிருப்பின் அவற்றை எலும்புகளில் கண்டு கொள்ளலாம். அவை வெட்டுக் காயமோ அல்லது முறி காயமோ அல்லது சிக்கல் நிறைந்த முறி காயமோ என்பதை கண்ணால் கண்டு முடிவெடுக்கலாம்.

### பற்களின் உதவியால் உடம்பை அடையாளங் காணல்

மிக அண்மையில் ஒருவர் பற்களை ''எக்ஸ்றே கதிர் வீச்சுப்'' படம் எடுத்திருப்பின் கிடைக்கப்பட்ட மண்டையோட்டின் பற்களுடன் அதனை ஒப்பிடும் போது, அதன் உரிமையாளரை அடையாளங் காணமுடியும். பற்கள் எலும்புபோன்று விரைவில் சீரழியாமல் இருப்பதால் பற்கள் மூலம் அதன் உரிமையாளரை இலகுவில் அடையாளங் கண்டு கொள்ளலாம். மேலதிக பல், தெத்திப் பல், பெரிய விரிந்த பல், சிறிய ஊசிப் பல் ஆகியவற்றைக் கொண்டும் உரிமையாளரை அடையாளங் காண முடியும். முகத்தின் படத்தினை, மண்டை ஓட்டின் மேல் பதியப் பண்ணும்போது (Super Imposed) அது யாருடைய மண்டை ஓடு என்பதையும் அறிய ஏதுவாகும். பல கொலை வழக்குகளில் இப்படியான வழிவகைகள் கையாளப்பட்டன.

### வேறு அடையாளங்கள்

கைவிரலில் ரேகைகள் உண்டு. ஒவ்வொரு கைவிரல் ரேகையிலும் வித்தியாசமுண்டு. 6 ஆயிரத்து 400 கோடிப் பேரில் ஒருவரின் கைவிரல் அடையாளம் மற்றைய ஒருவரின் அடையாளத்தை ஒத்திருக்கக் கூடும் என்பதால் கை விரல் அடையாளத்தை நம்பி ஒருவரைத் திட்டவட்டமாக அடையாளங் காணலாம். அண்மையில் ஒருவர் கை அடையாளத்தை எடுத்திருப்பின் அதனுடன் உடலின் கை அடையாளத்தை ஒப்பிட்டு அவரை அடையாளங் காணலாம். இரட்டைக் குழந்தைகளின் கைவிரல் ரேகைகள் கூட வித்தியாசப்படுகின்றன. கை விரல் ரேகை — வில் வளைவு, வளையம், வட்டவடிவு ஆகிய —உருவில் இருக்கும். இதனை ஆதாரமாகக் கொண்ட அவ்வுடலே கண்டு பிடிக்க முடியும். பச்சை குத்திய அடையாளம் ஒருவரை அடையாளங் காணுவதற்கு உறுதுணையாகும். இதைவிட, உடம்பிலே பல்வேறு அடையாளங்கள் இருக்கின்றன. உதாரணமாக காதில் துவாரம், மச்சம், நாடியில் பள்ளம், காயம்பட்ட அடையாளம் ஆகியவற்றை குறிப்பிடலாம். ஆனால் தோல் உரிந்து, உடம்பு சீரழிந்து போகும் காலத்தில் இவற்றை வைத்து அடையாளங் காணுவது கடினம். உடல் புதைக்கப்பட்டு ஒரு சிறு காலத்துக்குள் உடலை அடையாளங் காணுவதற்கு இவை சில வேளைகளில் உதவக் கூடும்.


பேராசிரியர்

- வி. கே. கணேசலிங்கம் -


### அணிந்துள்ள உலோகங்கள்

சடலத்தில் அணியப்பட்ட உலோகங்கள், இடுப்பு பெல்ற்றில் காணப்படும் எழுத்துப்பதிந்த உலோகங்கள், அணியப்பட்ட நகைகள், அரையில் கட்டப்படும் சங்கிலி, பாதரட்சைகளில் காணப்படும் பிளாஸ்ரிக் பொருள்கள் அல்லது உலோகவகைகள் போன்றவற்றினால் புதைகுழியில் உள்ள உடல்களை அடையாளங் காணமுடியும். இவை இறந்தவரின் பெற்றோருக்கோ மனைவிக்கோ மிகவும் தெரிந்தவையாக இருத்தல் வேண்டும்.

### உடைகள்

சடலத்தில் அணியப்பட்டிருந்த உடைகள் அனைத்தும் உக்கி அடையாளங் காணமுடியாத அளவு இற்றுப் போய்விடும். இது நீர் உள்ள நிலத்தில் மிக விரைவாக நடைபெறும். எனினும் நீர் குறைந்த இடங்களில் புதைக்கப்பட்ட உடல்களில் உடுத்தியிருந்த உடைகள்—குறிப்பாக தடித்த உடைகள், உள்ளாடைகள் ஆகியன—சிதைந்து போன நிலையில் சில பகுதியாகுதல் புதைக்கப்பட்ட இடத்தில் இருக்கக் கூடும். இவ்வுடைகளை அடையாளங் காணுவதால் அந்த உடல்களையும் அடையாளங் கண்டு கொள்ளலாம்.

### எலும்புகளை அகற்றும் விதம்

எலும்புகள் அழியாதுஇருக்குமெனக் கண்டோம். உண்மையில் இவை முக்கியமானவை. எலும்பின் துணை


(XIII ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். மக்கள் இறுகப் பூட்டிய அறைக்குள்;

# கப்பற் போக்குவரத்தை உடன் ஆரம்பிக்குக!

கடந்த சுமார் இரண்டு வாரங்களாக யாழ்ப்பாணத்துக்கும் வெளி மாவட்டங்களுக்கும் இடையிலான போக்குவரத்து முற்றுமுழுதாகத் துண்டிக்கப்பட்டுவிட்டது. இதுவரை —

அத்திபூத்தாற் போன்று, இருந்திருந்துவிட்டு நடை பெறும் பயணிகள் கப்பற் சேவைகளின் மூலம் திருகோணமலை சென்றடைந்து அங்கிருந்து கொழும்பு, வவுனியா போன்ற மாவட்டங்களுக்கு குடா நாட்டு மக்கள் செல்லக்கூடியதாக இருந்தது.

அதே போல, நாளாந்தம் நடைபெற்ற விமான சேவைகள் மூலம் மக்கள் கொழும்பு சென்று அங்கிருந்து தேவைக்கேற்ப வேறு மாவட்டங்களுக்குச் சென்றுவர முடிந்தது.

கப்பற் போக்குவரத்துத்தான் மக்களுக்கு கட்டுபடியாகக்கூடிய செலவுடனான பயணமாக அமைந்திருந்தது. வான்சேவை அதிக பணச்செலவானாலும், அவசர, அவசிய தேவைகளுக்கு விமானப் பயணத்தையே மக்கள் பயன்படுத்தினர்.

இப்போது அதுவும் இல்லை, இதுவும் இல்லை என்ற நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கல்வி, தொழில், குடும்ப அலுவல்கள் தொடர்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கும், பிறமாவட்டங்களிலிருந்து குடாநாட்டுக்கும் போக்குவரத்துச் செய்யமுடியாத தடங்கல் நிலை தோன்றியுள்ளது.

### பொறிக்குள் அகப்பட்டவர் போன்று......

குறிப்பாக விமான சேவைக்குத் தடங்கல் எதுவும் நடைபெறாது என்ற நம்பிக்கையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்தவர்களும் அவசர அவசிய அலுவல்களின் நிமித்தம் குடாநாட்டிலிருந்து கொழும்பு சென்றவர்களும் திரும்பிப்பயணம் செய்ய முடியாமல் பொறிக்குள் அகப்பட்டவர்கள்போல ஆகிவிட்டனர்.

தமது வசிப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்லமுடியாது, மனைவி பிள்ளைகள் ஓர் இடத்திலும் தாம் அடுத்தமுனையிலுமாககவலையுடன், உளத்தாக்கத்துடன் நாள்களைக் கழிக்கிறார்கள்; எப்போது வேண்டிய இடத்துக்குச் செல்லலாம் என்று ஏங்கி ஏங்கி உளப்பாதிப்பு அடைகின்றார்கள்.

இவர்களைப் போலவே வெளிநாடுகளில் இருந்து நீண்ட இடைவெளியின் பின்னர் குடாநாடு வந்தவர்களும் உரியகாலத்தில் திரும்பிச் செல்ல முடியுமோ என்று பதகளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் இருதரப்பினருக்கும்— கொழும்பிலிருந்து விமானம் மூலம் வந்து யாழ்ப்பாணத்தில் தடங்கலுற்று நிற்பவர்களுக்கும்—உதவும் விதத்தில் காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்குக் கப்பற்சேவை ஒன்றை நடத்துவதற்கு அரச தரப்பில் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பொருள்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை வந்துள்ள ''வாதுவ'' கப்பல் போக்குவரத்துத் தடங்கலுற்று நிற்பவர்களை ஏற்றிக்கோண்டு அநேகமாக, திங்கட்கிழமை அளவில் திருமலைக்குப் புறப்படும் என்று நம்பப்படுகிறது.

எனினும், இங்கிருந்து கொழும்பு சென்றவர்கள் திரும்பி வருவதற்கான ஏற்பாடு எதுவும் செய்யப்பட்டதாக இப்பத்தி எழுதப்படும்வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

இவர்களையும் அழைத்து வருவதற்கு அரசாங்கம் கப்பல் வசதி செய்ய வேண்டும் என்பதே இங்குள்ள அவர்களின் உறவினர்களின் வேண்டுதலாக இருக்கிறது. கொழும்பிலிருந்து அவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்வதற்கு அரசு தற்காலிக கப்பல் சேவை ஒன்றையாவது நடத்தி உதவ வேண்டும்.

இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாக தற்காலிக கப்பல் சேவைகளை நடத்துவதனால் குடாநாட்டு மக்களின் போக்குவரத்துக் கஷ்டத்தை நீக்கிவிட முடியாது.

### விமானச்சேவை இப்போதைக்கு இல்லை

பலாலி — இரத்மலானை விமானச் சேவைகள் இப்போதைக்கு மீள ஆரம்பமாவதற்கான சாத்தியம் எதுவும் இல்லை. இரணைதீவுக் கடலில் ''லயன் ஏயர்'' விமானம் விழுந்ததற்கான காரணம் கண்டுபிடிக்கப்படும் வரை யாழ். — கொழும்பு விமான சேவையை நடத்துவதற்கு அனுமதி வழங்குவதில்லை என்று பாதுகாப்பு அமைச்சு திட்டவட்டமாகத் தீர்மானித்து விட்டது; அறிவித்தும் உள்ளது.

மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு முன்னரும் ''அன்ரனோவ் — 24'' ரக விமானம் ஒன்று நீர்கொழும்புக் கடலில் வீழ்ந்து மூழ்கியது. அந்த விமானம் கடலில் மூழ்கியதற்கான காரணத்தைக் கண்டறியப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் விமானம் கடலில் வீழ்ந்ததற்கான சரியான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. வெறும் ஊகங்களே செய்திகளாகின. அத்தோடு சரியான காரணத்தைக் கண்டுபிடிக்கும் கதையும் முடிந்து போயிற்று!

இரணைதீவுக் கடலில் தலைகுத்தியவாறு விழுந்து மூழ்கிய விமானமும் ''அன்ரனோவ் — 24'' ரகத்தைச் சேர்ந்தது தான். ஆகையால் அது இயந்திர அல்லது தொழில் நுட்பக் கோளாறு காரணமாகக் கடலில் வீழ்ந்ததா அல்லது சுட்டு விழ்த்தப்பட்டதா என்பதனை இரண்டொரு மாதங்களிலேனும் கண்டறிய முடியுமா என்பது சந்தேகமே!

அதனால் —

பாதுகாப்பு அமைச்சு எடுத்துள்ள முடிவின் பிரகாரம் யாழ்.—கொழும்பு பயணிகள் விமான சேவை அடுத்த வருடம் பிறந்தாலும் நடைபெற மாட்டாது! இதனை அறிந்துதான் 'லயன் ஏயர்' மற்றும் 'மொனறா' விமான சேவைகளில் பணிபுரிந்த உக்கிரேனைச் சேர்ந்த விமானிகளும் ஏனைய சிப்பந்திகளும் அவர்களது சொந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டனர்.

இவர்கள் 21 பேர்களினாலும் ஹொட்டல் வாடகைப் பணம் மட்டும் மாதாந்தம் 25 லட்சம் ரூபாவாம்! பாதுகாப்பு அமைச்சின் தடை உத்தரவு நீங்குவதற்கு ஆறுமாதங் கூடச் செல்லலாம் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் பேசப்படுகிறது. அதுவரை இங்கே விமானச் சிப்பந்திகளை தங்கவைத்து எல்லோருக்கும் லட்சோப லட்சம் ரூபாக்களை ''வீண்'' சம்பளமாக வழங்க இரண்டு விமானசேவை நிறுவனங்களும் விரும்பவில்லை. அதனால் இதுவரை தமக்கு உழைத்துக்கொடுத்த உக்ரைன் விமானிகளையும் சிப்பந்திகளையும் அவசர அவசரமாக தாய் நாட்டுக்கு அனுப்பிவிட்டனர். அவர்களும் இலங்கையில் பணிபுரிந்து உயிரைப் பறிகொடுக்க விரும்பாமல் விரைந்து விட்டனர்!

### கப்பல் சேவையும் கொடிகளும்

குடாநாட்டு மக்களுக்குத் தரைப் பாதை இல்லை. இன்னும் பலவருடங்கள் கழிந்தாலும் அது சாத்தியமாகுமா என்ற சந்தேகம் நிரந்தரமாக நிலை கொண்டுள்ளது.

விமானப்பயணமும் நடை பெற மாட்டாது; அனேகமாக அதுவும் நிரந்தரமாகத் தடைப்படும் என்று நம்பும் அளவுக்கு நிலைமை இறுகியுள்ளது. ஆகவே இப்பிரதேச மக்களுக்கு உள்ள ஒரேயொரு போக்குவரத்து மார்க்கம் கடற்பயணம் மட்டுமேயாகும். நிரந்தரமான நாளாந்த கப்பற்சேவைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டால் மட்டுமே குடாநாட்டு மக்களின்போக்குவரத்துத் தேவையை ஓரளவிலேனும் நிறைவேற்றலாம்.

ஆனால் அரசாங்கம் நாளாந்தக் கப்பல் சேவையை நடத்துவதில் அக்கறை செலுத்துமா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. கடந்த 1997 ஜூன் மாதத்தின் பின்னர் அகதிகளைக் கூட்டி வருவதற்குக் கூட வாரத்தில் ஒரு கப்பற் சேவையை நடத்தமுடியாமல் அரசு திண்டாடுகிறது; பின்னடிக்கிறது என்று கூடச் சொல்லலாம். எப்போதோ ஒன்று இரண்டு தடவைகள் மட்டுமே அகதிகள் கப்பற் சேவை நடைபெறுகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் வடபகுதி புனர்வாழ்வு புனர்நிர்மாண அதிகார சபையினர் தாமே சொந்தத்தில் கப்பல் ஒன்றைக் குத்தகைக்குப் பெற்று நிரந்தர சேவைகளை நடத்துவதற்ந முயன்றது உண்மை. ஆனால் அது கைகூடாமற் போயிற்று.

கொரியாவில் இருந்து ஒரு பயணிகள் கப்பலைக் குத்தகைக்கு அமர்த்துவதற்கான பணிகள் முடிவடைந்திருந்தன. ஆனால் அதனைச் சேவையில் அமர்த்துவது தொடர்பாகக் கொடிப் பிரச்சினை தோன்றியது. கப்பல் சொந்தக்காரர்கள் தமது நாட்டுக் கொடியுடனேயே சேவையை நடத்த முடியும் என்று தெரிவித்தனர்.

ஆனால் இலங்கையின் கப்பற் போக்குவரத்து விதிகளின் பிரகாரம் இலங்கையின் கடற்பிரதேசத்தில் சிங்கக் கொடியைப் பறக்க விட்டுச் சேவையில் ஈடுபடும் பட்சத்திலேயே கப்பலில் பயணம் செய்யும் பிரயாணிகளுக்கோ அல்லது கப்பலுக்கோ ஏதாவது அபசகுனமாக நடந்து விட்டால் காப்புறுதிப் பணம் வழங்கப்படும்.

அடுத்த பக்கத்தில் வெளிநாட்டுப் பயணிகள் கப்பல் ஒன்று, இலங்கைக் கடல் எல்லையில் சேவையில் ஈடுபடுவதற்கென்று இலங்கைக் கொடியைப் பறக்க விட்டால், அதன் சர்வதேச ''லைசென்ஸ்'' ரத்துச் செய்யப்படும். அந்த ''லைசென்ஸ்'' ரத்தாகிய பின்னர் வேறு கடற்பிரதேசத்தில் சேவையில் ஈடுபட முடியாது. அதனால் இலங்கையின் கொடியைப் பறக்க விட்டுச் சேவையில் ஈடுபடுவதைக் கொரியக் கப்பல் சொந்தக்காரர் விரும்பவில்லை.

### மீண்டும் அதே பிரச்சினை

இப்போதும் கூட தனியார் நிறுவனங்கள் இரண்டு தமது சரக்குக் கப்பல்களில் சில வசதிகளைச் செய்து காங்கேசன் — திருமலை கப்பற் சேவையை நடத்தத் தயாராக இருக்கின்றன; விருப்பம் கொண்டுள்ளன; முயன்று வருகின்றன.

**உள்ளும் புறமும்**
**குறுமுனி**

மீண்டும் கொடிப் பிரச்சினை எழுந்துள்ளது. சம்பந்தப்பட்ட இரண்டு தனியார் நிறுவனங்களும் இவை குத்தகைக்கு வெளிநாட்டுக் கப்பல்களையே அமர்த்தியுள்ளன. என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆறாம் திகதி நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சு, அத்தியாவசிய சேவைகள் திணைக்களம், வடபகுதி புனர்வாழ்வு புனர் நிர்மாண அதிகார சபை அதிகாரிகள் அடங்கிய மாநாட்டில், குடாநாட்டுக்கான கப்பற் போக்குவரத்துக் குறித்து ஆராயப்பட்டது. எனினும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றே அறியப்படுகின்றது.

அரசாங்கம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய அத்தியாவசிய சேவைகளில், போக்குவரத்து வசதியும் ஒன்றாகும். இன்றைய உலகில் போக்குவரத்து வாய்ப்பு இல்லையேல் மக்களின் வாழ்வியக்கம் ஸ்தம்பித்து விடும். அவர்களின் அடிப்படை உரிமையைப் பறிப்பதுமாகும்.

பஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து மக்கள் போக்குவரத்துத் துண்டிக்கப்படும் வேளைகளில், அவர்களின் போராட்டத்தை மக்கள் விரோதம் என்றும் சட்ட விரோதம் என்றும் வர்ணிக்கும் அரசு குடாநாட்டு மக்களின் போக்குவரத்தை முற்றாகத் துண்டிப்பது அடக்குமுறையுமாகிவிடும்.

ஆகையால் அரசாங்கம் யாழ்ப்பாண மக்களுக்கு வெளிமாவட்டங்கள் சென்று வருவதற்கு உடனடியாக நிரந்தரமான கப்பற்சேவையை ஆரம்பிக்க வேண்டும்.

அரசாங்கத்தின் சிவில் நிர்வாகம் இங்கு செத்துப் போயிருந்தகாலத்தில் கூட, மக்களுக்கு ஏதோ ஒருவகையில் போக்குவரத்து வசதி இருந்தது. கொம்படிப்பாதை, கிளாலிக் கடற்பாதை என்று ஒன்றில்லாவிடில் மற்றது என்று மக்கள் பயணம் செய்தனர்.

இப்போது அரசு கப்பற் போக்குவரத்து வசதி செய்யத்தவறுமானால், குடாநாட்டுமக்களைத்திறந்த சிறைச்சாலையில் வைத்ததற்கு ஒப்பாகிவிடும். சிவில் நிர்வாகம் இயங்குவதாகச் சொல்ல முடியாது. மக்களை இறுகப்பூட்டிய அறைக்குள் அடைத்து வைத்தது போலாகிவிடும்.

★ ★ ★

# யாழ். ஆயர் புலிகளுடன் வன்னியில் பேசியது என்ன?

**யாழ்** மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் அண்மையில் மடுவுக்கும் அங்கிருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதிக்கும் விஜயம் செய்திருந்தார்.

அவரது விஜயத்தின் முக்கிய நோக்கம் மத சம்பந்தமான நிகழ்வுகளில் கலந்து கொள்வதாகும். எனினும் வன்னிப் பகுதியில் தங்கியிருந்தபோது அங்கு நடைபெறும் யுத்தத்தினால் மக்கள் படும் இன்னல்களைத் தன்னால் காணக்கூடியதாக இருந்ததென 'அவர் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்ததினால் தொழில் வாய்ப்புகளை இழந்து வாழும் மக்களுக்கு வழங்கப்பட்டுவந்த உலர் உணவு நிறுத்தப்பட்டதனால், அவர்கள் படும் கஷ்டங்களைத் தன்னால் உணரமுடிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் நிவாரண வெட்டினால் சுமார் 30 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு கடந்த இரண்டு மாதங்களாக உலர்உணவு விநியோகிக்கப்படவில்லை. அதன் விளைவாக பட்டினிச்சாவு உண்டாகும் நிலைமை அங்கு தோன்றியுள்ளது. மக்களின் அவல நிலையைக் கண்டு அவர்களது நிவாரணத்தை மீண்டும் வழங்குமாறு ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியுள்ளேன். — என்றும் ஆயர் குறிப்பிட்டார்.

ஆயர் அவர்கள் வன்னியில் தங்கியிருந்தவேளை விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் பலரையும் சந்தித்து அங்குள்ள நிலைமைகளை கேட்டறிந்தார். பசி பட்டினியை எதிர்நோக்கும் மக்களின் நிலையை அரசுக்கும் வெளியுலகுக்கும் எடுத்துக் கூறுமாறு அவர்கள் ஆயரிடம் கேட்டுக் கொண்டனர்.

நிலைமை இவ்வாறிருக்க —

வன்னிக்குச் சென்ற யாழ். ஆயரும், மன்னார் ஆயரும் சேர்ந்து அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான முன்முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக கொழும்பில் பேச்சடிபடத் தொடங்கியுள்ளது.

இது குறித்து யாழ். ஆயரிடம் கேட்டபோது —

அத்தகைய எந்த முயற்சிகளிலும் தாம் ஈடுபடவில்லை எனவும்— தென்னிலங்கையின் அரசியல் நிலைமை குறித்து அவர்களிடம் பிரஸ்தாபித்ததோடு சமாதானத்துக்கான அவசியத்தை விடுதலைப் புலிகளின் பிரமுகர்களிடம் வலியுறுத்தியதாகவும்— மட்டுமே கூறினார்.

யாழ். ஆயர் வன்னிப் பிரதேசத்தில் மூன்று வாரங்கள் தங்கியிருந்தார். அப்போது அவர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன், மற்றும் சுதா, கரிகாலன் ஆகியோரைச் சந்தித்து உரையாடினார். இச் சந்

(XIII ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி
## உங்கள் கவிதைகள்...

மௌனமொழி (இலக்கம்—1) ஓவியம் தொடர்பான தங்கள் மனப் பதிவுகளைப் பல நூற்றுக்கணக்கானோர் வரைந்து அனுப்பிவைத்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் சஞ்சீவியின் பாராட்டுக்கள்.

வந்து குவிந்துள்ள உங்கள் ஆக்கங்களில் மிகச் சிலவே கவிதைகள். பெரும்பாலானவை வெறும் வசனங்கள்தான். எனினும் இளம் உள்ளங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தெரிவுசெய்யப்பட்ட சில கவிதைகள் வெளியிடப்படுகின்றன.

(ஆ—ர்)



காணாமற் போனவன்
புதைகுழியில்
கணவனைத் தேடியவள்
கண்ணீரில்.

மாளாத கொடுமையின்
வெறி அடக்க
வெளிக்கிட்ட கரமொன்று
வெள்ளைப் புறாவின்
விலங்குடைக்கும்!

- என். விஜயசுந்தரம் -

ஒரு வெண்புறாவின் வருகைக்காக
விழி திறந்து காத்திருந்தோம்
விலங்குகளின் பிடியில் இன்று
வெண்புறாவும் பெண்புறாவும்!

- சந்திரா தனபாலசிங்கம் -

சிந்தனைச் சுதந்திரம்
சிறைப்படுத்தப்படுகின்றது!
எண்ணப் பறவை
எழ முடியாமல்
ஏங்கித் தவிக்கிறது!

- மானியூர் ரட்ணேஸ் -

பல்கலையில்
'ராக்கிங்' காம்
சோதரரின்
இழி செயல் கண்டு
வெட்கித் தலைகுனிந்து
வேதனையில்
ஒரு கன்னி!

— சுதா —
இருபாலை.

பட்டப்பின்
பட்டம் பெற்றும்
பாரினிலே
வேலையின்றி
பரிதவிக்கும்
பட்டதாரியோ?

— கேசரி —
கைதடி.

பறக்கும் புறாவுக்கும்
விலங்கு பூட்டும்
கொடுமை
பாவப்பட்ட
இம் மண்ணில்தான்!

— அன்ரனி —
கந்தர்மடம்.

முழங்காலில்
முகம் புதைத்த
தன் தாயின்
துயர் தீர்க்க
வீறு கொண்டு
புறப்பட்ட
வீரமிகு மைந்தனிவன்!

— ஆனந்தன் —
திருநெல்வேலி.

**பட்டது போதும்**
**எம்மைப் பறக்க விடு!**
**குட்டியது போதும்**
**எம்மை நிமிர விடு!**

— க. நா. முகுந்தன் —

காதல் என்னும்
காவியத்தில்
ஒன்றுபட்ட
இதயங்கள்
சாதி என்னும்
அம்புக்கு
இலக்காகி
துடிக்கின்றனவோ?

— இளவல் —
சுன்னாகம்.

காதல் வானில்
சிறகடித்த
பறவைகள்
சீதன விலங்கிலே
சிக்குண்ட
கொடுமை!

— ராஜ் —
நல்லூர்

பொன்முகம் கால்களுள்
புதைத்து
பொதிந்த இருளினுள்
மறைந்தது போதும்.
பொறிவிழி திற!
அறும்
உன் அடிமைத்தளைகள்
மட்டுமல்ல
கனவுப்பறவையின்
கனத்த சங்கிலிகளும்!

- ச. சராங்கா -

வரதட்சணைத் தளை மீறி
வசந்த வரவு நமக்கா?
பறக்கத் துடிக்கும்
புதுமைப் பெண்ணியம்
அறுக்க முடியாத
சங்கிலியில் அகப்பட்டிருக்க
தடை வலிமை கண்டு
உடையாது என உணர்ந்து
தலை குனிந்தாய் நீ
தற்காலிகமாக அல்ல
நிரந்தரமாய்!

- கு. மகிழினி -

சிறைகடிக்கத் துடிக்கும்
சின்னப் புறாவே! — உன்
அவலமும் அழுகையும்
அம்மாவின் சீதனமா?
சிந்தை கலங்காதே!
சிறையுடைக்கச் சிலவேளை
சீர்திருத்தவாதி வருவான்.

— உடுவில் அரவிந்தன் —

**மனிதனின் நேயம் மறக்கப்பட்ட நிலையில்**
**மரணத்தின் சுவடுகள் மறையாத வேளையில்**
**சிதறுண்ட எங்களின் வாழ்க்கையின் நடுவில்**
**சுதந்திரச் சிறகடித்து நடிக்கிறது சமாதானம்!**

— வண்ணை செ. பிரசாந்த் —

* * *

வாழ்க்கை விசும்பினில் வாழப் பறந்திடா (து)
வீழ்த்தவே பார்க்கிறான் பாவி அவன்
வீட்டினில் நாட்டினில் வேறெங்கு காணினும்
கட்டிடப் பார்க்கிறான் பெண்ணை — அவள்
நடுஞ்சினம் சுட்டிடும் மண்ணை!

— அனலையூர்ச் சேந்தன் —

* * *

சுதந்திரம் சுருக்கிட்டு நிரந்தர வதைபட்டு
சோதனையும வேதனையும் போதனையாய்
வாதனையும் வஞ்சனையும் வடுக்களாய்!
விசனமும் விரக்தியும் விளைநிலமாய்!
சலனமே சகலதுமாய் நாங்கள்!

— எம். பி. கலா —

சிறகுகள் விரிந்தாலும்
கழுத்தை இறுக்கும் முடிச்சு...
பறப்பதையும் எல்லைக்குள்
அடக்கும்..
ஒரு நாயின் இரும்புச் சங்கிலியாய்...

சுவருக்கு வெளியே நீ வந்தாலும்
அவிழாத முடிச்சுக்கள்
எத்தனையோ?

- தாட்சாயணி -

* * *

பறக்கிறேன் பறக்கிறேன்
இறகு வலிக்கும் வரை — ஆனால்
தாண்ட முடியவில்லை
தலைமை போட்ட வட்டத்தை.
ஒரு முனை கயிறு என்கழுத்தில்
மறுமுனையோ தலைமை கையில்
வட்டமடிக்கும் நானோ
ஒரு செக்கு மாடாய்...

- தயானி -

* * *

தொலைத் தொடர்பின்
தூரத் துறவே
உன்னாலும் முடியாதா...
என் சொந்தங்களைத் தேடித்தர?

- க. நாகராசா -
நுணாவில்

* * *

கோரமாய் இறுக்கமாய் ஓர்
இரும்புச் சங்கிலி இருளாய்
தலை நிமிரும் வரை உன்னை
இறுக்கிச் சிதைக்கும்.
மெல்ல நிமிர்!
அழுது வடிந்த சிவந்த விழிகளால்
ஆகாயத்தைப் பார்!
நாளையாவது வெளிச்சம் தெரியும்!

— க. சாந்தினி —

## மௌன மொழி



**மேலே உள்ள ஓவியம் உங்களில் ஏற்படுத்தும் மனப் பதிவை சிறு கவிதையாக வரையுங்கள். எண்ணிக்கை குறைந்த வரிகளில் வரும் உங்கள் எண்ணக் கவிதைகள் சஞ்சீவியில் வெளியிடப்படும்.**

**இந்த ஓவியத்தை வரைந்து அனுப்பியவர் சுன்னாகத்தைச் சேர்ந்த சு. சு. வாமன்.**

**உங்கள் ஆக்கங்களை வெள்ளிக்கிழமைக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டிய முகவரி:**

மௌன மொழி இலக்கம் — 3
'சஞ்சீவி'
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ நவீன மற்றும் மரபுப்பாணி ஓவியங்களை வரைவதில் ஆர்வமுடையோர் இப்பகுதிக்குத் தகுந்த ஓவியங்களையும் வரைந்து அனுப்பலாம்.

★ 'மௌனமொழி இலக்கம் 2' ஓவியத்துக்கான உங்கள் கவிதைகள் அடுத்த வாரம் வெளியாகும்.

வசந்தம் வரும்
விடியுமென்று
காத்திருந்தோம்...
விடியல்கள் ஆயிரம்
மடிந்து போயின...
எமக்குமட்டும்
இரவுகள்தான்!

-செ பிரான்சிஸ் ஜெயம்-

மனம் வெந்து
உடல் நொந்து
மூலையில் ஒடுங்கினேன்...
எனினும்
பறக்கத்தான் வேண்டும்
சிறகுகள் விரித்து விட்டேன்
பாருங்களேன் என்னை?...

— சௌஜன்யா —

புதுமைப் பெண்ணும்
சீதனத்துள் சிறையாகலாம்;
மாடத்துப் புறாவும்
போருக்குள் பிடியாகலாம்;
ஆனாலும் தமிழ் என்றும்
சிறையாகாது!! பிடியாகாது!

- ல. அமலானந்தகுமார் -

பெண்சுதந்திரம்
கிடைத்து விட்டது!
ஆணாதிக்கத்தின்
கைப்பிடியில்!!

— க. விஜிதா —

ஆற்றிவு
உனக்கில்லை
ஆயினும்
அடையாள அட்டையை
ஏன் மறந்தாய்?

— வி. தமிழ்ச்செல்வன் —

பட்சியின் கழுத்திலே
பாவியின் கோரம் — ஒரு
பாவை அழுகிறாள்
பாரங்கே ஓரம்!

— சேந்தன் —

சமாதானச் சின்னத்திற்கே
இக்கதி என்றால்
சமானியர்கள் எமக்கு?

—ஜே. எஸ். அருள்ராஜ்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவான தொப்பி

ஊருக்குள் கவிசொன்னேன்
தாண்டவக்கோனே—தொப்பி
உம்ம தென்று போட்டெடுத்தீர்
தாண்டவக்கோனே!
பாருக்குக் கவிசொல்லி
தாண்டவக்கோனே — நானும்
பாதி வெற்றி கண்டுவிட்டேன்
தாண்டவக்கோனே!

சாத்திரந்தான் சொல்லுகிறீர்
தாண்டவக்கோனே — சொந்த
சாதகத்தைப் பார்த்த துண்டோ
தாண்டவக்கோனே!
கோத்திரத்தால் கோபங்களால்
தாண்டவக்கோனே — எந்த
காத்திரமும் விளையாது
தாண்டவக்கோனே!

வாய் திறக்கப் பொய்யுதிரும்
தாண்டவக்கோனே — சொல்லி
வாழ்விலெதை வென்றெடுத்தீர்
தாண்டவக்கோனே!
சாய்ந்திருக்கும் பக்கமதில்
தாண்டவக்கோனே — சாய்ந்து
சோற்று வழி தான் முடித்தீர்
தாண்டவக்கோனே!

நிலவென்று பெயரிருக்கும்
தாண்டவக்கோனே — உள்ளே
நெஞ்சமதிற் கறையிருக்கும்
தாண்டவக்கோனே!
நலமன்று குறுக்குவழி
தாண்கிவக்கோனே — சாயம்
நீங்கிடு மோர் நரியாகும்
தாண்டவக்கோனே!

நாயிருக்கும் வீதி வழி
தாண்டவக்கோனே — சென்று
நாகரிகம் இழக்காதீர்
தாண்டவக்கோனே!
பேயிருக்கும் மனமுமது
தாண்டவக்கோனே — சுற்றும்
பாரினுக்கே உதவாது
தாண்டவக்கோனே!

ஊருக்குக் கவிசொன்னேன்
தாண்டவக்கோனே — தொப்பி
உம்ம தென்று போட்டெடுத்தீர்
தாண்டவக்கோனே!
நேருக்கு நேருமதாய்
தாண்டவக்கோனே — நெஞ்சில்
நன்மை எண்ண வேண்டுமென்றோ
தாண்டவக்கோனே!

— மாவை வரோதயன் —

## நிம்மதியைத் தேடி...!

நிம்மதியே நிம்மதியை
நிதம் தேடி அலைகின்றேன்
நீயின்றி நானிங்கு
நிதம் வாடி அழுகின்றேன்

வேடம் போட்டு வெளியாருக்காய்
வெற்றுப்பேச்சுப் பேசித்தினம்
நாடகத்தை ஆடுகின்ற நரர்கள்
ஈற்றில் நாடுவ தென்ன?

அடுத்தவரின் குறையைக் கண்டே
அகத்தில் மிக்க மகிழ்ச்சியுறுவார்
— பிறர்
நடுத்தெருவில் நிற்கை கண்டால்
— ஒரு
நாளும் திரும்பிப் பார்க்க மாட்டார்

தவறு விடும் மனித இயல்பை — தினம்
அவதூறு செய்து நிற்பார்
அவலம் தனக்கே யேற்படுமானால்
அவரை இவரை ஒறுத்து ஓய்வார்

எளிய ஒரு செயலைத் தானும்
எடுத்துப் பெரிதாய்ஆக்கி நிற்பார்
வலியத்தேடி வினையை ஆக்கி — பின்
வணங்கும் கடவுள் இல்லை
என்பார்

மனிதராடா மனிதம் தொலைத்த
மனிதரிவர் தம்முள் நானும் — ஒரு
மனிதனடா மனதுள் தினமும்
மயங்குகின்றேன் (நிம்) மதியைத்
தேடி

- தத்துவப்பித்தன் -

## கலங்குகின்றான் காளையின்று

காதலித்தேன் என்று கைப்பிடித்தான் காரிகையை
காதலியே தேன் என்று கைவிட்டான் பெற்றவரை
காதலிதான் தன்சுயரூபம் காலப்போக்கில் காட்டிநிற்க
காதலித்ததேன் என்று கலங்குகிறான் காளையின்று.

இருமனம் கலந்தால் போதும் இணையலாம் என்றெண்ணி
திருமணம் செய்து கொள்ளும் இளையவர் மிகுந்த காலம்
பெருமனம் மிக்கவுற்றார் பெற்றோரை உதறிவிட்டு
ஒருமனம் வழிப்படுவோர் உணர்வது பின்னால்தானே?

நல்லது கெட்டதென்று நயம்பட உரைத்தபோதும்
வல்லது தங்கள்மூளை வாக்குச் சாதுரியமென்று
சொல்வது கேட்பதில்லை சோதித்து அறிவதில்லை
வெல்வது கடினமாகும் வேளைதான் ஞானமெழும்!

- கு. சி. சுந்தரம்பிள்ளை -

## பாடுகிறேன் தமிழ்த் தாயை!

அல்லலுறு தமிழ்த்தாயின் அருள் வடிவை உள்ளத்திருத்தி
எல்லையறு அவள்புகழை இயன்றவரை கூறுதற்கு
ஏடெடுத்தேன் பாட்டெழுத எங்குமே புகழ் மணம் வீச
எழிலோங்கும் அவளருளால் என்கவிதை நிறைவுறவே.

இமயத்தில் கொடிநட்டே இதயத்தில் தாம் உயர்ந்து
அமர்ந்திருந்த மன்னவரின் அறவழியால் உயர்வுற்றாள்
ஔவைக்குக் கனியீந்த அதியமான் பெருந் தொண்டால்
அறமொழியே தமிழெனவே ஏடெடுத்தேன் பாட்டெழுத.

வள்ளுவன் குறள்தந்தான் வானுயரப் புகழ்கொண்டான்
கல்லினைக் கடைந்தெடுத்த கருப்பொருள் அவளானாள்
எல்லையில் அவள்புகழை எடுத்தோதச் சிலம்புண்டு
வல்ல அவள் திறம் மீட்டி நானும் ஏடெடுத்தேன் பாட்டெழுத.

வீரத்திற் சிறப்புண்டு விளக்குதற்கு நாலுண்டு
ஆர்வத்தாற் தமிழ்ப்புலவர் அவள் புகழே பொருளென்றார்
தலைநகராம் மதுரையிலே காத்திடவே அன்று மன்றமைத்து
நிலையுணர்த்தும் எம்வழியால் ஏடெடுத்தேன் பாட்டெழுத.

சிங்களத்தில் புகழ்பெற்றாள் சீதனத்தை கொடுமையென்றாள்
வங்களத்தில் நடம் பயின்றாள் வானுயரப் புகழ்பெற்றாள்
பொங்குக தமிழெனவே சங்கம் முழங்கிடவே அவளின்
புகழ்பூத்த இந்நிலையால் ஏடெடுத்தேன் பாட்டெழுத.

— தர்ப்பணா சிறிமகாதேவன் —

## மேன்மைக் கலைஞன்

சந்தக் கவியின் நடையோடு
சங்கத் தமிழின் சுவையோடு
இந்தப் புவியின் களைநீங்க
இன்பம் பொழிந்த கவிகோடி
வெந்த வயிறின் விழிப்போடும்
வேகும் மிடியின் தவிப்போடும்
சொந்தம் குலவும் தருமன் நீ
சோகம் அகற்றும் கவிஞன் நீ!

பாட்டுத் திறத்தின் படையோடு
பேச்சில் இழையும் நகையோடு
நாட்டு நலத்தின் குறியோடு
நெஞ்சில் நிறையும் படிவாழ்ந்தாய்!
கேட்டுச் சலிக்கா செவி தேடும்
கொஞ்சு தமிழின் சுவைநாவோய்
வாட்டும் பிணியா வந்துந்தன்
வாசற் கதவைத் தட்டிற்று?

மக்கள் தொடர்புக் கலையாவும்
மாற்று மொழிகள் பலவோடும்
தக்க திறன் நீ எய்திட்டாய்
தூண்டா மணியே ஒளிக்கோவே!
பக்க விளைவும் பயன் கண்டு
பாதை விளக்கும் தலைவன் நீ
மக்கள் மறக்க முடியாத
மேன்மைக் கலைஞன் நீயன்றோ?

சில்லை யூரன் பெயர் கேட்டால்
சிந்து கவியின் தேனூறும்
இல்லை யாரும் இணை யென்றே
எந்த உலகும் தான் கூறும்
முல்லை தேரிற் படர்தற்கே
மன்னன் கொடுத்தான் அவ்வாறே
சில்லை யூரன் கலைத் தேரில்
செல்வோம் தமிழின் உணர்வோடு!

— மாவை வரோதயன் —

(எதிர்வரும் 15 ஆம் திகதி சில்லையூரரின் சிரார்த்ததினம்.)

## கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுகளே! கனவுகளே!

கனவுகளே கனவுகளே
கலைந்து ஓடுங்கள்—என்
காதலை மறந்த தோழியை இங்கே
அழைத்து வாருங்கள்

(கனவுகளே)

நினைவுகளே நினைவுகளே
நிலைத்து நில்லுங்கள் – அவள்
நேசக் கதைகள் ஒவ்வொன்றாக
எடுத்துச் சொல்லுங்கள்!

(கனவுகளே)

அருவிக்கரையின் சலசலப்பில்
ஆடித்திரிந்து வந்தோம்
அல்லும் பகலும் எத்தனை எத்தனை
கற்பனை வளர்த்து வந்தோம்?
தருணம் நெருங்கும் போதில்—அவள்
தாவி மறைந்து விட்டாள்
தமிழே என்னைத் தவிப்பில் தள்ளி
தணலாய் மாறி விட்டாள்

(கனவுகளே)

பெண்ணென்றாலே பேதை என்பார்
பாதை மாற்றும் காதை இதுவன்றோ?
பேதைகளாக பிறரை மாற்றும்
கலையில் அவள் மேதை அல்லவோ?
கண்ணும் கண்ணும் கலந்து நாளும்
காவியம் படைத்ததெல்லாம்
கண்மூடித் தனத்தால் மண்மூடச் செய்தாள்
கருணைக்கு ஏன் இங்கு பஞ்சமோ?

—அ. சாள்ஸ்—
(ஆண்டு 10,
கனகரத்தினம் ம. ம. வி.)

## நிலவு என்பது?

சூரியச் சுவிங்கம் சப்பிய
இருட்பெடி ஊதிய பபிளாய்
உதித்ததோ நிலவு?

மோதும் கடல்மகள் முத்தக்கறையா
ஏதிரா வானில் எழுந்தே நிற்பது?

ஊரடங்கதனில் உலவியதாலோ
தாரகைப் பொலிஸார்
தடியடி நடத்தி
வான்நிலவதனை ''வானில்'' ஏற்றுறார்?!

ஏன் சிலவேளை
இப்படி இருக்குமோ?
அறுபதினாயிரம் மனைவியர் சூழ
மறுபடி தசரதன் வானில் உதயமோ?!

மன்மததேச மைல்கள் தானோ?
என்னவள் வீட்டு எடுபிடிப் பெண்ணோ?

கறுத்த மறுவாய் அரும்பிய தாடி
இருக்கிற போது
இவளா பெண்மகள்?

வானம் என்ற தேர்தல் தொகுதியில்
வீண்வாக்குறுதிகள் வாரி வழங்கி
''பௌர்ணமி அமைச்சர்''
பதவி கிடைத்தபின்
தாரகை மக்கள்
கண்ணுக்கு ஒழிக்கிற
அந்த நிலாவும் ஓர் அரசியல்வாதியோ?
தொந்தி பெருத்ததும் தொகுதிவிட் டோடுறார்?

எலும்புந்தோலும் பூட்டிய ஏழைகள்
கொழுத்து உயர்ந்து கூனல்நிமிர்ந்த தம்
நிழலினைப் பார்த்தேனும்
நிம்மதி அடையக்
குளிர் கதிர்ப் பாலைக்
கொடுக்கிற பசுவோ!

கண்ணகி நிலையில் கதறிய எம்நிலப்
பெண்களில் யாரோ பெயர்த்தே எறிந்த
பொன்னிற மார்போ?
பொசுக்க நினைத்து பின்
தன்நிலை பிறர்க்கு
வாரா திருக்கவோ
நெருப்பை உமிழும் நினைவினை மறந்து
வெறுப்பை விழுங்கி விம்மித் தணியுது!

சோனகர் போலே ஓர் அணியத்துள்
வானத்தாரகை வாசிகள் உண்ணும்
பாணோ? பணிஸோ?; பச்சை முட்டையை
வீணாய் விண்ணில் உடைத்தவர் எவரோ?

பந்தியிலிட்ட அப்பளப்
பொரியலைக்
கொறித்துக் குறைக்கும் குறும்பன் யாரோ?

கார்இருட் படை முகில் ராங்கிகள் சகிதம்
சூரியன் தேடிச் சுற்றி வளைக்க.........
காரியம் அறிந்தவன் கடலினுள் ஒழிக்க!
பாவிகள் நிலவுப் பாலகன் தனையா
காவு எடுத்திராக் கடலினில் வீசினார்!?
ஓகோ வானிலும் ஜனநா யகமா?
ஆகா இறைவா அருமை அருமை!

— ச. முகுந்தன் —

## இன்று ஒக்ரோபர் 10- உலக உளநல நாள்

# மனங்களைப் பாதுகாப்போம்!

✱ உளவளத்துணைக்கும் ஆரோக்கியத்துக்குமான ஒரு நிறுவனமான சாந்திகம் செயற்பட்டு வருகிறது. இது தொடக்கப்பட்ட வரலாற்றைத் தங்களால் கூறமுடியுமா?

● 1988 ஆம் ஆண்டு நாங்கள் இந்த நிறுவனத்தை ஆரம்பித்தோம். அப்பொழுது போர் முடிவடையப் போகின்றது என்ற ஒரு நினைப்பு. இப்போரினால் உடல்நிலை, உளநிலை பாதிக்கப்பட்ட பலரின் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. போரில் தீவிரமாக ஈடுபட்டவர்கள் அதனைத் தவிர்த்து சமாதானமாக சமுதாயத்திற்குத் திரும்புவார்கள்; அவர்களுக்கும் உளநல உதவி தேவைப்படும் என்ற எதிர்பார்ப்பில் இந்நிலையத்தைஆரம்பித்தோம். இதில் மருத்துவ மாணவர்களும் சில நலன் விரும்பிகளும் பங்கெடுத்தனர்.

✱ 'சாந்திகம்' என்ற பெயரை ஏன் தெரிவுசெய்தீர்கள்?

● உளவளத்துணை நிலையம்ஒன்றை ஆரம்பித்து அதற்கொரு நல்ல பெயரைச் சூட்டவேண்டும். அப்பெயர் பொருத்தமானதாக — இனிமையானதாக—கருத்தைத் தெளிவுபடுத்தக் கூடிய ஒன்றாக அமைய வேண்டுமென்று விரும்பினோம். பல தமிழ்ப் புத்தகங்களை ஆராய்ந்தபொழுது சாந்தத்தைக் குறிக்கக்கூடிய ஒரு பெயராக 'சாந்திகம்' என்றது எங்களது மனதில் பட்டது. அது 'சாந்தியகம்' என்று இருக்கவேண்டும் என்று சிலர் கருத்துத் தெரிவித்த போதும் தமிழ் அகராதியில் சாந்திகம் என்ற பெயர் சாந்தியைக் குறிக்கக்கூடியதாக இருந்தது. எனவே பலரின்விருப்பப்படி 'சாந்திகம்' என்ற பெயரையே வைத்துவிட்டோம்.

> **"மனத்தாக்கம், மன அழுத்தம், மனநெகிழ்வு போன்ற பிரச்சினைகள் எல்லோருக்கும் இருக்கும் என்பதனை சமுதாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அல்லது சமுதாயத்தை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும் என்பது எங்களது மிகவும் பெரியதோர் ஆவல்."**

✱ 'சாந்திகம்'—உளவளத்துணைக்கும் ஆரோக்கியத்திற்குமான சங்கம் என்ற வகையில் கடந்த பத்து வருட காலமாக ஆற்றிவரும் பணிகளைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுவீர்களா?

● 1988 இல் நாம்மிகப்பெரிய எதிர்பார்ப்புடன்இந்தப்பணியை ஆரம்பித்தோம். அன்றிலிருந்து இன்று வரை எங்களுடைய பணி தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. உளநெருக்கீடுகளுக்கு முகங்கொடுத்தவர்கள், தாங்கமுடியாத பிரச்சினைகளுக்குத் தாங்கள் உள்ளாகியிருப்பதாக எண்ணுபவர்கள், வைத்தியசாலையில் வைத்தியரினால் உளவளத்துணை தேவை என்று அனுப்பப்படுபவர்கள் எனப் பலதரப்பட்டவர்களுக்கு உளவளத்துணை உதவிகள் வழங்கப் பட்டுவருகின்றன.

உளவளத்துணை தேவைப்படுபவர்களுக்கு உதவி செய்வது மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கு உளநெருக்கீடுகள் சம்பந்தமான பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கான சில நடவடிக்கைகளையும் எடுத்திருக்கின்றோம். இதற்காக நாடகங்கள், கலை ஓவியக் கண்காட்சிகள், போட்டிகள் மூலமாக ஒவ்வொருவருக்கும் உள்ளக்கிடைக்கைகள் இருக்கின்றன என்பதனை வெளிப்படுத்தி இந்த உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துவதன் மூலம் அவர்கள் நல்ல—சாதாரணமான — ஆனந்தமான— வாழ்க்கையைக் கைக்கொள்ள முடியும் என்பதனையும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

இதனைவிட உளவளத்துணையாளர்—கவுன்சிலர் (4 அணிகள்) களையும்—உருவாக்கியுள்ளோம்.

இப்பொழுதும் 'யூனிசெவ்' போன்ற நிறுவனங்களின் வேண்டுகோளின் பிரகாரம் பல முன்னிலைப் பள்ளி ஆசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், குடும்பநல சேவையாளர் போன்றோரைத் தேர்ந்தெடுத்து பயிற்சியளிக்கின்றோம். பள்ளி மாணவர்களிலே இருக்கின்ற உளநெருக்கீடுகளை அறிந்துகொள்ளவும் அதற்

**கடந்த பத்து வருடங்களாக உளநலம் சார்ந்த பரப்புக்களிடையே பணியாற்றிக் கொண்டு வருகின்ற சாந்திகம் குறித்து அதன் தலைவர் வைத்திய கலாநிதி செ. சி. நச்சினார்க்கினியனைப் பேட்டி காண்கின்றார் செல்வி சி. ஹம்சானந்தி.**

கான அணுகுமுறைகளை ஏற்படுத்தவும், உளநெருக்கீடுகள் வராது பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காகவும் இந்தப் பயிற்சிகளை நாங்கள் இவர்களுக்கு அளித்துவருகின்றோம்.

✱ இவ்வளவு தொழிற்பாடுகளும் யாழ்ப்பாணத்தில் மட்டுமே நடைபெற்று வருகின்றனவா அல்லது வேறு பாகங்களுக்கும் இச் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளனவா?

● முக்கியமாக எங்களுடைய தொழிற்பாடு யாழ்ப்பாணத்தையே மையமாகக் கொண்டிருக்கின்றது. கடந்த காலங்களில் பருத்தித்துறை, தெல்லிப்பழை வைத்தியசாலைகளுக்கு சாந்திகத்திலிருந்து உளவளத்துணையாளர்களை அனுப்பி அப்பகுதி மக்களுக்குச் சேவையாற்றிக் கொண்டிருந்தோம். இப்பொழுது பருத்தித்துறை வரை செல்லக்கூடிய வாய்ப்புக்கள் குறைந்து விட்டன. ஆரம்ப காலத்தில் எங்களுடைய நோக்கம் வடக்கு — கிழக்கு முழுமையாகப் பயிற்சியாளர்களைத் தெரிவு செய்து அந்தந்த இடங்களுக்கு உளவளத்துணை உதவியளிப்பது என்றவாறிருந்தது. ஆனால் அதனை இன்னமும் செயற்படுத்த முடியவில்லை.

✱ சாந்திகத்தின் தொழிற்பாட்டை வடக்கு — கிழக்கு முழுமையாக வழங்குவது இன்னமும் கைகூடவில்லை எனக் கூறுகின்றீர்கள். இதற்கான காரணங்களைக் கூறுவீர்களா? அல்லது தற்போது சாந்திகத்தில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாதாயினும் உண்டா?





● ஆம். ஆளணி பற்றாக்குறையே ஒரு முக்கிய காரணமாகும். தமது நேரத்தில் ஒரு சில மணித்தியாலங்களை — வாரத்தில் அல்லது மாதத்தில் — மற்றவர்களுக்காகச் செலவிட வேண்டும் என்ற எண்ணம் எம்மக்களிடையே மிகவும் குறைவாகவே இருக்கின்றது. ஏனெனில் நாம் உளவளத்துணையை நாடி வருபவர்களிடம் எதுவித கட்டணமும் அறவிடுவதில்லை. எனவே உளவளத்துணையளிக்க முன்வருபவர்கள் ஓரளவு தங்கள் நேரத்தை மற்றவர்களுக்காகச் செலவழிக்கக்கூடிய மனநிலையில் வர வேண்டும் அப்படியானவர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே இருப்பதாக எனக்குப் படுகின்றது. நாங்கள் எத்தனையோ பேருக்கு இந்தப் பயிற்சியளித்து முடித்ததும் அவர்கள் மற்றவர்களுக்கு இந்த உதவியைச் செய்வதற்கு முன்வருவது மிகவும் குறைவாகவே இருக்கின்றது.

✱ நான்கு அணியினருக்குப் பயிற்சியளித்ததாகக் கூறுனீர்கள். அவர்களுக்குப் பயிற்சியளித்தது வீண் என எண்ணுகிறீர்களா?

● பயிற்சியளித்ததை நான் வீண் என்று சொல்லமாட்டேன். ஏனென்றால் அவர்கள் இதன் மூலமாகத் தங்களைத் தாங்களேயறிந்து முன்னேறக் கூடியதாக உள்ளது. அவர்களின் உதவியின் மூலம் அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள், கிராமத்தில் உள்ளவர்கள் சாந்திகத்திற்கு வராமலேயே — நாங்கள் பயிற்றுவித்தவர்களினூடாக—நிச்சயமாக உதவியைப் பெற்றுக்கொண்டிருப்பார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை.

✱ எனவே நிறுவனமாக உதவியளிக்கப்படவில்லையே தவிர பயிற்சி வீண் போகவில்லை என்று சொல்கின்றீர்கள்?

● ஆம். வீண்போகாது; வீண்போக முடியாது.

✱ சாந்திகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு எவ்வகையான செயற்பாடுகளை எதிர்பார்க்கின்றீர்கள்?

● சாந்திகம்ஆரம்பித்தது 1988இல். அதன் பின்னர் வேறு பல நிறுவனங்களும் இவ்வாறான செயற்பாடுகளைச் செய்யக் கூடிய நிலையில் வளர்ந்திருக்கின்றன. நாங்கள் இப்பொழுது பயிற்சியாளர்களைத் தெரிவு செய்து அவர்களை சமூகத்திற்கு — பாடசாலை, வைத்தியசாலைக்கு — அனுப்புவது ஒரு செயற்பாடு. இன்னுமொரு முக்கியமான செயற்பாடு ஆய்வுகளைச் செய்வது. இந்த இரண்டையும் வலுப்படுத்திக் கொண்டு வருகின்றோம்.

✱ எங்களுடைய சமூகத்தில் இன்னமும் பிழையான கருத்துக்கள் நிலவி வருகின்றன. அதாவது யாழ். போதனா வைத்தியசாலையில் மன நோயாளர் பிரிவுக்குப் போனால் அவன் ஒரு 'விசரன்' அல்லது 'பைத்தியக்காரன்' அல்லது 'குடும்பத்தால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவன்' என்றநிலை காணப்படுகின்றது. இதே போலவே உளவளத்துணையை நாடுபவர்கள் ஏதோ மூளைப்பிசகிற்குட்பட்டவர்கள் என்ற கருத்தும் நிலவுகின்றது. இதனைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன?

● ஆம். பல அறிஞர்களின் கருத்துப்படி நாம் எல்லோருமே சில நேரங்களில் இந்த மனச் சடங்கடங்களுக்கு ஆளாகி வருகின்றோம். உதாரணத்திற்குச் சொல்லப் போனால், குழந்தையொன்று குழப்படி செய்ய கோபந்தாங்காமல் அக்குழந்தைக்கு அடிக்கின்றோம் என்றால் அது உண்மையிலேயே அந்த நேரத்தில் எங்களுடைய மனம் பிறழ்ந்து விட்டது என்பதனையே காட்டுகின்றது. எங்கள் எல்லோருக்குமே மனவுடைவுகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. ஒரு சிலருக்கு இது அதிகம். சிலருக்கு இது குறைவு. இச் சங்கடங்களினின்றும் நீங்க ஒரு சிலர் இவ்வாறான நிலையங்களின் உதவியைப் பெற்று பழையபடி சாதாரண நிலைமைக்குத் திரும்பிவிடுகின்றனர். இந்த உதவியைப் பெறாதவர்களில் ஒரு சிலர் தாமாகவே நல்லநிலையை அடைகின்றனர். ஆனால் வேறு சிலர் இவ்வுதவியைப் பெறாததனால் இன்னும் ஆழமான வடுக்களுக்காளாகி மனநோயாளியாகி விடுகின்றனர்.

> **"தமது நேரத்தில் ஒரு சிலமணித்தியாலங்களை வாரத்தில் அல்லது மாதத்தில் — மற்றவர்களுக்காகச் செலவிட வேண்டும் என்ற எண்ணம் எம்மக்களிடையே மிகவும் குறைவாக இருக்கின்றது."**

மனத்தாக்கம், மனஅழுத்தம், மனநெகிழ்வு போன்ற பிரச்சினைகள் எல்லோருக்கும் இருக்கும் என்பதனை சமுதாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது சமுதாயத்தை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும் என்பது எங்களது மிகவும் பெரியதோர் ஆவல்.

✱ உளவளத்துணை அதாவது 'கவுன்ஸிலிங்' எனறால் உண்மையில் என்ன? இதனை யாரால், யாருக்கு, எவ்வாறு செய்யலாம் என்பதனைச் சுற்று விளக்கமாகக் கூறுவீர்களா?

'கவுன்ஸிலிங்' என்பதற்கு நல்ல தமிழ்ச் சொல்லை நாங்கள் தேடிக் கொண்டுதான் இருக்கின்றோம். தற்போது இதற்கு உளவளத்துணை என்ற சொல்லைப் பாவிக்கின்றோம். ஒரு சிலர் 'சீர்மியம்' — 'சீர்செய்தல்' — என்ற சொற்களைப் பாவிப்பது நல்லது எனக் கூறுகின்றனர். 'கவுன்ஸிலிங்' என்று சொல்லும் போது உண்மையாக ஒருவரது உள்ளத்திற்கு ஒரு துணை செய்கின்றோம். தன்னுடைய உள்ளத்திலுள்ள கிடக்கை அல்லது பிரச்சினையை வெளியே கொண்டு வருவதற்கும் அந்தப் பிரச்சினைக்குத் தானாகவே

(VIII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'லவ்' லேன்

சஞ்சீவி சிறுகதை

பிரதான வீதியிலிருந்து கிளைவிட்டுச் சென்ற அந்த ஒழுங்கையின் நிசப் பெயர் மங்கி மறைந்து, காரணப் பெயரான லவ் லேன் (Love Lane) என்ற நாமமே நிலைத்து விட்டது!

அந்த ஒழுங்கை அமைந்துள்ள இடத்தை உங்களுக்குத் தெரியுமோ என்னவோ, 'பெதும்பை' பருவமடைந்த பெரும்பாலான பெண்பிள்ளைகளுக்கும் ஒத்த வயதுள்ள இளைஞர்களுக்கும் 'லவ்லேன்' எங்கிருக்கிறதெனத் தெரியாமலிருக்க ஞாயமில்லை.

துரதிர்ஷ்ட வசமாக அந்தக் கண்றாவி லேனில் அமைந்துள்ள ஒரு வீட்டில் குடியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு.

வாழ்க்கையின் பெரும் பகுதியை ஓடிக்களைத்து இளைப்பாற என் இல்லத்தில் தரித்திருக்கும் எனக்கு, என் வாலிப வயதில் கண்டும் கேட்டுமிராத விந்தைகளைக் காண வேண்டிய நிர்ப்பாக்கியம்.

காலை உணவுக்காக பிரதான வீதியிலிருக்கும் கடையொன்றில் அரை இறாத்தல் பாணும் இரண்டு வாழைப்பழங்களும் வாங்கிக் கொண்டு இந்த ஒழுங்கையால் திரும்பி எனது வீடு நோக்கி வந்து கொண்டிருந்தேன்.


அந்த ஒழுங்கையின் ஓரத்தில் எனது வீடு அமைந்துள்ள காணியின் எல்லைகளுக்கு உட்பட்ட பகுதியில் இரு உருவங்கள்.

இருவரும் தத்தமது துவிச்சக்கர வண்டிகளின் கைப்பிடிகளை இறுகப் பற்றியவாறு, இருவருடைய வண்டிகளும் அவரவர்களின் வலப் புறங்களில் நிற்க, இருவருக்கிடையிலும் தடையேதுமின்றி அவர்கள் நெருக்கமாக நின்றது, அவர்கள் எதிர்த் திசையிலிருந்து வந்து ஒன்றுகூடியிருக்கிறார்கள் என்பதைப் புலப்படுத்தியது.

நான் அவர்களைக் கடக்கும் போது அந்த இளைஞன், வேண்டுமென்றே எனக்குக் கேட்கக் கூடியதாக — ''அம்மாவுக்குச் சொல்லும், போனகிழமை வர நேரமில்லாமல் போச்சு, வாறகிழமை கட்டாயம் வாறனெண்டு'' எனக் கூறியது தாங்கள் கள்ளக் காதலர்கள் அல்லர் என்று நம்பக்கூடிய ஒரு முட்டாள் நான் என்ற எண்ணத்தில்தான்.

அவன் பேசத் தொடங்கியதும் அவர்களின் முகங்களை நான் கவனிப்பதற்கு ஒரு வாய்ப்பாகப் போய்விட்டது.

பெண்பிள்ளையின் முகத்தையே முதல் நோக்கினேன். கவிஞர்கள் அழகிகளின் முகத்தை மாதுளங்கனிக்கு ஒப்பிடுவதில் கருத்துண்டு என எண்ணியவாறு அடுத்தாற்போல் இளைஞனின் முகத்தை நோக்கியதும், மனிதனின் பரிணாம வளர்ச்சி பற்றிய டார்வினின் தத்துவத்தில் (Darwin's Theory) உண்மை இருக்கக்கூடும் என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது. அப்படியிருந்தும் இவள் அவனை விரும்பியது 'காதலுக்குக் கண்ணில்லை' என்பதனாலா?



சிந்தித்தவாறே சோடிகள் நின்று கொண்டிருந்த இடத்துக்கு அண்மையிலிருந்த எனது வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு வீட்டினுள் பிரவேசித்து, பாணையும் வாழைப் பழத்தையும் வைத்துவிட்டுத் திரும்பவும் முற்றத்துக்கு வந்தேன்.

இப்பவும் அவர்கள் பேசுவது இலேசாகக் காதுகளில் விழுந்தது. அந்தச் சோடிகளுக்கும் எனக்குமிடையில் உயரமான தகர வேலியிலிருந்தது. பார்வையை மறைத்த அந்த வேலிக்கு ஒலியைத் தடுக்க முடியவில்லை. இவர்கள் என்னதான் கதைக்கிறார்கள் என்று அறிய வேண்டும் என்ற எண்ணம் வேடிக்கையாக என்னுள் தோன்றியது!

நான் செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு, சோடிகள் நின்று உரையாடும் பக்கத்து வேலியண்டை சென்றேன்.

''நான் சத்தியமாய் தற்கொலை புரிவேன்''

அந்தப் பெண்பிள்ளையின் வார்த்தைகள் தெளிவாக என் காதுகளில் விழுந்த மறுகணம், துவிச்சக்கர வண்டிகளை உருட்டும் சப்தம் கேட்டது. வேலியின் சிதைந்த பகுதியால் மெதுவாக எட்டிப் பார்த்தேன். பையன் பிரதான வீதிப் பக்கம் செல்ல, பெண்பிள்ளை என் வீட்டுப் படலையை நோக்கி எதிர்த் திசையில் வந்துகொண்டிருந்தாள். எனது வீட்டுப் படலைக்கு அருகில் அவள் வந்ததும் நான் —

''தங்கச்சி இங்கை வாரும்'' என்று உள்ளே அழைத்து விறாந்தையிலிருந்த ஒரு நாற்காலியைச் சுட்டிக்காட்டி ''இதில் ஒரு நிமிடம் இருந்து, நான் சொல்வதை அமைதியாகக் கேளும். நீர் கூறவேண்டியதை எனது கதை முடிந்த பிறகு சொல்லலாம்'' எனக் கூறியதும் அவள் நாற்காலியில் அமர நான் தொடர்ந்தேன்...

''தாய் தந்தையர் ஒரு பிள்ளையைப் பெற்று, பாலூட்டிச் சீராட்டி வளர்த்து, நோயுற்ற போது துடி துடித்து மருந்தூட்டிக் குணமாக்கி, கல்வி புகட்டி, ஆளாக்கி, கற்றோர் அவையில் முந்தியிருக்கச் செய்து, பொருத்தமான வாழ்க்கைத் துணையைத் தருகினம். இப்படி எத்தனை தன்னலமற்ற தியாகங்களைச் செய்யும் முன்னறி தெய்வங்களை மறந்து, பருவ உளைச்சல்களுக்கு அடிமையாகி ஊர் பேர் தெரியாத ஒரு பையனின் பகட்டு வார்த்தைகளில் ஏமாந்து, காதல் தோல்வியுற்றால் சாதலே ஒரு வழியென்று தற்கொலை புரியுமளவுக்குப் போகலாமா? இதுதான் பெற்றோரின் தியாகங்களுக்கெல்லாம் பிள்ளைகள் செய்யும் கைமாறா? தங்கச்சி, இது சரியாக, நீதியாகத் தோன்றுகிறதா உமக்கு?...''

அவள் திகைப்புற்றது போல் தோன்றியது.

''ஐயா, நீங்கள் என்ன சொல்லுறியள்?'' என வியப்புடன் கேட்டவாறு என்னை நோக்கினாள்.

''சற்று முன்னர்தானே தங்கச்சி, நீர் 'சத்தியமாய் நான் தற்கொலை புரிவேன்' என்று உம்முடன் கதைத்துக் கொண்டு நின்ற இளைஞனுக்குச் சொன்னதும், அவன் உடனே சைக்கிளை எடுத்துக் கொண்டு போனதும் பொய்யா?...''

''அதுவா ஐயா? 'கண்ணாரக் கண்டதும் பொய் காதாரக் கேட்டதும் பொய். தீர விசாரித்தறிவதே மெய்' என்றுசொல்லுறதிலை எவ்வளவு உண்மை இருக்கு பாத்தியளா?... நேற்று 'கறன்ட்' தாற நாள்தானே ஐயா! ரீ. வி. யிலை ஒரு நல்ல படம் போட்டாங்கள், அந்தக் கதையைச் சுருக்கமாக அவருக்குச் சொல்லிக் கொண்டிருந்த போது, அதில் வாற கதாநாயகி தன் கணவனுடன். சண்டையிட்டுக் கொண்டு, 'சத்தியமாய் நான் தற்கொலை புரிவன்' எனச் சொன்னாள் என்று நான் கூறி முடிக்கமுன் அந்தப் பையனின் தகப்பன் தூரத்தில் வருவதைக் கண்டதும் 'அப்பா வாறார்' என்று மெதுவாகக் கூறிக் கொண்டே சைக்கிளை எடுத்துக் கொண்டு அவர் புறப்பட நானும் அந்தளவுடன் நிறுத்திப் போட்டு வாறன் ஐயா...'' என அவள் கூறியதும், நான் அவள் முன் கூனிக் குறுகிப் போனேன். இருந்தும் ஒரு பொதுப் பாதையில் தனிமையாக ஒரு இளைஞனுடன் நின்று மணிக்கணக்கில் கதைத்துக் கொண்டிருக்கத் துணிவுள்ள ஒரு பெண்பிள்ளைக்கு இப்படிக் 'கயிறு திரிக்க' தெரியாமலா இருக்குமென்றும் எனக்குள் நினைத்துக் கொண்டேன்!

- ப. தெய்வேந்திரன்

★

[யாவும் கற்பனை]

# வித்தியாசமான பாம்பு

உருவகக் கதை

இந்த உருவகக் கதையில் வரும் 'வித்தியாசமான பாம்பு' யார் என்பது வாசகர்களின் ஊகத்துக்கு விடப்படுகின்றது. (ஆ-ர்)

வீட்டுப் படியில் கால்வைக்கும்போதுதான அன்று மாலை மதுராவின் பிறந்ததின வைபவத்திற்குப் போகவேண்டுமென்று சியாமளா காலையில் கூறியது நினைவிற்கு வந்தது. காய்ச்சலால் ஒரு வாரகாலம் படுத்திருந்து விட்டு அன்றுதான் பணியகத்திற்குப் போய்த் திரும்பியிருந்தேன். உடல் ஒரே அசதியாக இருந்தது.

'...சியாமளா ஆயத்தமாக இருப்பாள். இனியும் அலையமுடியாது. மகன் திவாகரனுடன் சியாமளாவை அனுப்பிவைப்பதுதான் நல்லது...'

ஒரு தீர்மானத்துடன் உள்ளே நுழைகிறேன்,

உள்ளே சென்று உடை மாற்றும்வரை என் மனைவி என் கண்ணில் படாதது ஆச்சரியத்தைத் தருகிறது.

நேரத்துடன் வரவில்லையென்ற கோபமோ? தனது கோபத்தை, கவலையை இப்படித்தான் அவள் வெளிப்படுத்துவது வழக்கம்.

தேநீருடன் உள்ளே வந்தாள் மகள் ரம்யா.

''என்ன அம்மாவைக் காணேல்லை......என்ன... நடந்தது?''

''...உங்களுக்கு நடந்தது தெரியாதே அப்பா! அந்தப் பாம்பை அடிச்சுச் சாக்கொல்லிப்போட்டினம்... ''

''எந்தப் பாம்பை?''

எனக்கு எதுவுமே புரியவில்லையென்பதை என் கேள்வி மகளுக்குப் புலப்படுத்தியிருக்கும்.

''அம்மன் கோயிலிலை இருந்ததே...அதுதான்.அம்மா... ஒரே கவலையாயிருக்கிறா... அவ வெள்ளி, செவ்வாயெல்லாம் போய் கும்பிடுகிறவவெல்லே...'' மகள் விளக்கினாள்.

''அது அரசமரத்திலை தானே இருக்கிறது. கோயிலுக்குள்ளை போய் மரத்திலை ஏறி அதை என்னண்டு சாக்கொல்லிச்சினம்?''

என் மனதிலேற்பட்ட சந்தேகம் வாய் வழியே வந்தது.

''அது வெளியிலை வந்திருக்கு. அந்த ஆலமரத்தடியிலைதான் அடிச்சுப்போட்டிருக்கு...'

''ஆர் அடிச்சுப்போட்டது?''

''உவங்கள் சிவாவையள் தான் அடிச்சுப்போட்டிருப்பினம்'' என்கேள்விக்குப் பதில் கூறிக்கொண்டே சியாமளா உள்ளே வந்தாள்.

''அம்மா எப்பவும் அவங்களிலைதான் குற்றஞ்சாட்டுவா...'' என்று குற்றஞ்சாட்டிக் கொண்டே தாயைத் தொடர்ந்து மகன் திவாகரன் பின்னே வந்தான்.

''அவங்களுக்கு உதுதான் வேலை'' சியாமளா தீர்மானமாகவும் கோபமாகவும் சொன்னாள்.

''ஏன் அடிச்சவங்கள்?'' நான் குறுக்கிட்டேன்.

''ஏன் அடிச்சது? ஆர் அடிச்சது? எண்டு ஒண்டும் தெரியாதப்பா. அம்மா சும்மா சொல்லுறா'' ரம்யாவின் பதிலைக் கேட்டதும் சியாமளாவில் எனக்குக் கோபம் வந்தது.

''காணாததைக் கண்ட மாதிரிச் சொல்லி வீண் வம்பை விலைக்கு வாங்குறீர்'' காரம் என் சொற்களில் குடியேறியிருந்தது.

''ஒரு நாளைக்கு உண்மை வெளியிலை வருந்தானே. இருந்து பாருங்கோ...அவங்களுக்கு அதிலை நம்பிக்கையில்லை''

''அவை சொல்லுறதும் சரிதானே அம்மா. பாம்பு பாம்புதான். நீங்கள் பால் வார்த்தாலும் அது தன்னுடைய இயல்பான குணத்தைக் காட்டி கடிக்கக்கூடும்...''

திவாகரன், சிவா முதலிய தன் நண்பர்களின் கருத்துச் சரியென வாதிட்டான்.

''அந்தப் பாம்பைக் கண்ணாலை கூடப் பார்த்திருக்க மாட்டாய்...அதைப் பொல்லாத பாம்பெண்டு எப்பிடிச் சொல்லுறாய்?''

அந்தத் தெய்வீகப் பாம்பு பல நன்மைகள் செய்த பாம்பு. அது யாருக்கும் தீங்கு செய்யாது என்று உறுதியாக நம்பினாள் சியாமளா.

''அது கோயிலிலை நல்ல பிள்ளையாய் இருந்துதோ என்னவோ. என்னைப் பொறுத்தவரை அது எத்தினையோ [illegible] சாக்கொல்லி [illegible] இப்ப வெளி யிலை போய் என்ன செய்ய நினைச்சுதோ?''

திவாகரன் அதைத் தீங்கு செய்யாத பாம்பென்று தாயைத் திருப்திப்படுத்துவதற்காகக் கூட கூறத்தயாரில்லை.

நான் ஆற அமர இருந்து, தேநீர் அருந்திமுடித்தும் அவர்களது விவாதம் முடிந்தபாடாக இல்லை.

''சரி, பாம்பு செத்துப் போச்சு, அது செத்ததுக்கும் உங்களுக்கும் ஒரு தொடர்புமில்லை. வீணாய் ஏன் சண்டை போடுறியள்?'' அவர்களது விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர முயன்றேன்.

''சும்மா நாகத்தைக் கண்டாலே கூடாது. இது கோயில் பாம்பு...ஊருக்கு என்ன நடக்கப் போகுதோ?''

சியாமளாவின் மனத்திலிருந்த பயமும் கவலையும் குரலி

(XIII ஆம் பக்கம் பார்க்க)



- யோகேஸ்வரி சிவப்பிரகாசம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் முடிந்த பயணம்...

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை — குறிப்பாகக் குடா நாட்டுமக்களை பொறுத்தவரை — அவர்களது பயணப் பாதைகள் என்றைக்கும் ஆபத்துக்கள்நிறைந்ததாகவே இருந்து வருகின்றன.

அரசியல், இராணுவ, புவியியல் களநிலைவரங்களால் பயணப்பாதைகள் அடிக்கடி மாறுகின்றன; ஆனால் பயணங்களின் பயங்கரங்கள் குறையவே இல்லை.

இன்று நேற்றுஅல்ல; கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக அவலங்களின் முடிந்து போன பயணங்கள் எத்தனை எத்தனை?

ஆனையிறவு ஊடாகதரைப் பாதை வழியே செல்ல முடிந்த காலத்திலும்சரி, கிளாலி, கடல் நீரேரி வழிப் பாதையூடாகப் பயணிக்க நேர்ந்தபோதிலும்சரி எத்தனையோ தமிழர்களின் உயிர்கள் பாதிவழியில் பறிக்கப்பட்டன.

தரைப் பாதை ஊடாக பஸ்களிலும் ரயில்களிலும் தெற்கே சென்றுவந்த காலங்களில் வழிநெடுகிலும் அடிக்கடி இடம்பெற்ற அனர்த்தங்களைக் காலம் மறைத்துவிடுமா?

இன்று ஆழ்ந்து உறங்கும் கிளாலி நீரேரி ஒரு காலத்தில் செந்நீராய் மாறியிருந்த கதையை எவரால் மறக்க முடியும்? இருளைக் கிழித்துச் சென்ற படகுகளில் உயிரை வெறுத்துப் புறப்பட்டு அக்கரை சேராதவர்கள் எத்தனைபேர்?

ஆழ் சமுத்திரமான பாக்கு நீரிணையை ஒரு பொருட்டாகக் கருதாமல் ஏதிலிகளாய் தமிழகம் நோக்கிப் பயணித்த பல குடும்பங்களுக்கு சமுத்திரமே சமாதியாகிப்போன கதைகள் எத்தனை?

பயணவழிகளில் பாதியில் பலியானோரின் ஒரு நீண்ட பட்டியல் தமிழர் போராட்ட வரலாறுடன் தொடர்ந்தே வருகிறது. அதில் ஆகக் கடைசியாகச் சேர்ந்திருப்பதுதான் 'லயன் எயர்' விமான அனர்த்தம்.

முதல் முறையாக விமான அனர்த்தம் ஒன்றில் ஒட்டுமொத்தமாகச் சிக்கிய சொந்த மண்ணின் மக்களின் பல சடலங்கள் இதனை எழுதிக்கொண்டிருக்கும்போது ஆங்காங்கே கரை ஒதுங்கிக்கொண்டிருப்பதாக தகவல்கள் கிடைத்துவருகின்றன.


உருக்குலைந்த சடலங்களை அலைகள் சுமந்து வந்து கரை சேர்ப்பது வடபகுதி கரையோரங்களில் ஒன்றும் புதுமையான செய்தியல்ல; அது ஓர் இயற்கையின் நிகழ்வுபோல நிரந்தரமாகி வருகிறது,

மக்களை அதிர்ச்சியில் உறைய வைத்த சம்பவங்களில் ஒன்றாக இதுவும் நிகழ்ந்து விட்டது.

29 — 09 — 1998 செவ்வாய்க்கிழமை காலை பயண ஏற்பாடுகளுடன் யாழ். ரயில் நிலையப் பகுதிக்கு வந்தவர்களைப் பொறுத்தவரை அது அவர்களால் என்றைக்கும் மறக்க முடியாத நாளாகி விட்டது. அதிலும் 'அந்த 48' பேரும் அதுதான் தங்களின் இறுதி யாத்திரை என்பதை கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள்.

விமானசேவை இன்று நடக்குமா என்ற ஐயங்களுடன் வந்த அவர்கள் சேவை நடைபெறும் என அறிந்தபோது முண்டியடித்துக் கொண்டு கிளம்பினர். தனியார் நிறுவனமான 'லயன் ஏயர்' நிறுவனத்தின் விமானங்கள் அன்று பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் மூன்று சேவையில் ஈடுபட்டன. முதலாவது விமானம் 48 பயணிகளை ஏற்றிக் கொண்டு முதலில் புறப்பட்டது. 'பறப்பு இலக்கம் 602' ஐக் கொண்ட இரண்டாவது 'அன்ரனோவ்' (ஏ. என். 24) பிற்பகல் சரியாக 1. 30 மணிக்குப் பலாலியில் இருந்து புறப்பட்டது. 18 முதல் 80 வரையான வயதுக்கு இடைப்பட்ட 48 பயணிகள் பல்வேறு தேவைகளின் நிமித்தம் அதில் பயணம் செய்தனர். 29 ஆண்களும், 19 பெண்களுமாக மொத்தம் 48 பயணிகளும், ஏழு விமானச் சிப்பந்திகளும் அதில் இருந்தனர். ரஷ்ய விமானியான மரோச்கோ அனற்றோலி, உதவியாளர்களான லிசைவனோவ், கோலோவ் சேர்கி, விமான பொறியியலாளர் அனபிரியங்க சிராய்ச்சி, 'லயன் ஏயர்' நிறுவனத்தைச் சேர்ந்த தர்ஷினி குணசேகர, கிறிஷான் நெல்சன் மற்றும் பணியாளர் விஜிதா ஆகியோரே அந்த ஏழு பேரும் ஆவர்.

இந்த விமானம் கால அட்டவணைப்படி அன்று பிற்பகல் 2.30 மணிக்கு இரத்மலானை விமானத் தளத்தில் தரையிறங்கி இருக்க வேண்டும். ஆனால் பலாலியில் இருந்து புறப்பட்ட 10 நிமிடநேரத்துக்கெல்லாம் திடீரென தரைக் கட்டுப்பாட்டு நிலையங்களுடனான தொடர்புகளை அது இழந்தது. 'ராடர்' திரையில் இருந்து விமானம் மறைந்தபின் அது காணாமற் போனது.




விமான சேவைகளை நிறுத்துமாறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்ததால் பாதுகாப்புத் தரப்பினரின் ஆலோசனைப்படி வழமையாகச் செல்லும் பாதையை விமானி மாற்றியிருந்ததாகக் கூறப்படுகிறது. தெற்குக் கரையோரமாக புதிய பாதையிலேயே கடந்த சில தினங்களாக இந்த விமானங்கள் சென்று வந்தன.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ள — இராணுவக் கட்டுப்பாடற்ற — வன்னிப் பிரதேசத்தை அண்டிய மன்னார் வான்பரப்பில் பறந்தபோதே விமானம் காணாமற் போனதால் விமானத்துக்கு என்ன நடந்தது என்பது தெரியவர 48 மணித்தியாலங்களுக்கும் மேல் சென்றது.

விமானம் காணாமற் போனதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் ஏற்பட்ட ஊகங்களைப் போலவே முதலில் படைத் தரப்பிலும் பல ஊகங்கள் நிலவியதாகத் தெரிய வருகிறது. விமானப்படைத் தலைமையகத்துக்கும் இராணுவத் தலைமையகத்துக்கும் செய்தி பறந்தது. ஆனால் கிளிநொச்சி மற்றும் மாங்குளம் பகுதியில் உக்கிரச் சமர் வெடித்திருந்ததால் படைத் தலைமையகங்களின் முழுக் கவனமும் அந்தப் பகுதிகளிலேயே குவிந்திருந்தது. படையினரின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக விமானம் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் முதலில் பாதுகாப்பு வட்டாரங்களில் எழுந்ததாகத் தெரியவருகிறது. ஆனால் விமானத்தைக் கடத்திச்சென்றால் அதை எங்காவது தரையிறக்கியே ஆகவேண்டும். அதற்கான வசதிகள் எதுவும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இல்லை. எனவே வெளிநாடு ஒன்றுக்கே அதனைக் கொண்டு சென்று தரையிறக்க வேண்டும். ஆனால் அதற்கு வசதியாக விமானத்தில் எரிபொருள் இருக்குமா என்பதும் சந்தேகமே. ஆகவே விமானம் கடத்தப்பட்டிருக்க வாய்ப்பு இல்லை என்றே பாதுகாப்பு வட்டாரங்கள் கருதின.

விமானம் காணாமற்போய் 24 மணிநேரத்தின் பின்னரும் அது கடத்தப்பட்டிருக்கச் சாத்தியம் உண்டு என்ற கருத்து 'லயன் ஏயர்' நிறுவன வட்டாரங்களிலும் நிலவியது. பயணிகள் அனைவரும் எங்கோ ஓர் இடத்தில் பத்திரமாக இருப்பதாகக்கூட குடாநாட்டிலும் மக்கள் பேசிக்கொண்டனர். அதைவிட அன்று நிலவிய சீரற்ற காலநிலை, இயந்திரக்கோளாறு, தரையில் இருந்தான தாக்குதல் அல்லது குண்டுவெடிப்பு இவைகளில் ஏதேனும் ஒன்றில் கூட விமானம் சிக்கியிருக்கலாம் என்ற ஊகங்களும் தொடர்ந்து நிலவின.

விமானம் மன்னார்ப் பகுதியில் கடலில் அல்லது தரையில் வீழ்ந்திருக்கலாம் என நம்பப்படுவதாகச் செய்திகள் வெளியாகிக்கொண்டிருந்தபோதும் அதனையும் உடனடியாக ஊர்ஜிதம் செய்யமுடியாதிருந்ததால் பயணிகளின் உறவினர்களிடையே ஏக்கமும் சோகமும் பதகளிப்பும் நீடித்தன.

## மறுபக்கம் — வார விமர்சனம்

நல்லூர் தாஸ்

விமானம் ஒன்று கரும்புகை கக்கியவாறு முகம் குப்புற கடலில் விழுந்ததைக் கண்டதாக மீனவர்கள் கூறிய தகவல் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் இருந்து வெளிவந்தபோதுதான் விமானம் தரையில் வீழ்ந்ததா கடலில் வீழ்ந்ததா என்பது உறுதிசெய்யப்பட்டது.

அதேசமயம் கடலில் வீழ்ந்த விமானத்துக்கு சற்றுத் தாமதமாகப் பின்னால் புறப்பட்ட இதே விமானசேவை நிறுவனத்தின் மற்றொரு சரக்கு விமானத்தில் காயமடைந்த பல படையினர் ஏற்றிச் செல்லப்பட்டதாக வெளியான செய்திகளும் —

இரணைதீவுக் கடலில் விமானம் வீழ்வதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் விமானத்தின் உள்ளே அமுக்கம் (Decompression) திடீரென இழக்கப்பட்டதால் விமானத்தின் கட்டுப்பாட்டைத் தான் இழந்து வருவதாகவும் அந்தக் காரணத்தினால் விமானத்தை உடனே திருப்பிக்கொண்டுவந்து பலாலி விமானத்தளத்தில் இறக்கப்போவதாகவும் சம்பந்தப்பட்ட விமானத்தின் விமானி பலாலி விமானநிலையக் கட்டுப்பாட்டு நிலையத்துக்கு அறிவித்திருந்தார் என சம்பந்தப்பட்ட நிறுவன அதிகாரி ஒருவரே தெரிவித்திருப்பதும் —

இந்த விமான அனர்த்தம் தொடர்பாகப் புதிய பலஊகங்களை ஏற்படுத்தின.

விமானத்தில் எங்காவது ஓர் இடத்தில் துவாரம் அல்லது வெடிப்பு ஏற்படும் பட்சத்திலேயே உள்ளே அமுக்க இழப்பு ஏற்பட முடியும். தரையில் இருந்து நடத்தப்படும் தாக்குதல் மூலம் அல்லது விமானக் கட்டமைப்பில் தானாகவே தற்செயலாக ஏற்படக்கூடிய சிதைவுகள் காரணமாக இத்தகைய துவாரங்கள் ஏற்படலாம். உள்ளே சீராகப் பேணப்படும் அமுக்கம் காரணமாகவே விமானங்கள் வளிமண்டலத்தில் கட்டுப்பாடு தளராமல் பறக்க முடிகிறது. ஆனால் இந்த அமுக்கச் சமநிலை குலையும்போது (Decompression) விமானம் கட்டுப்பாட்டை மீறித் தடுமாறிப் போகிறது.

விமானத்தின் உள்ளே திடீரென அமுக்க வீழ்ச்சி ஏற்பட்டதாக 'லயன் ஏயர்' விமானத்தின் விமானி கூறியிருப்பது விமானத்தில் எங்கோ துவாரம் அல்லது சிதைவு ஏற்பட்டிருக்க வேண்டும்: தாக்குதல் அல்லது குண்டு வெடிப்பின் மூலம் அது நிகழ்ந்திருக்கலாம் என்றும் ஊகிக்கச் சாத்தியமாகிறது. ஆனால் வெடி ஓசை ஏதாவது கேட்டதாக விமானி தனது கடைசித் தகவலில் தெரிவிக்கவில்லை. கடைசிச் செக்கன் வரையான தகவல்களைப் பதிவு செய்யும் 'கறுப்புப் பெட்டி' கிடைத்தால் சில வேளைகளில் இந்தத் துப்பு துலங்கலாம்.

விமானத்தில் ஏற்பட்ட அமுக்க வீழ்ச்சி அது தாக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதால் விடுதலைப் புலிகளே விமானத்தை இலக்கு வைத்துள்ளனர் என்று சில தரப்புக்களில் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.

குடாநாட்டுக்கும் கொழும்புக்கும் இடையேயான விமான சேவைகளை நடத்த வேண்டாம் என 'லயன் ஏயர்', 'மொனரா ஏயர்' ஆகிய இரு விமான சேவை நிறுவனங்களினதும் யாழ். முகவர்களுக்கு விடுதலைப் புலிகள் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தனர். அது மட்டுமன்றி கணனி எழுத்தமைப்பில் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் மூலம் பொது மக்களையும் புலிகள் எச்சரித்திருந்தனர்.

'...குடாநாட்டு மக்களுக்குப் பாதை திறப்பு, போக்குவரத்து எனச் சொல்லி இராணுவம் தன்னுடைய நலன்களை முழுமையாகப் பாதுகாத்துக் கொள்ளும் செயற்பாட்டை மிகவும் நுணுக்கமாகச் செயற்படுத்தி வருகிறது என்றும் —

விமான சேவைகளை மக்களிடமிருந்து பெருந்தொகையான பணத்தைச் சுரண்டுவதோடு தனது இராணுவ நோக்கங்களையும் நிறைவேற்றி வருகின்றது எனவும் —

இராணுவத்தின் போக்குவரத்துக்கும் உளவு பார்த்தலிற்கும் மிகவும் நுட்பமாக இதைச் செயற்படுத்திவருகிறது; இதன் காரணமாக விமானப் போக்குவரத்தைத் தடை செய்வதும் அதனை மீறுகின்ற பட்சத்தில் நாம் நடவடிக்கை எடுப்பதும் தவிர்க்க முடியாததே எனவும் —

எனவே விமானப் போக்குவரத்திற்கூடாகப் போக்கு வரத்தைத் தவிர்த்து கப்பல்கள் ஊடாகப் பயணம் செய்வது கூடுதலான பாதுகாப்பாக இருக்கும் என்பதைத் தெரியப்படுத்துகிறோம் என்றும்—

புலிகளின் அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து பயணிகள் விமானப் போக்குவரத்து தொடர்பாக ஒரு நிச்சயமற்ற நிலை குடாநாட்டில் உருவாகியிருந்த போதிலும் சம்பந்தப்பட்ட இரு விமான நிறுவனங்களும் பலாலிக்கான தமது சேவைகளை நிறுத்திக் கொள்ளவில்லை. வேறு பயண மார்க்கங்கள் இல்லாததால் மக்களும் தொடர்ந்து விமானப் பயணங்களை மேற்கொண்டனர்.

புலிகளின் எச்சரிக்கையைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட விமான நிறுவனங்களினது யாழ். முகவர்களாக இயங்கிய இரு தனியார் வர்த்தகர்களும் அப்பணியில் இருந்து விலகிக் கொண்டனர். யாழ்ப்பாணத்தையே தளமாகக் கொணடவர்கள் என்பதால் அவர்கள் தமது பாதுகாப்புக் குறித்துச் சிந்திக்கவேண்டி ஏற்பட்டது. ஆனால் கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் இந்த விமான நிறுவனங்கள் இரண்டும் புலிகளின் அச்சுறுத்தல்களைப் பொருட்படுத்தாமல் தட்டிக்கழித்ததாகவே தெரிகிறது. விமான சேவையைத் தொடர்ந்தும் நடத்துவதிலேயே அவர்கள் அதிக சிரத்தை காட்டியுள்ளனர்.

விமானப் போக்கு வரத்தைத் தவிர்க்குமாறு பொது மக்களை எச்சரித்துப் புலிகள் விடுத்த துண்டுப் பிரசுரங்களின் பிரதிகள் செய்தியாளர்களுக்கும் கிடைத்திருந்தன. ஆனால் அவற்றை அப்படியே வரிக்கு வரி செய்தியாகவெளியிட முடியாத தள நிலைமை இருப்பதால் பத்திரிகைகள் மூலமோ, தொடர்பு சாதனங்கள் மூலமே அந்த எச்சரிக்கை பொது மக்களை முழுமையாகச் சென்றடையவில்லை.

இத்தகைய பின்னணியிலேயே 'லயன் ஏயர்' விமான அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. விமானப் பயணம் குறித்துப் புலிகள் விடுத்த எச்சரிக்கைகள் மக்களைச் சென்றடையவில்லை. எனவே அவர்கள் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்டுள்ளனர் என்ற சாரப்பட தமிழ்க் கட்சிகள் தரப்பில் இருந்தும் கண்டனக் குரல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இரணைதீவுக் கடலில் வீழ்ந்த விமானத்தைப்புலிகளே தாக்கினார்கள் என்று பாதுகாப்புப் படைகள் தரப்பில் இருந்தோ அரச தரப்பிலிருந்தோ இதனை எழுதும்வரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை;

விமானம் தாக்கப்பட்டதை நேரில் கண்டதாக எவரும் உறுதிப்படுத்தவும் இல்லை; புலிகள் தரப்பிலிருந்தும் எந்த அறிவிப்பும் வரவில்லை. இந்தநிலையில் தமது எச்சரிக்கையை மீறியதாகப் புலிகளே விமானத்தைச் சுட்டனர் என ஒரு தலைப்பட்சமான நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டு கருத்துக்களை வெளியிட முடியாது.

குடாநாட்டுக்கான பயணிகள் சேவையில் ஈடுபடும் விமானங்களைப் படையினர் பயன்படுத்திவருவதாக புலிகள் அடிக்கடி குற்றஞ்சாட்டி வந்துள்ளனர். புலிகளின் இந்தக் குற்றச்சாட்டைப் படைதரப்பினர் மறுத்து வந்தபோதும் சம்பந்தப்பட்ட இரு விமானசேவை நிறுவனங்களும் இக்குற்றச்சாட்டை அடியோடு நிராகரிக்கவில்லை.

விமான அனர்த்தம் நிகழ்ந்த பின்னர் கருத்து வெளியிட்ட 'லயன் ஏயர்' நிறுவனத்தின் பணிப்பாளரும் முன்னாள் விமானப்படைத் தளபதியுமான படி மெண்டிஸ் தமது நிறுவனத்தால் சேவையில் ஈடுபடுத்

(XIII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்பாவின் பிதாமகர் மகாகவியே!

26.09.98 ஆம் திகதி வெளிவந்த சஞ்சீவியில் குறும்பாவின் பிதாமகர் யார் என்ற வினாவை எழுப்பி, அவர் மகாகவியா அல்லது சில்லையூர்ச் செல்வராசனா என்ற சந்தேகத்தைத் தீர்க்கும்படி கேட்கப்பட்டிருந்தது.

'குறும்பா' எனும் கவிதை வடிவத்தைத் தமிழுக்கு அறிமுகஞ் செய்தவர் மகாகவிதான் என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை. இதை நிறுவுவதற்கு நான் பின்வரும் ஆதாரங்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

சில்லையூர்ச் செல்வராசனும் நானும் ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரியில் ஒரே காலத்தில் கல்வி பயின்றவர்கள். அக்காலத்திலிருந்தே நாம் இருவரும் நெருங்கிய நண்பர்களாகப் பழகி வந்திருக்கின்றோம். எமது நெருங்கிய நட்புக்கு கவிதையும் நாட்டுக் கூத்துமே காரணங்களாகும்.

1960 ஆம் ஆண்டிலிருந்து நான் கொழும்பிலும், மலையகத்திலும் ஆசிரியப் பணிபுரிந்து வந்த காலத்தில், நானும் நண்பர் செல்வராசனும் (1977 வரை) அடிக்கடி கலைவிழாக்களிலும் — குறிப்பாகக் கவியரங்கங்களிலும் — வானொலி நிலையத்திலும் சந்திப்பதுண்டு. அக்கால இலக்கியப் போக்குகள் பற்றியும், எழுத்தாளர்கள் பற்றியும் நாம் கலந்து உரையாடுவது வழக்கம். அவருடைய கவிதைகளை நானும், என்னுடைய கவிதைகளை அவரும் பாராட்டியும், கடுமையாக விமர்சித்தும் வந்திருக்கின்றோம். ஆனால் எச் சந்தர்ப்பத்திலாவது சில்லையூரார் 'குறும்பா' எழுதியதாகவோ அல்லது பத்திரிகைகளில் அவரது குறும்பா ஏதாவது வெளிவந்ததாகவோ என்னுடைய அறிவுக்கு எட்டியவரை இல்லை. ஆனால் மகாகவியின் 'குறும்பா' நூல் வெளிவந்த பின்னர் அதில் உள்ள சில பாடல்களை சிலாகித்து இவர் கூறியுள்ளார்.

இது நிற்க —

மகாகவிக்கும் எனக்கும் நெருங்கிய நட்பை ஏற்படுத்தியவர் என்னுடைய ஆசிரியர் எஸ். பொன்னுத்துரையாவார். அதனால் கொழும்பில் நடைபெற்ற மகாகவியின் 'குறும்பா' வெளியீட்டுக்குச் சென்றிருந்தேன்.

அந்த வெளியீட்டின்போது, மகாகவிதான் 'குறும்பா' எனும் வடிவத்தை தமிழுக்கு அறிமுகஞ் செய்தவர் என எஸ். பொன்னுத்துரையும், கவிஞர் (நாவற்குழியூர்) க. செ. நடராசாவும் பலரும் பாராட்டிப் பேசினர். இப்பாராட்டுரைகள் வீரகேசரி, தினகரன், சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளிவந்தன. இவற்றை மறுத்து எவரும் எப்பத்திரிகைகளிலும் எழுதவேயில்லை. இது தவறான தகவலாக இருந்திருந்தால் நிச்சயமாக சில்லையூர் செல்வராசன் மறுப்புத் தெரிவிக்காமல் விட்டிருக்கமாட்டார். ஏனெனில் இரசிகமணி கனக. செந்திநாதன் கூறிய ஒரு சிறு விடயத்துக்கு கருத்து வேறுபாடு காரணமாக பத்துக் கட்டுரைகள் 'மறுத்தானாக' தினகரனில் தொடர்ந்து எழுதியவர் என்னுடைய நண்பர் சில்லையூர் செல்வராசன் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய விழாவில் கலந்து கொண்டவர்களில் கவிஞர் வி. கந்தவனம், செட்டியார் அச்சக உரிமையாளர் சங்கர் ('சுதந்திரன்' பத்திரிகை முன்னாள் ஆசிரியர் — பூங்குன்றன்'), கவிஞர் அம்பி ஆகியோரும் அடங்குவர். இவர்களும் இதற்குச் சான்று பகர்வர்.

'குறும்பா' எனும் கவிதை நூல் 1966 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது. இதனை கொழும்பு அரசு வெளியீட்டகம் வெளியிட்டது. அரசு வெளியீட்டின் சார்பில் பதிப்புரை எழுதிய எம். ஏ. ரஹ்மானும் தனது பதிப்புரையில் மகாகவியே குறும்பாவின் தந்தையென வலியுறுத்திக் கூறியுள்ளார். (குறும்பா, 1966: பக். 08)

**குறும்பாவின் பிதாமகர் மகாகவி என சஞ்சீவியில் வெளியான ஒரு தகவலை மறுத்துரைத்து, சில்லையூர் செல்வராசனே குறும்பாவின் தந்தை எனத் தெரிவித்து 'இலக்கிய சர்ச்சை' ஒன்றை சஞ்சீவியில் மாவை. வரோதயன் ஆரம்பித்து வைத்தார். அதற்கு இங்கு பதில் தருகின்றனர் இரு இலக்கிய விற்பன்னர்கள்.**

**(ஆ-ர்)**

குறும்பாவுக்கு 'முன்னீடு' என்ற தலைப்பில் எஸ். பொன்னுத்துரை ஓர் அருமையான அணிந்துரை வழங்கியுள்ளார். அவ்வுரையிலும் குறும்பாவின் மூலகர்த்தா மகாகவி என்பதை தெளிவாகக் கூறியுள்ளார். ''மகாகவி குறும்பாவில் அறிமுகப்படுத்தும் செய்யுளுக்கான யாப்பு முறையை விளக்குதலும் என் கடமையாகின்றது'' (குறும்பா 1966: பக். 12—13) எனக் குறும்பாலின் யாப்பை விளக்கி குறும்பாவின் தந்தை மகாகவியே எனச் சந்தேகத்துக்கிடமின்றி நிறுவியுள்ளார். இந்நூல் வெளிவந்த பின்னரும், சில்லையூர்ச் செல்வராசனோ அன்றிப் பிறரோ ஆட்சேபனை தெரிவித்து எந்தப் பத்திரிகைகளிலும் உடனடியாகவோ அன்றிப் பின்னரோ (சில்லையூரார் உயிர் வாழும் வரை) எழுதவில்லை. இது இவ்வாறிருக்க இப்பொழுது இரண்டொருவர்

**காரை செ. சுந்தரம்பிள்ளை**

(XIII ஆம் பக்கம் பார்க்க)

# சில்லையூரார் 'குறும்பா' எழுதினாரா?

'குறள்' என்ற செய்யுள் திருவள்ளுவரையே எம்முன் கொண்டு வந்து நிறுத்தும். அதுபோலக் 'குறும்பா' என்றவுடன் எமது ஞாபகத்திற்கு வருபவர் மகாகவி அவர்களே.

1970 களில் மகாகவி எழுதிய குறும்பாக்கள் பிரபல்யம் பெற்றுத் திகழ்ந்தன. 'குறும்பா' என்ற பெயரிலேயே அவர் தமது பாக்களைப் புத்தகமாக அச்சிட்டு வெளிட்டிருந்தார்.

வள்ளுவரின் 'குறள்' திருக்குறள் என வழங்கப்பட்டதுபோல, இதுவும் 'மகாகவியின் குறும்பா' என வழங்கப்பட்டது. இக்காலகட்டத்தில் 'மகாகவி அப்பதத்தைப் பயன்படுத்தியதற்கு சில்லையூர் செல்வராசன் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை; உரிமை கோரவுமில்லை.

அமரர் சில்லையூர் செல்வராசன் குறும்பா எழுதினாரா என்பது கூட எம்மைப் பொறுத்தவரையில் தெரியாத ஒன்று.

'மகாகவி' எனப்படும் உருத்திரமூர்த்தி ஒரு படித்த கல்விமான்; அரச உயர்பதவியில் இருந்தவர்; மிகுந்த பண்பாளர். ஆங்கிலக் கவிதையைப் பின்பற்றி தமிழில் எழுதியிருக்கலாம். ஆகவே சில்லையூர் செல்வராசனைப் பின்பற்றி எழுதினார் என்ற வாதம் ஏற்புடையதல்ல என்பது எனது கருத்து. ஏனெனில் அப்படிச் செய்திருந்தால் அதனைத் தமது நூலின் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பார். அப்படியான ஒரு சிறந்த பண்பு அவரிடம் காணப்பட்டது.

**இலக்கிய சர்ச்சை**

ஆகவே அவரே மறுக்காதபோது நாம் இதுபற்றி ஆராய்ச்சியில் இறங்க வேண்டிய அவசியமில்லை. இது முட்டையில் மயிர் பிடுங்குவதற்கு ஒப்பானதாகும்.

**- கு. சி. சுந்தரம்பிள்ளை -**

# இன்று ஒக்ரோபர்...

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு தீர்வைத் தேடுவதற்கும் அல்லது நாடுவதற்கும் நாங்கள் உதவி செய்கின்றோம். அதனால்தான் இதனை உளவளத்துணை அல்லது சீர்மியம் என்று சொல்கின்றோம்.

மற்றது — முக்கியமானது — என்னவென்றால் உளப்பிரச்சினை எல்லோராலும் கைக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. உளப்பிரச்சினைகளுக்கு உட்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கு ஓரளவு பயிற்சி தேவை. இந்தப் பயிற்சியும் எல்லோராலும் தாங்கிக்கொள்ளக்கூடயதல்ல. ஏனெனில் இந்தப்பயிற்சி பெற்றவர்களே சில வேளைகளில் பிரச்சினைகளுக்குள்ளாக முடியும். எனவே பயிற்சியாளர்களை மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுத்து பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. இது ஒரு முறைசார்ந்த பயிற்சி நெறியாகும்.

இதனைவிட எமது சமுதாயத்தில் முறைசாரா வழிமுறைகளும் பலவுண்டு. இது ஆண்டாண்டு காலமாக உளவளத்துணையாகக் கொடுக்கப்பட்டு வருகின்றது. உதாரணமாக சாவீடு. தனக்கு வேண்டியவர் இறந்துவிட உள்ளம் பெரிதும் பாதிக்கப்பட்டுவிடுகின்றது. இதற்கு உளவளத் துணையாக சாவீட்டு நிகழ்ச்சிகள் அமைந்துவிடுகின்றன. இனத்தவர், சுற்றத்தவர் வருகை, கட்டிப்பிடித்து அழுதல், கிருத்தியங்கள், எட்டுச்செலவு, அந்தியேட்டி, ஆண்டுத் திவசம் என்பன உள்ளத்தைச் சாந்தப்படுத்துவதாக அமைந்துவிடுகின்றன. இவை ஒருவருடைய மனத்திலுள்ள அழுத்தங்களை வெளியே கொண்டுவரச் செய்து மற்றவர்களையும் அதில் பங்குகொள்ளச் செய்து மனதிற்கு ஒரு தெம்பைத் தருகின்றன. இதைப் போலவே கோயில், தெய்வீகம், நாடகம், கலைகலாசார நிகழ்வுகள், கூட்டங்கள், பெரியோரின் அறிவுரைகள், மதகுருமாரின் உபதேசங்கள் என்பனவும் முறைசாரா உளவளத்துணை முறையாக அமைகின்றன.

✱ உளவத்துணை உதவியை நாடி வருபவர்களிடமிருந்து கட்டணம் எதுவும் அறவிடப்படுவதில்லை எனக் கூறினீர்கள். அவ்வாறாயின் உங்கள் செயற்பாடுகளுக்குரிய பணவுதவியை எங்ஙனம் பெறுகின்றீர்கள்?

● முக்கியமாகப் பிறநாட்டு நிறுவனங்களே பணவுதவியைச் செய்து வருகின்றன. ஆரம்பத்தில் சமாதானத்திற்கும் சேவைக்குமான 'குவேக்கர்' அமைப்பு உதவியளித்தது. நோர்வே அரசாங்கமும் உதவியளித்திருக்கின்றது. சென்ற வருடமும் இந்த வருடமும் கனேடிய உயர்ஸ்தானிகராலயம் எமக்குப் பணவுதவியளித்து எமது செயற்பாடுகளைக் கவனிக்கின்றது. இவ்வுதவிகளுடன் நாங்கள் எங்களால் முடிந்த பணிகளைச் சமுதாயத்திற்குச் செய்துவருகின்றோம்

✱ 'சாந்திகம்' ஒரு மதம் சார்ந்த அமைப்பு எனச் சிலர் கருதுகின்றனர். அதுபற்றி உங்கள் கருத்து என்ன?

● ஆமாம். நானும் அதனைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இதனைக் கிறிஸ்தவ மதஞ்சார்ந்த அமைப்பாகச் சிலர் கருதுகின்றனர். இது மிகவும் தவறான கருத்தாகும். கிறிஸ்தவ மதகுருமார்கள், கன்னியாஸ்திரிகள் தமது முழுமையான அர்ப்பணிப்பைச் சாந்திகத்திற்குச் செய்து அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வருகின்றனர். இவர்கள் தமது மதஞ்சார்ந்த உடையில் இருந்தாலும் மதஞ்சார்பான முறையில் நடந்து கொள்வதில்லை. மற்றும் இதன் தற்போதைய தலைவரான நான் ஒரு சைவன். சாந்திகம் ஆரம்பிக்கப்பட்டபோதும் முதன் முதல் தலைவராக இருந்ததும் நான்தான். மற்றைய தலைவர்கள் டாக்டர் என் சிவராஜா, டாக்டர் சி. சிவசங்கர் போன்றோரும் சைவர்களே. இந்நிலையில் சாந்திகத்தினை மதஞ்சார்ந்த அமைப்பெனக் கருதிக் கொள்வது அவர்களின் பணியைக் கொச்சைப்படுத்தி அவர்களை மிகவும் துன்பப்படுத்துவதாக இருக்குமென நினைக்கின்றேன். எனது கருத்துப்படி சாந்திகம் மதஞ் சார்ந்ததல்ல; மனஞ்சார்ந்தது.

✱ சாந்திகத்தினால் அண்மைக் காலத்தில் 'மனவெளி' என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டு வந்துள்ளது. தற்சமயம் 'மனவெளி' சஞ்சிகை வெளியிடப்படாமைக்குரிய காரணத்தைக் கூறுவீர்களா?

● சாந்திகத்தினூடாக 'மனவெளி' சஞ்சிகை சென்ற ஆண்டு வெளியிடப்பட்டது. இப்பிரதேசத்தில் பல உளசார் சஞ்சிகைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. 'மனவெளி' சஞ்சிகையின் நோக்கம் ஆசிரியர்கள், வெளிவாரி, உள்வாரி பல்கலைக்கழக மாணவர்கள் போன்றவர்களுக்குத் தேவையான சில கருத்துக்களைத் தமிழிலேயே பெற்று அவற்றைக் கையாளக் கூடிய வகையில் அவர்களுக்கு உதவி செய்வதே. அதாவது இது ஒரு கல்விசார் சஞ்சிகையாகும். இந் நோக்கத்தைப் பூர்த்தி செய்யுமளவிற்கு எம்மிடையே எழுத்தாற்றல் பெற்றவர்கள் குறைவாகவே இருக்கின்றனர். தகுந்த கருத்துடையவர்களின் எழுத்தாக்கம் கிடைக்காமையினாலேயே இத் தடங்கல் ஏற்பட்டுள்ளது. அடுத்த வருடத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. எனவே நான் நினைக்கின்றேன் அடுத்த வருடம் மனவெளி மூன்று அல்லது நான்கு மாதத்திற்கு ஒரு தடவை வெளிவரக்கூடிய தகைமை பெற்று விடும்.

✱ ஒக்ரோபர் 10 'உலகஉளநலநாள்' கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் உளநல நிலை எவ்வாறுள்ளது எனக் கூற முடியுமா?

நான் நினைக்கின்றேன்—யாழ்ப்பாணத்தில் மக்களின் உளநலநிலையைக்கூறுவதற்கு என்னைவிட மிகவும் சிறந்தவர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்கள். அவரது கருத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். அவர் எம்முடைய மக்களின் மத்தியில் உளநிலை தொடர்பான பல ஆய்வுகளைச் செய்திருக்கின்றார். அவருடைய கருத்துப்படி வரவர எங்களுடைய மக்களின் உளப் பாதிப்புக்கள் கூடிக்கொண்டே வருகின்றன. இந்தப் பாதிப்புக்களினால் ஏற்படுத்தப்படும் ஆழமான வடுக்கள் ஆரம்பத்தில் தனிநபர் என்ற முறையில் இருந்தது. ஆனால் தற்போது சமுதாய மட்டத்தில் இவ்வடுக்கள் அமைந்துள்ளன. உளநிலையை எடுத்து நோக்கினால் நாம் சமுதாயமாகவே கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம். இதுவே பேராசிரியரின் கருத்து.

✱ சமுதாயத்தின் உளநல நிலையை எந்தவகையில் கணிப்பிடலாம்இதற்கு யாதாயினும் அளவுகோல் உண்டோ?

● இதனை நேரடியாக அளவிடுவது கடினமாகும். சமுதாயத்தில் குற்றச் செயல்கள் அதிகரித்திருப்பது, தற்கொலை, கொலை வீதங்கள் உயர்ந்திருப்பது, மதுபாவனை அதிகரித்திருப்பது — மக்களிடையே உளநிலை மோசமாகிக்கொண்டு வருகின்றது என்பதற்குச் சான்றுகளாகும்.

✱ 'கவுன்ஸிலிங்' உள நலத்துக்கு ஆரோக்கியம் அளித்து வருகின்றது. சாந்திகத்துக்கு 'கவுன்ஸிலிங்கிற்காக' எத்தகையோர் வருகின்றனர்?

● எங்களிடம் வருபவர்கள் பலவிதமான பிரச்சினைகளுடனும் வருகின்றனர். பலவிதமான தடுப்புக்காவல் நிலையங்களில் வைக்கப்பட்டு குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டு அதனால் மனவழுத்தத்திற்குள்ளானவர்கள், இந்த நிலையங்களில் சித்திரவதை போன்றவற்றுக்குள்ளானவர்கள், போரினால் — உயிர்களை, உடைமைகளையிழந்து மனம் பாதிக்கப்பட்டவர்கள், இதனைவிட குடும்பத்தில் சாதாரண பிரச்சினைகளுக்குள்ளானவர்கள், சில பிழையான கருத்துக்கள் சமுதாயத்தில் இருப்பதனால் மாணவப் பருவத்தினர்—வளரும் காலத்தில் பாலியல் பிரச்சினைக்குள்ளாகி வருபவர்கள், மதுபோதைக் கடிமையாகி பின் அதிலிருந்துவிடுபட நினைப்பவர்கள், பரீட்சைகாரணமாக மனவழுத்தத்திற்குட்பட்ட மாணவர்கள், வாழ்க்கையில் தோல்வியடைந்தவர்கள், தற்கொலை முயற்சியில் தோல்வியுற்றவர்கள் எனப் பலவகையினர் வருகின்றனர்.

இப்படியான பிரச்சினைகளைச் சாந்திகம் கையாண்டு வருகின்றது. இதற்கு மருந்துப்பொருள்கள், ஊசி, மருத்துவ நிபுணர் என்று எதுவுமே தேவைப்படாது. நாங்கள் வாயால் பேசுவதும், காதால் கேட்பதும் மனநெகிழ்ச்சிக்குள்ளானவர்கள் தமது மனதைத் திறந்து கொட்டுவதனால் ஏற்படுகின்ற ஒரு மன ஆறுதலுக்கு வழிவகுக்கும்.

✱ புதிதாக உளவளத்துணைபெற நினைப்பவர்கள் சாந்திகத்தை எங்ஙனம் தொடர்பு கொள்ளலாம்?

● சாந்திகத்திற்கு நேரடியாகவே வரலாம். அங்கு வரவேற்பாளர்கள் காத்து நிற்பார்கள். தங்கள் வரவைப் பதிவுசெய்து கொண்டு உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். வைத்திய சாலையில் மனநோயாளர் பிரிவு சிகிச்சை நிலையம் ஊடாகவும், பாடசாலைகளில் ஆசிரியர், தலைமை ஆசிரியர் ஊடாகவும் சாந்திகத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிடும் தீ நாக்குகள்

செங்கற்களால் கட்டப்பட்ட அந்தப் பலமாடிக் கட்டடத்தின் மேற் தளத்தில் தீவிரமாகத் தனது பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தான் 17 வயது புறாக். அவனது கட்டான உடல்வாகும் இளமையின் முறுக்கும் காண்பவர் மனங்களைக்கொள்ளை கொள்ளும்.

தினசரி கடின உழைப்பு அவனது தேகத்தை மேலும் முறுக்கேற்றிக்கொண்டிருந்தது. அன்று மிகவும் பிஸியான நாள். நேரமோ காலை 9.00 ஐத் தாண்டிக் கொண்டிருந்தது.

கட்டடம் முழுவதுமே பெரும்பாலும் களஞ்சியம் தான். கடதாசிகள், காகிதாதிகள் மற்றும் பல பழைய பொருள்கள் இருப்பில் கிடக்கும்.

**திடீரெனத் தீப்பற்றிக் கொண்ட மாடிக் கட்டடம் ஒன்றின் 'லிப்டி'னுள் சிக்குண்ட ஓர் இளைஞனின் ஜீவமரணப் போராட்டம் இது.**

தள்ளுவண்டியில் கடதாசிக்கட்டுகளை அடுக்கித் தள்ளிக்கொண்டு வந்து லிப்ட் (Elevator) அறையை நிரப்பிக்கொண்டிருந்தான் புறாக். தான் நிற்பதற்குப் போதுமான இடத்தைத் தவிர மீதம் முழுவதும் கடதாசியால் நிரம்பிவிட்டது.

உள்ளே வந்தான். கையால் இழுத்துப் பூட்டப்படும் இரும்புக் கதவுகளை இழுத்து மூடினான். பாதுகாப்பு நோக்குடனான உள் மரக் கதவும் பூட்டப்பட்டது. மேல்தளத்தில் இருந்து 'லிப்டை' கீழே நகர்த்துவதற்கான பட்டன்களை அழுத்தினான். பச்சை லைட் ஒளிரத் தொடங்க 'லிப்ட்' அசையத் தொடங்கியது. அது கீழே இறங்கத் தொடங்கிவிட்டது.

லிப்ட் அறைக்குள் தனித்து நின்றுகொண்டு கதவைத் தாழிட்டால் அது திறக்கும் வரை—படுபிஸியான அலுவலகத்தில்கூட பயம் கௌவிக் கொள்ளும். ஒருவேளை லிப்ட் சரியாக வேலை செய்யாவிட்டால் — கதவு திறக்கும் பொறிமுறை பிசகிப்போனால் — 'பவர்கட்' வந்துவிட்டால் என்றெல்லாம் கலக்கம் பிறக்காமல் விடுமா?

இவன் தினசரி 'லிப்டில்' பொருள்களுடன்தான் தனித்துப் பயணம் செய்கிறான். அந்த 'லிப்டின்' மூச்சை அடைக்கும் காற்றோட்டமில்லாத அடக்கம் அவனுக்குப் பழக்கப்பட்ட ஒன்று. அதன் உலோகச் சுவர்கள் அவனுக்குப் பழக்கப்பட்டுப்போனவை. பலகைகளினாலான அதன் தரையின் இடைவெளிகளூடே தெரியும் பாதாளம் கூட அவனை அச்சுறுத்தியது கிடையாது.

'லிப்ட்' சம்பந்தமான பல விபத்துக்கள் பற்றியெல்லாம் அவன் வாசித்திருக்கிறான். அந்தப் பயங்கர சம்பவங்கள் அவனை அச்சுறுத்தியது கிடையா. அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தில் குண்டுவெடித்த கணம் அக் கட்டடத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த 100 வரையான லிப்டுகளில் பல செயலிழந்துபோயின. ஒரு 'லிப்ட்' 42 மாடிகள் ஆழத்துக்கு கட்டுப்பாடின்றி விழுந்தது.

இப்படியெல்லாம் யோசித்தால் வேலை செய்ய முடியாது. இந்தப் பழைய 'லிப்டும்' சிலமாடிகளை மட்டுமே கொண்ட இக் கட்டிடமும் அவனுக்குப் பழக்கப்பட்டுப் போனவை. பெரும்பாலும் 'லிப்டில்' மனிதர்களைச் சந்திப்பது குறைவு. பல்வேறு தளங்களிலும் வேலைக்கு வரும் அனைவரையுமே அவன் அறிவான். எல்லோரும் அவனது நண்பர்கள்.

இன்று சற்று உற்சாகமாக இருந்தான். பொக்கெட்டில் சம்பளப்பணம் மிதப்பாகத் தெரிந்தது. கற்பனைகள் வளரத்தொடங்கின. ஏதாவது படித்துப் பாஸ் பண்ண வேண்டும். அம்மாவை ஆதரவாக வைத்திருக்க வேண்டும். இப்படிப் பல எண்ணங்கள்.

மூன்றாவது மாடியைத் தாண்டி இரண்டாவது மாடிக்கு இறங்கும் வேளை லைட் மின்னி மறைந்தது. இருள் கௌவிக் கொண்டது. லிப்ட் இயக்கம் தடங்கி நின்றது. மறுகணம் லைட் வந்துவிட்டது. லிப்ட் தட்டுத்தடுமாறி இயங்கத் தொடங்கியது. இவனுக்குத் 'திக்' கென்றது.

## இது ஓர் உண்மைச் சம்பவம்

ஒரு நிமிடத்துக்குள் அது தளத்தை அடைந்துவிடும். கதவு திறந்துகொண்டதும் முதலில் 'லிப்டைச்' சரிக்கட்டவேண்டும் என நினைத்தான்.

'லிப்டின்' தரை இரண்டாம் மாடியின் தளத்தைத் தாண்டி முதலாம் மாடியின் சீலிங்கை எட்டி இருக்கவும் அதன் சீலிங் (கூரை) இரண்டாம் மாடியின் பாதியளவில் நிற்கவும் மீண்டும் 'லிப்ட்' ஒய்வுக்கு வந்தது. லைட் நின்றுவிட்டது.

தலைக்குமேலே மெல்லிதான நொறுங்கும் சத்தங்கள் கேட்டன. மின்வயர்களில் பொறிபறப்பது போன்ற ஓசைகள் எழுந்தன. புறாக்கை ஒருவித பயம் கௌவிக்கொண்டது. மரக் கதவை விலக்கி இரும்புக் கதவின் யன்னல் துவாரம் ஊடே வெளியே பார்த்தான். லிப்ட் 2 ஆம் தளத்தைச் சீராகத் தாண்டாமல் இடையில் நின்றுவிட்டது தெரியவந்தது. எனவே கதவைத் திறக்க இயலவில்லை.

நடந்தது என்ன எனத் தெரியாமல் தவித்தான் அவன். தனிமை பயத்தை விசுவரூபம் எடுக்க வைத்தது. இரண்டாம் தளத்தில் மனிதர்கள் எவரையும் தெரியவில்லை. எல்லோரும் எங்கோ ஓடிவிட்டார்கள் போலும்.

மேலேயும் தளமாடியிலும் பலரும் அங்குமிங்கும் ஓடுவதுபோல காலடி ஓசைகள் கேட்டன. கட்டடம் தீப்பற்றிக்கொண்டதாகப் பலரும் கத்தினார்கள். தமது பொருள்களை எடுத்தவர்களும் எடுக்காதவர்களுமாக அவர்கள் தவிப்பது இவனுக்குப் புரிந்தது.

அவர்களது அவதி அவசரம் ஏதோ பெரும் விபத்தைக் கோடிகாட்டியது. எல்லோரும் அவசர அவசரமாக கட்டடத்தைவிட்டு வெளியேறுவது தெரிந்தது.

இவனது பொருள்கள் மேல் மாடியில் மேசைமீது இருந்தன. லிப்டையோ திறந்து வெளியேற இயலவில்லை. ஆயுதம் எதுவும் கையில் இல்லை. அவனைச் சூழக் கடதாசிக் கட்டுகள்தான் இருந்தன. மூலையில் எண்ணெய்க் கான் ஒன்று தென்பட்டது. அட! இதையும் வைத்துக்கொண்டா தீயைச் சமாளிப்பது?

'லிப்டின்' கதவு இடுக்கினூடே கத்தினான். உதவி கேட்டு கூக்குரலிட்டான். எவரது காதிலும் அது விழுந்ததாகத் தெரியவில்லை. தீயின் கோரத்தையும் புரிய முடியவில்லை. ஏதோ கருகும் வாசனை தெரிந்ததே தவிர ஆரம்பத்தில் வேறொன்றும் புரியவில்லை.

தீ மேலேயா கீழேயா எனப் புரியவில்லை. கரும்புகை லிப்டுக்கு வெளியே இரண்டாம் தளத்தை நிரப்பத் தொடங்கி இருந்தது. புகைமூட்டம் அதிகரிக்கவும் வெளியே எதுவும் தெரியவில்லை. இடுக்குகளினூடே உள்ளே புகை புகுவதை உணர்ந்தான்.

உரக்கக் கத்த விடாமல் குரல் கம்மிற்று. புகைமூட்டம் மூச்சு எடுக்க விடவில்லை. தொண்டை வரண்டு போனது. கட்டடத்தில் எங்கெல்லாமோ தீயின் கோரதாண்டவம் நடப்பது இவனுக்கும் புரிந்தது. பொருள்கள் தீய்ந்து ஓசை எழுப்பின. ஜன்னல் கண்ணாடிகள் சுக்குநூறாக நொருங்கிப் பறந்தன. தளபாடங்கள் கொட்டுப்படும் ஓசை காதைப் பிளந்தது. வயர்கள் உருகி மணத்தன.

இவனது லிப்டின் சுவர்கள் உலோகத்தால் ஆனவை. அவை தீப்பிடிக்காது தாக்குப் பிடிக்கும் எனினும் சூடேறத் தொடங்கிவிடும். 'ஒவன்' (Oven) ஒன்றுக்குள் அகப்பட்ட நிலைமை இவனுக்கு உருவாகும். என்ன செய்யலாம்?

அவனது மேனி அழகை அவனே ரசிப்பான். மாலையில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் போய் கடற்குளிப்புக் குளித்து கடற்கரையில் நீச்சல் உடையில் வரும் பெண்கள் கூட்டத்தின் நடுவே உள்ளாடையுடன் மணலில் படுத்துக் கிடக்கும் போது அவனுக்குப் பெருமை பிடிபடாது.

ஆண்கள் எரிச்சல் படுமளவுக்கு அவனது கட்டான தேகம் — அடர்ந்த மயிர்கள் மார்பினை நிறைக்கும் — காந்த விழிகள் காண்பவரை வசீகரிக்கும்—இளமைமுறுக்கு ஏக்கத்தைப் பிறக்க வைக்கும்.

இந்தத் தேகமா இப்படி அகப்பட்டுத் தவிக்கிறது? அநியாயமாக எவரும் அனுபவிக்காமல் போகப் போகிறதே எனத் தவித்தான். தன் நண்பர்கள் அறிவார்களா? தோழிகள் புரிவார்களா? — இந்த இக்கட்டான நிலைமைதனை. ஏக்கம் நெஞ்சை அடைக்கிறது.

உள்ளே காற்று சூடேறத் தொடங்குகிறது. உலோகச் சுவர்களைத் தொட்டுப் பார்த்ததும் அவை சூடேறி விட்டன. இடையிடையே தீ நாக்குகள் கதவு இடுக்கினூடே எட்டிப் பார்த்தன.

அருகே கிடந்த காகிதக் கட்டுக்களைச் சற்று விலக்கி வைக்க முயன்றான். தட்டுத்தடுமாறி இருட்டில் இடறிய போது காகித அடுக்குகள் தட்டுப்பட்டுக் கொட்டுப்பட்டன.

காகிதக் கட்டுக்களில் தீப்பற்றிக் கொண்டது. அவை கருகத் தொடங்கவும் புகை மூச்செடுக்க விடவில்லை. கட்டுக்கட்டாக இருந்தமையால் அவை வேகமாக எரிய முடியவில்லை. தீயை அணைக்க அவன் போராடினான். லிப்டுக்குள் அதைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க அவனால் இயன்றது எல்லாம் செய்தான்.

எண்ணெய்க்கான் கொதிப்பேறி இருந்தது. அதை வெளியே வீசவும் வழியில்லை. எண்ணெய் வழிந்தாலோ வெளியே சிந்தினாலோ அதோ கதிதான்.

**- அம்பிகா -**

'லிப்டின்' கதவு மற்றும் தரை இடுக்குகளினூடே அகோரமாக இடையிடையே உள்வீசும் தீச்சுவாலை அவனை றோஸ் பண்ணத் தயாரானது. அவனது உரோமங்களின் நுனிகள் உருகிக் கந்தகவாசம் பிறந்தது.

தோலில் ஆங்காங்கே சில இடங்களில் எரிவுகள் தென்பட்டன. தண்ணீர் குடிக்க வேண்டும் போல — கடுமையாக தாகம் எடுத்தது. பாதுகாப்புக்காக ஆடைகளைக் களைந்து தூர மூலையில் போட்டு விட்டான்.

ஏதோ கனவில் அவஸ்தைப்படுபவன் போல உணர்ந்தான். மூர்ச்சையடைந்து காகிதக் கட்டுக்களின் மேல் சாய்ந்தான். கட்டுக்கள் மேலும் குலைந்தன. தனித்தனியாக சிதறிய காகிதங்களில் தீப்பற்றிக் கொண்டதையோ — எண்ணெய்க்கான் சரிந்து விழுந்ததையோ — லிப்டின் தரைப் பலகைகள் தீப்பற்றத் தொடங்கியதையோ—அவன் உணரவில்லை.

★ ★ ★

அன்று அதிகாலை ஆறு மணிக்கே படுக்கையில் இருந்து துள்ளி எழுந்தான் பீம். அருகே மனைவியும் மூன்று குழந்தைகளும் உறங்கிக்கொண்டிருந்தனர். ஆளுக்கொரு ஆழமான முத்தம் கொடுத்து விட்டு படுக்கையை விட்டு இறங்கினான் அத்தீயணைக்கும் வீரன்.

**......'லிப்டின்' கதவு இடுக்கினூடே கத்தினான்......உதவி கேட்டு கூக் குரலிட்டான். எவரது காதிலும் அது விழுந்ததாகத் தெரியவில்லை. உரக்கக் கத்தவிடாமல் குரல் கம்மிற்று. அவனது உரோமங்களின் நுனி கருகிக் கந்தகவாசம் பிறந்தது......**

அவனது ஆசை மனைவி டெபி எழுந்து பின்தொடர்ந்தாள். தினமும் அவனை ஏக்கத்துடன் வழியனுப்பி வைப்பவள் அவள். தன்னைவிடத் தீப்பிடித்த கட்டடங்களையும் அதற்குள் அகப்பட்ட மனிதர்களையுமே நேசிக்கும் தனது கணவன் என்றோ ஒரு நாள் தீயுடன் சங்கமித்து விடுவானே என்பதுதான் அவளது நியாயமான ஏக்கம்.

மரணத்தின் வாயிலுக்கு அடிக்கடி சென்று திரும்பும் அவன், பெருமையுடன் வீட்டுக்குக் கொண்டுவரும் விருதுகளை அவள் அறவே வெறுத்தாள். அவனது நல்ல மனதை அவள் அங்கீகரித்தாலும் நாளை தானோ பிள்ளைகளோ அவனின்றி வாழ்வதை விரும்பாதவளாகவே அவள் இருந்தாள்.

தினமும் காலையில் அவனுக்கு விடைகொடுத்து அனுப்பும்போது அவனைப் பிரிவதாகவே ஏங்குவாள். மீண்டும் அவன் கண்ணில் படும் வரை எங்கும் தீப்பிடிக்கக் கூடாது என்றுதான் பிரார்த்திப்பாள்.

தீ என்று வந்துவிட்டால் கடமை நேரம் முடிந்தாலும் அவன் விடமாட்டான். கொழுந்து விட்டெரிந்து கொட்டுப்படும் கட்டடங்களுள் பிசாசாகப் புகுந்து கருகித் துடிப்பவர்களை மீட்டு வருவதில் அவனுக்கு நிகர் அவனே. அவன் அறிந்துகொண்டபின் — கண்டு தெரிந்து கொண்டபின் — எவரும் கட்டடங்களினுள் அநியாயமாக உயிரிழக்க இடங்கொடுத்தது அவனது அகராதியிலே கிடையாது.

ஏக்கம் நிறைந்த மனைவியின் கண்களுக்கு விடை கொடுத்துப் புறப்பட்டான் அவன். தீயணைப்புக்குழுவின் தீவிர மீட்பு அணியில் செயற்படும் அவனது 23 வருட அனுபவம் கண்களில் மின்னும். அவனிடமிருந்து உயிர் பெற்ற பலரும் வணங்கும் ஒரு நடமாடும் தெய்வம் அவன்.

அவனுக்கோ செய்தொழில் தெய்வம். ஆர்வமுடன் தன் அணியில் இணையத் துடிப்புடன் வந்து சேர்ந்தான். இதமான காலைப்பொழுது — இனிக்கும் நண்பர்கள் குழாம் —செந்நிறமான தீயணைக்கும் இயந்திரங்கள் சூழ நடுவில் நின்று எல்லாம் சரிபார்த்தபடி சள்ளடித்துக் கொண்டே நின்றார்கள்.

எச்சரிக்கை மணி ஒலித்தால் வேண்டிய இடத்துக்கு புல்லட் போல விரையவல்ல அந்த வாகனங்கள் — அவற்றை விட வேகமான — உற்சாகமான வீரர்கள் அணி.

மணி ஒலிக்கவும் பரபரப்படைந்தனர் அவர்கள். நேரம் 9.17 ஐக் காட்டியது. சீறிக்கொண்டு புறப்பட்டன வாகனங்கள். இடத்தை நெருங்குமுன்பே தொலைவில் நிலைமை மோசம் என உணர்ந்து கொண்டான் பீம். புகைமூட்டம் வானத்தில் கோலங்களை வரைந்து தள்ளிக் கொண்டிருந்தது.

கட்டடத்தை மொய்த்தன தீயணைக்கும் டிரக்குகள். ஆனால் நெருங்க இயலவில்லை. பழைய கட்டடம் செங்கற்கள் சூளைக்குள் அகப்பட்டமாதிரி வெந்து உடைந்து விழுந்தன. உச்சியில் இருந்து கொங்கிரீட் கட்டிகள் கொட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

உள்ளே அகப்பட்டது என்ன; விடுபட்டது என்ன என தீயணைக்கும் வீரர்களால் எடுத்த எடுப்பில் கணிக்க இயலவில்லை. பழைய கட்டடத்தில் பழம்பொருள் களஞ்சியத்தில் பிடித்த தீ வைக்கோற் போரில் பிடித்தது போலாகி விட்டது.

கட்டடத்தை விட்டு வெளியேறியவர்கள் அவசர அவசரமாகக் கூடி ஆள்களைக் கணக்கிட்டுக் கொண்டனர். தீக்காயங்களுடன் வந்து சேர்ந்தவர்களை அம்புலன்ஸுகள் ஏற்றிக் கொண்டு விரைந்தன. அவற்றின் சைரன் ஒலி நிலைமையை மேலும் பயங்கரமாகக் காட்டிக் கொண்டது.


நீரைப் பீய்ச்சும் இராட்சதக் குழாய்கள் வழி சமைத்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 71



சொற்சிலம்பம் இல. 71
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................................
விலாசம்: ... ..........................................................
. ............. ................................................
..................... இங்கே வெட்டுக .....................

முடிவு திகதி: 16 — 10 — 1998

**இடமிருந்து வலம்**

1. பதினோராம் திதி. 5. பத்தாம் திதி. 7. விபா பாரத் துறை. 9. ஒரு பூச்சி. வண்டையும் குறிக்கும். 10. வேகம். 12. மரத்தை அரிந்து பெறுவது. 13. நிலா. 15. ஒரு சாரியையுருபு. 16. இனிமை. 17. பால் தருவது. 18. வழக்கம். 20. நெருக்குதல். 21. பாய்.

**மேலிருந்து கீழ்**

1. உத்தரவிடல். 2. மழைகாலத்தை இப்படிக் கூறலாம். 3. கண்டம். 4. தில்லை. 5. ஓர் அசைச் சொல். 6. சினேகிதன். 8. ஓர றிஞன்; திருவள்ளுவரின் சகோதரன் என்றும் கூறுவர். 11. விளையாட்டு உபகரணம். 13. ஒப்புரவான நிலம். 14. ஒன்று சேர்த்து வருவது. 15. மறைப்புப் பாய், 17. கீழ் வீட்டுக்கு மேலே இருப்பது. 18. மிருகங்களுக்கு உண்டு. மனிதனுக்கு இல்லை. 19. சிறையில் வைக்கப்பட்டிருப்பவன்.

### சொற்சிலம்பம் — 69 விடைகள்

**இடமிருந்து வலம்**

1. துவாரகை. 5. பகுதி. 7. வழுத்துதல். 9. கலவன். 11. குசும்பு. 14. விழி. 15. தடு. 16. பாசி. 18. அதிபன். 20. சடுதி. 21. கனி. 22. மாயா வித்தை. 23. ஆம்.

**மேலிருந்து கீழ்**

1. துவக்கு 2. வாழு. 3. ரத்தம். 4. கைது. 5. பல்லவி. 6. திறன். 8. தக. 10. வழிபாடு. 12. சுவாதி. 13. புதன். 17. சிதிலம். 18. அம்மா. 19. பதவி. 20. சனி. 21. கதை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ **முதற் பரிசு:** செல்வி சு. கேதாரணி,
4/8, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

★ **இரண்டாம் பரிசு:** செல்வன் ச. அகிலன்,
ஆண்டு 7,
யாழ். இந்துக் கல்லூரி.

★ **மூன்றாம பரிசு:** நா. சந்திரலீலா,
அருளம்பலம் லேன்,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்,

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:. | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 70 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

'விருந்து' என்பது இனிமைதான். இன்று பலவகை வடிவங்களை இது பெற்று வருகிறது. இன்று நாம் பெரும்பாலும் கொண்டாடும் விருந்துகளுக்கும் வள்ளுவன் கருதும் விருந்துக்கும் இடையேயுள்ள வேறுபாடுதான் அறியப்படல் வேண்டும்.

அனுபவிக்கத் துடிக்கும் எமது நவீன விருந்துகள் தொடரட்டும். ஆனந்தத்தில் மனிதர்கள் திளைக்கட்டும். மயங்கட்டும். அதன் பயன்களையும் அனுபவிக்கட்டும்.

ஆனால் இன்றும் மனிதன் அடுத்தவனுடைய அவசியம் உணர்ந்து ஓம்பும் விருந்தையும் மறந்துவிடலாகாது. யார் யாருக்கு விருந்தளிப்பது?

வீடு, வாசல், குடும்பம், குழந்தை, குட்டி, சுற்றம் சூழ இயல்புவாழ்க்கை வாழும் இல் வாழ்பவர்கள் இவ்வியல்பினின்றும் விடுபட்டு, ஊர்தேசம் விட்டுப் பிரிந்து வந்து தவிக்கும் மனிதர்களுக்கு வேண்டியன வழங்கும் விருந்தே அவசியமாகிறது.

சுற்றம் சூழ இவ்வாழ்வில் இயல்பாக வாழ்பவனுக்கே இந்த சக்தி இருக்கும். என்னதான் வசதி இருந்தாலும் தனித்தவன் வீட்டில் அடுத்தவரை வரவேற்று உபசரிக்க கைகால் ஓடாது. நிலைமை இடந்தராது.

இன்று காட்டிலே சென்று தவம் இயற்றுபவர்களைக் காண்பது அரிது. ஆனால் நாட்டிலே நின்று மனித மேம்பாட்டுக்காக உழைக்கும் தியாக சிந்தனை கொண்டவர்கள் தமக்கென ஏதும் இன்றித் தவித்து நிற்கிறார்கள் என்றால் அவர்களைக் கவனிப்பது இல்வாழ்வான் கடனாகிறதே.

ஊருக்குப் புதிதாக வருபவனை உபசரித்தால்தான் அவன் வருகை தந்த காரியத்தை செவ்வனே இயற்ற முடியும். எனவே அப்படிப்பட்டவர்களுக்கான வசதிகளைக் கொடுக்கும் விருந்தென்ற வேளாண்மை இல்வாழ்வானிடம் ஒப்படைக்கப்படுகிறது.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.
—0081

(விருந்தோம்பல்)

**—அம்பிகைபாகன்—**

# முத்தமிடும் ...

((IX ஆம் பக்கத் தொடர்)

துக்கொடுக்க தீ வனத்தின் ஊடே ஓடை சமைத்து அந்த நடைபாதையில் உள்ளே நுழைய முனைந்து கொண்டிருந்தனர் வீரர்கள்.

ஆம். கட்டடத்தின் உள்ளே புறாக் அகப்பட்டுக் கொண்டான் என்பது உறுதி ஆயிற்று. அவனை வெளியே கண்டவர் எவரும் இல்லை. ஒருவன் உள்ளே அகப்பட்டுக் கொண்டான் என்ற சேதி பீமின் காதில் எட்டியது தான் தாமதம் அவனையும் வெளியே காணவில்லை.

வெளியே நின்றவர்கள் அனைவரும் தீயை மிதித்தவர்கள் போலத் துடித்தார்கள். உள்ளே ஏதும் தெரியவில்லை. உள்ளே புகுந்த வீரர்களை எண்ணிக்கொண்டிருந்த அதிகாரிகள் பதறிக் கொண்டனர்.

மேல் மூன்று தளங்களிலும் எதுவுமே எஞ்சியிருக்காது என்ற நிலைமை மட்டுமல்ல அவை சரிந்து கொட்டுப்படும் கோலம். வரும்போதே நிலைமை மோசம். இனி இங்கே வேலை இல்லை. தீ அடுத்த கட்டடங்களுக்குப் பரவாமல் பார்த்துக்கொண்டால் சரி என முடிவெடுத்தனர் அதிகாரிகள்.

நேரம் 9.38. அனைத்து வீரர்களையும் கட்டடத்தை விட்டு வெளியேறும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தீயணைக்கும் வாகனங்களின் பாதுகாப்புக் கருதி அவை சற்றுப் பின்நோக்கி நகர்த்தப்பட்டன.

உத்தரவை ஏற்று வீரர்கள் ஒவ்வொருவராக வெளிப்பட்டுக் கொண்டிருந்தனர். நீரைப் பாய்ச்சும் குழாய்கள் கூட வெளியே இழக்கப்பட்டுக் கொண்டிருந்தன

★ ★ ★

தீ! தீப்பற்றி எரியும் கட்டடம். வெளியே பீமின் அணி; அவனது வாகனங்கள்!

பதறிப்போனாள் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த டெபி. பீமின் மனைவி. அவளது ஏக்கத்துக்கு நெய்வார்க்கும் செய்தி.

இரண்டு பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று விட்ட பின், மூன்றாவது மடியில் சலனமற்று உறங்குகிறது. அடுப்பில் வேகும் சமையல்.

தொலைக்காட்சியை துருவித் துருவிப் பார்த்தாள். நேரமோ 9.40. கட்டடத்தில் இருந்து ஒவ்வொருவராக வெளியே குதிக்கும் வீரர்கள். ஆனால் பீம் மட்டும் இன்னும் குதிக்கிறான் இல்லை. இன்றைக்கு ஏதோ கெடு காலம்தான்.

அனைத்து வீரர்களும் கட்டடத்தை விட்டு வெளியேறிவிடல் வேண்டும் என்ற கட்டாய உத்தரவு மீண்டும் மீண்டும் பிறப்பிக்கப்பட்டதை தொலைக்காட்சியில் அவள் கேட்டாள்.

[illegible] நிலைமைக்குள்ளும் சில வீரர்கள் பிடிவாதமாக உள்ளே நிற்கிறார்கள் என்றுதானே அர்த்தம்? அப்படியென்றால் பீம் வெளியேயா நிற்பான்? அறிவிப்பை மீறி ஏன் அவர்கள் வெளியேற மறுக்கிறார்கள்? உள்ளே யாரும் அகப்பட்டுக் கொண்டார்களா? தவித்தாள் டெபி.

விசேட உடைகள், ஹெல்மெட், முதுகில் சிலிண்டர் சகிதம் கட்டடத்தை வட்டமிடும் வீரர்களில் பீமை தொலைக்காட்சித் திரையில் தேடிச் சலித்தாள் அவள்.

★ ★ ★

வீரர்கள் அனைவரும் வெளியேறிவிடல் வேண்டும் என்ற கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது. வாகனங்கள் ஒலி எழுப்பின. கட்டடம் கைவிடப்படுகிறது.

கட்டுப்பாட்டு வாகனத்தில் இருந்த அதிகாரியின் வானொலி கரகரத்தது. லிப்டில் ஒருவன் அகபபட்டிருப்பதைக் கண்டுபிடித்துவிட்டதாக அறிவித்தான் பீம்.

சரி. இனி இவனை விட்டுப் பிடித்தால்தான் உண்டு என நினைத்த அதிகாரி மேலும் இரண்டு நிமிடங்கள் காலக்கெடு வழங்கினார்.

லிப்டில் இருந்து எழும் முனகல் சத்தத்தை எப்படியோ உணர்ந்து விட்டான் பீம். அவனால் லிப்டின் கதவைத் திறக்கவோ உடைக்கவோ இயலவில்லை. நேரம் கடந்து கொண்டிருக்கிறதே?

'லிப்ட்' இரு தளங்களுக்கு இடையில் நின்றுவிட்டதால் கதவைத் திறக்க அதன் பொறிமுறை அனுமதிக்கவே மாட்டாது. லிப்டை ஒரு குறித்த தளத்துக்கு பூரணமாக கொண்டுவரல் வேண்டும். அது சாத்தியமாகும் போல எவருக்கும் தெரியவில்லை.

புறாக்கை அப்படியே வேகவிடுவதா? அது பீமை பொறுத்தவரை நடக்காது. வேலை போனாலென்ன உயிர்தான் போனாலென்ன விடமாட்டான் பீம்.

லிப்ட் மாட்டுப்பட்ட இரண்டாம், முதலாம் தளங்களில் இருந்து கீழ் தளத்துக்கு விரைந்தான் பீம். லிப்டின் பொறிமுறையை ஆராய்ந்தான். அது ஒரு பழைய சிஸ்டம். நீரியல் அழுத்தம் மூலம் (Hydraulic) இயங்குவது.

பொறியியல் அறையில் பல குழாய்கள் சிக்கலாக தெரிந்தன. மேலே லிப்டில் இருந்து தீச்சுவாலையுடன் எண்ணெய்த்துளிகள் சிந்திக் கொண்டிருந்தன.

கொட்டுப்படும் கொங்கிரீட் துண்டுகளும் கண்ணாடிச் சிதறல்களும் கொதிப்பேறி இருந்தன. எங்கும் புகைமூட்டம் பரவி இருந்தது. சரியான குழாயைக் கண்டுபிடிப்பதில் சிக்கல் எழுந்தது.

தீக்குள் நீச்சலடிப்பவன் போல—தீக் கடலின் அடித்தளத்தை பற்றி ஏறும் கடல் வாழ் உயிரினம் போல குழாய்களைத் தடவித் தேடி ஏறினான் பீம். சரியான இடத்தைக் கண்டுபிடித்ததும் கைகோடாலியால் குழாயைத் தகர்க்கத் தொடங்கினான். அதுவும் விட்டுக் கொடுப்பதாக இல்லாமல் மல்லுக் கட்டிநின்றது.

இறுதியில் குழாய் தகர்ந்து போனது. புசு புசுவென ஆவி வெளியேறியது. லிப்ட் தனது நிலையில்இறங்க ஆரம்பித்தது

பீம் போராடும்போது உதவிக்கு நின்றவன் தொம்சன். லிப்ட் தளத்தைத் தொட்டதும் கதவுகளைத் திறந்தனர் இருவரும்.

புகையும் காகிதக் கட்டுகளுக் கிடையே கிடந்த புறாக்கை—அந்த இருளிலும் காட்டுப் பூனையின் கண்களால் தேடித் தூக்கிக் கொண்டனர் இருவரும். வெற்றிப் பூரிப்பு முகத்தில் படர அவனைக் குழந்தையைப் போலச் சுமந்தபடி வெளியே ஓடிவந்தனர் இருவரும்.

புறாக்கை ஏற்றிக்கொண்ட அம்புலன்ஸ் ஒன்று பறந்து போனது.

தீ நாக்குகள் கட்டடத்தை முற்றுமே கபளீகரம் செய்து கொண்டிருந்தன.

பீம் அணியினர் நினைத்ததைச் சாதித்த பெருமை பிடிபடாமல் நின்றிருந்தனர். ஓர் உயிர்கூடப் பலியாகவில்லை என்ற ஒன்றே போதும் அவர்களுக்கு.

தேறிவந்த புறாக் இவர்களைத் தேடிவந்தான். எப்படி நன்றி சொல்வான் அவன்! விருதுகள்கூடக் கிடைத்தன. ஆனால் அவன் சாதனைகளும் டெபியின் ஏக்கங்களும் முடிவின்றித் தொடரத்தானே செய்யும்!

★

## அத்திவாரம்

வாயின்
வீரத்தைவிட
உன் செயலே
உனக்கு விடிவு தரும்.

கால் ஊன்றி
நீ நிலத்தில் நட
ஆகாயத்தை
அண்ணார்ந்து பார்க்காதே!

கைகள்
கட்டியிருக்கும்போதும்
உன் மனவலிமைக்கு
என்ன குறை?

நம்பிக்கை என்ற
அத்திவாரத்தில்
நீ என்றுமே
நிலையாயிரு.

வார்த்தை ஒருபோதும்
சுவர்க்கமாக மாறுவதில்லை
அதற்கு
உன் அனுபவம்தான்
உடந்தையாக இருக்கிறது.

மேலுலகத்தில்தான்
சுவர்க்கம் இருக்கிறதென
நீ நினைத்தாயா?
இல்லை!
அது
உன் மனதிலும் இருக்கிறது.

கள்ளத்தில் ஒளிந்திராத
உன் மனதினால்
எதையும்
சுவீகரித்துக்கொள்ளலாம்.
சுவர்க்கம் இதற்கு
விதிவிலக்கா என்ன?

— அ. சூரியன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "விழாக்களை அறிந்து கொள்வோமா?"

'வெள்ளி விழா' என்றாலே நமக்கெல்லாம் தெரியும்—25 ஆண்டு பூர்த்தி விழா என்று. இவ்வாண்டு இலங்கை அரசு சுதந்திரப் பொன்விழா கொண்டாடியது. அதுவும் 50 ஆண்டு பூர்த்தி விழா என்பது எங்களுக்குத் தெரியும். ஆண்டு நிறைவுகளைக் குறிக்கும் ஏனைய விழாக்களையும் அறிந்து கொள்வோமா?

| வருட நிறைவு | ஆங்கிலப் பெயர் | தமிழ்ப் பெயர் |
|---|---|---|
| 1 | PAPER | காகித விழா |
| 2 | COTTON | பருத்தி விழா |
| 3 | LEATHER | தோல் விழா |
| 4 | SILK | பூ பழ விழா |
| 5 | WOOD | மர விழா |
| 6 | IRON | சர்க்கரை, கல்கண்டு; (அல்லது) இரும்பு விழா |
| 7 | COPPER | கம்பளி (அல்லது) செம்பு விழா |
| 8 | ELECTRICAL | வெண்கல விழா |
| 9 | POTTERY | மண்கலச விழா |
| 10 | TIN | தகரம் (அல்லது) அலுமினிய விழா |
| 11 | STEEL | எஃகு விழா |
| 12 | LINEN | லினன் விழா |
| 13 | LACE | பின்னல் விழா |
| 14 | IVORY | தந்த விழா |
| 15 | CRYSTAL | படிக விழா |
| 20 | CHINA | பீங்கான் விழா |
| 25 | SILVER | வெள்ளி விழா |
| 30 | PEARL | முத்து விழா |
| 40 | RUBY | மாணிக்க விழா |
| 45 | SAPPHIRE | (நீலக்கல்) இரத்தின விழா |
| 50 | GOLD | பொன் விழா |
| 55 | EMERALD | மரகத விழா |
| 60 | DIAMOND | வைர விழா |
| 75 | PLATINUM | பவள விழா |
| 100 | CENTURY | நூற்றாண்டு விழா |

(ஆதாரம்: வெப்ஸ்டர் ஆங்கில அகராதியும், 1994 ஆகஸ்ட் மஞ்சரியும்)

— கா. அருளானந்தம் —

## எங்கள் வீட்டு இட்டிலி!

உயர்ந்த மல்லிகை போலிருக்கும்
எங்கள் வீட்டு இட்டிலி
உள்ளே தும்பைப் பூப் போலிருக்கும்
எங்கள் வீட்டு இட்டிலி
வயிறுக் கொன்றும் தீமை செய்யா
எங்கள் வீட்டு இட்டிலி
வாய்க்கு நன்கு சுவைத்திடுமாம்
எங்கள் வீட்டு இட்டிலி!

விலை மதிப்பே இல்லாதது
எங்கள் வீட்டு இட்டிலி!
வேண்டி வேண்டி கேட்க வைக்கும்
எங்கள் வீட்டு இட்டிலி
காலையிலே தனிச்சுவையாம்
எங்கள் வீட்டு இட்டிலி
காத்திருந்தால் கிடைக்கும் வாங்க
எங்கள் வீட்டு இட்டிலி!

—கிருஸ்ணசாமி சுவர்ணா—
(மானிப்பாய் மகளிர் கல்லூரி)

## நொடிப்பொழுது

1. மக்கள் வெட்டாத குளம்; மழை நீர் நிரம்பாத குளம். அது என்ன?
2. மஞ்சள் குருவி ஊஞ்சல் ஆடுது. அது என்ன?
3. முட்டு வீட்டுக்குள் தட்டுப்பலகை. அது என்ன?
4. வெள்ளைப் பிள்ளையார் கோயிலில் விழுந்து கும்பிட இடமில்லை. அதுஎன்ன?
5. வெள்ளைப் பாம்பு கல்லைத் தூக்குது. அது என்ன?
6. தாய் சப்பாணி. மகள் இழுப்பாணி. அது என்ன?
7. உரித்த புறா சந்தைக்குப் போகுது. அது என்ன?
8. தொட்டால் சுருங்கி. அது என்ன?
9. வெட்டாத பாத்தி என்ன பாத்தி?

—அ. இந்துஜா—

### விடைகள்

1. இளநீர். 2. எலுமிச்சை. 3. நாக்கு. 4. முட்டை. 5. புடோலங்காய். 6. அம்மியும் குழவியும். 7. தேங்காய். 8. நத்தை. 9. முஸ்பாத்தி.

## நல்லவை கற்போம்!

நல்லவை பேசக் கற்றிடுவோம்
நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை செய்வோம்
தீயவை விலக்கிட முயற்சி செய்வோம்
தீமை விலகிட உதவி செய்வோம்

ஒற்றுமை உணர்வை ஊட்டிடுவோம்
ஒன்றுபட்டே நாம் செயற்படுவோம்
ஒழுக்கமுடன் நாம் ஒழுகிடுவோம்
ஒருவர் ஒருவரை அன்பு செய்வோம்

பெற்றோரை நாமும் வணங்கிடுவோம்
பெரியோரை நாம் மதித்திடுவோம்
கற்பதை நாமும் வளர்த்திடுவோம்
கற்றபடி நாம் வாழ்ந்திடுவோம்

—மரியநிலக்ஷி பீற்றர்—
(புனித ஜோண் பொஸ்கோ வித்.)

## தமிழைக் கொல்லாதீர்!

'அத்தை', 'மாமா' என மணக்கும்
அன்புத் தமிழை மறந்து விட்டு
கொச்சை பேச்சாம் 'ஆன்டி', 'அங்கிள்'
சொற்கள் கற்றுக் கொடுக்காதீர்!

'அம்மா', 'அப்பா' எனக்கூறும்
இனிய சொல்லை விட்டு
'மம்மி' 'டாடி', எனச் சொல்லும்
தெறிக்கும் சொல்லை புகுத்தாதீர்!

எந்த மொழியைக் கற்றாலும்
எங்கே சென்று வாழ்ந்தாலும்
சொந்தமான தாய் மொழியைத்
துறத்தல் என்றும் நன்றன்று.

—கே. கரவைதாசன்—

## தொட்டால் அதிர்ச்சி தரும் மின்மீன்கள்!


சிலவகை மீன்களை நாம் தொட்டால் அவை மின் அதிர்ச்சியைக் கொடுக்கும்! இவை மின் மீன்கள் எனப்படும். மின்சாரத்தையுண்டாக்கும் ஆற்றலுடைய இத்தகைய மீன்களில் சுமார் 50 வகை உள்ளன.



மீன் மலங்கு

இம்மீன்கள் பகை உயிர்களில் நின்றும் மின் அதிர்ச்சி மூலம் தம்மைக் காத்துக்கொள்கின் றன. தமக்கு இரையாகக் கூடிய உயிரினங்களைப் பிடிக்கவும் இவை மின் அதிர்ச்சியைப் பயன்படுத்துகின்றன. இவ்வதிர்ச்சியினால் அவற்றை நினைவிழக்கச் செய்தோ கொன்றோ தின்பதுண்டு.

மின் மீன்களில் முக்கிய மானவை மின் மலங்கு (Electric eel), மின் திருக்கை(Torpedo or Ray fish), மின் கெளிறு (Cat fish) முதலிய வகைகளாகும். மின்



மின்கெளிறு

மலங்கு தென் அமெரிக்காவில் அமேசன், அரினாக்கோ ஆகிய ஆறுகளிலும், பிரேசில், கயானா ஆகிய பகுதிகளில் சதுப்புக் குட்டைகளிலும் வாழ்கிறது. இது சுமார் இரண்டு மீற்றர் நீளமிருக்கும். உடலின் நீளத்தில் ஐந்தில் நான்கு பங்கு வால். வால் நெடுகிலும் பக்கத்தசைகள் மின்னுறுப்புகளாக மாறியிருக்கின்றன. மின் மீன்களில் மிகக் கடும் அதிர்ச்சியைத் தரக்கூடியது மின் மலங்குதான். இதன் மின்சக்தி ஒரு குதிரையைக் கூடக் கலங்கச் செய்துவிடும்; மனிதனுக்கும் பலத்த அதிர்ச்சி ஏற்படும்.

**பிராணிகள் உலகம்**

மின் திருக்கை என்னும் மீன் அத்திலாந்திக் சமுத்திரத்திலும், இந்து சமுத்திரத்திலும், மத்தியதரைக் கடலிலும் காணப்படுகிறது. இது சுமார் ஒன்றரை மீற்றர் நீளமும் ஒரு மீற்றர் அகலமும் உள்ளது. உடல் தட்டையாக இருக்கும். வட்டமான உடம்பின் இரு பக்கங்களிலும் மின்னுறுப்புகள் உள்ளன. தசைத் திசுக்கள் இவ்வாறு மாறியுள்ளன. மேற்தோலை நீக்கிவிட்டுப் பார்த்தால் தேனடைகள் போல் மின்னுறுப்புகள் காணப்படும். மின் திருக்கை தன் இரையைப் பற்ற இந்த மின் சக்தியைப் பயன்படுத்துகிறது. இவ்வகையைச் சேர்ந்த ஒரு சிறியமீனை அடிப் பக்கமும் மேற் பக்கமும் நம் கைவிரல்களில் பொருந்தும்படி பிடித்து எடுத்தால் மின் அதிர்ச்சியை நாம் உணரமுடியும்.


மின் கெளிறு ஆபிரிக்காவில் நைல் ஆற்றிலும், அங்குள்ள மற்றும் பல ஆறுகளிலும் ஏரிகளிலும் காணப்படுகிறது. இது சுமார் ஒரு மீற்றர் நீளமுள்ளது; இதைப் பூனை மீனென்றும் சொல்வார்கள். அரேபியர் இதை உணவாகக் கொள்கிறார்கள். தோலுக்கு அடியில் ஓர் உறைபோன்று உடல் நெடுகிலும் மின்சார உறுப்புக்கள் உள்ளன.

விண்மீன்நோக்கி (Star gazer) என்னும் மீனின் மின்னுறுப்புக்கள் தலையில் உள்ளன. இந்த மீன் சுமார் 30 சதம மீற்றர் நீளமுள்ளது. இது மணலில் புதைந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின் மீன்கள் மின்னதிர்ச்சியைத் தொடர்ந்து கொடுத்துக்கொண்டிருக்க முடியாது. மின்சார சக்தி முழுவதும் வெளியேறி விட்டால், சிறிது நேரம் சென்ற பின்புதான் இவை மீண்டும் மின்சாரத்தை உண்டாக்க முடியும்.

## வார்த்தை விளையாட்டு




மேலேயுள்ள பலூன் மனிதன் வைத்துள்ள பலூன்களில் சில எழுத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை வைத்துக் கொண்டு அறுபத்தியைந்து சொற்களை உங்களால் உருவாக்க முடிகின்றதா என்று பாருங்கள்.

(விடை XIII ஆம் பக்கத்தில்)




## உங்களால் முடியுமா?

கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் குறிக்கும் சொற்கள் ஒவ்வொன்றும் மூன்று எழுத்தைக் கொண்டவை. அந்தச் சொற்களின் முதல் எழுத்தும் மூன்றாம் எழுத்தும் மாறுபடாமல் ஒன்றாகவே இருக்கும். எங்கே அச்சொற்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

1. தேர் இழுக்க இது அவசியம்.
2. காடு.
3. செழிப்பு.
4. சித்திரவதை அல்லது அழித்தல்.
5. ஆண்டவனிடம் வேண்டுவது.
6. வயப்படுவதைக் குறிக்கும்.
7. இடது அல்ல.
8. எதிர்பார்ப்பு.

— நா. மகேந்திரலிங்கம் —
(விடை XIII ஆம் பக்கத்தில்)

## இயலுமா?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா | பே | வை | ரி | தெ | லா |
| ரீ | ரி | தை | ம | ன் | கை |
| அ | ள | னு | ந் | ங் | ர |
| ன் | ம் | ன் | ம | ட | த |
| ந | பெ | து | ம் | பை | ம |
| கு | ண் | ர | கு | ம | ண |

மேலேயுள்ள அட்டவணையில் பெண்களின் ஏழு பருவங்களின் பெயர்கள் ஒளிந்துள்ளன. அவை மேலிருந்து கீழோ, கீழிருந்து மேலோ, பக்கவாட்டிலோ, பின்னுக்கு இருந்து முன்னாகவோ, முன்னுக்கு இருந்து பின்னாகவோ ஒருவரிசையில் உள்ளன. அந்த ஏழு பெயர்களை நீள்வட்டமிட்டுக் காட்டுங்கள் பார்க்கலாம்.

— வயலூரன் —
(விடை XIII ஆம் பக்கத்தில்)

## முயன்று பாருங்கள்

**மதுரை மாநகரம்**

இந்த இரு வார்த்தைகளில் பத்துச் சொற்கள் ஒளிந்திருக்கின்றன, அவை என்னென்ன என்பதைக் கண்டு கொள்ள முயன்று பாருங்கள்.

(விடை XIII ஆம் பக்கத்தில்)

# இந்த வார இராசி பலன்

## [10 - 10 - 1998 முதல் 16 - 10 - 1998 வரை]

## ஜோதிட சஞ்சீவி

| | | | |
|---|---|---|---|
| சனி | | சந் | |
| வி கே | இராசிச் சக்கரம் | | |
| | | | செ ரா |
| | | புத | சூ வெ |

மாற்றம்:

ரோகிணி நட்ஷத்திரம்—இடப இராசியில் சந்திரன் நிற்கும்.

*அரசியல்வாதிகளால் தான் நாட்டின் அழிவுகளைத் தடுத்து நிறுத்த முடியும். பேச்சுவார்த்தைகளால்— ஒரு விளக்கம் மந்தநிலை, மக்களின் கலக்கமற்ற போக்கை எதிர்பார்க்கலாம். ஆனால் பேச்சுவார்த்தைகளை எத்தரப்பு முன்னெடுத்துச் செல்வது என்பதில் சூழ்நிலைகளை உருவாக்க இருதரப்பின நம் முயற்சி எடுப்பர். இந்திய அரசியல் வாதிகள்—பிரதமர் முதல் ஜனாதிபதி வரை—இந்தியாவின் உலகஓட்டம் என்ன? திட்டம் என்ன? என எங்கும் விளக்கும் முன்னோடி நடவடிக்கைகளை எடுத்தபடி இருப்பார்கள். மேற்கு நாடுகள் மத்திய கிழக்கு நாடுகளில், சில அழுத்தங்களைக் கொடுத்தாலும் —விட்டுக் கொடுத்துப் போகவேண்டிய நிலையும் ஏற்படும். 'குளத்தை கோபித்து நீரைப் பாவிக்காமல் இருக்க முடியாது அல்லவா?' ஆனால் உலகெங்கும் இயற்கை, செயற்கை அழிவுகள் விட்டு, விட்டு நடக்கும் பலாபலன்கள் காணப்படுகின்றன.*

**மேடம்:** எத்தனைசோதனை வந்தாலும் சாதனை படைத்தபடி இருப்பீர்கள். இவ்வுலகில் சாம, பேத, தான, தண்ட முறையிலேயே எதையும் பெறலாம். எல்லோருக்கும் சாதகமாகவோ அல்லது உங்களை நல்லவனாகவோ போற்றி ஏற்ற வேண்டும் என நினைக்கக் கூடாது. தொழில்ஸ்தானத்தில் பெரிதும் சிறிதும் நடக்கும். மேலதிகாரிகள் உதவியாக இருப்பார்கள். வீடு மனையில் புதிய திருப்பமொன்று ஏற்படும். எதையும் துணிந்து செயற்படுத்துங்கள். சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொண்டு சில சமயம் கவலை அடைவீர்கள். நாரிநோ, நெஞ்சுநோ, உடல்வலிகள், உஷ்ண பீடைகள் எனத் திடீரென வரும். கிருமித்தாக்கம் வராது பார்த்துக்கொள்ளுங்கள். மனச்சோர்வு வரலாம் சமாளித்துக்கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.

**இடபம்:** உங்களுக்கு எதிர்பாராத திசை திருப்பமொன்று ஏற்படும். நல்ல காரியமொன்று செய்யும் பொழுது உறக்கம் வராது தானே, திட்டமிட்டு முன்னேறுங்கள். வாழ்வின் உயர்வும் தாழ்வும் ஒருவரின் செயற்பாட்டிலேயும் — அவரின் தர்மத்திலேயும்தான் தங்கியுள்ளது. தொழில் ஸ்தானத்திலே சில விஷயங்களைக் கண்டும், காணாமல் இருக்கவேண்டி இருக்கும். சலவருத்தம், கைகால் சோர்வு, மனக்குமுறல், வாய்வு வருத்தங்கள் மாறி மாறிக் கொடுக்கலாம். நெஞ்சுநோ சிலரை வருத்தலாம். தகுந்த வைத்தியம் செய்ய சுகம் தரும். ஏழரைச் சனியால் சில இழப்புக்களைச் சந்திப்பீர்கள். தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி.

**மிதுனம்:** விபரீதம் என வந்துவிட்டால் நீதி, நியாயம், சட்டதிட்டம் என யோசித்துக் கொண்டிருக்க மாட்டீர்களே. அங்கும் இங்கும் ஓடி ஓடி காரியங்களைக் கவனித்தபடி இருப்பீர்களே. தொழில் ஸ்தானத்தில் கொடுக்கல் வாங்கலில் சிக்கலொன்று ஏற்படும். இடமாற்றம் செய்யாதீர்கள். வெளிநாடு என ஏமாறாமலிருக்கவும். உங்கள் திறமையும், மதிநுட்பமும் உங்களைக் காக்கும். தலைவலியா? கால்வலியா? அடிபிடியா காயமா? பிரயாணங்களைத் தவிர்த்து நடவுங்கள். அல்லது இழப்புக்கள் தேடிவர இடம் உண்டு. தெய்வவழிபாட்டாலும், பெரியவர்களின் உதவிகளாலும் பல நன்மைகள் அடைவீர்கள்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, வெள்ளி.

**கடகம்:-** உழைத்து வாழும் சுகம் எதில் வரும்? வெளிநாட்டிலிருந்து இலட்சம் வருவதிலும் பார்க்க உங்கள் வியர்வை சிந்தி உழைக்கும் ஒரு ரூபாவுக்குள்ள பெறுமதி மேல் அல்லவா? தொழில் ஸ்தானத்தில் பல மாற்றங்கள் ஏற்படும். எதிர்ப்பாலார், சக ஊழியர்கள், நண்பர்கள் என்பவர்களால் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தினரின் உதவிகள் கிடைக்கும். அயலவர்கள் ஓடி ஓடி வருவர். ஒரு சிலர் உங்களை அதிகம் வாழ்த்திப் போற்றுவார்கள். அவதானமாக இருங்கள். சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பதை நினையுங்கள். நெஞ்சுச்சளி, நோ, கைகால் வலிகள், சலவருத்தங்கள், உஷ்ண பீடைகள் என்பன வருத்தலாம், அன்பான உள்ளமொன்றுக்காக உங்கள் உள்ளம் அடிக்கடி ஏங்கியபடி இருக்கும் பலன் காணப்படுகின்றது.

★ அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி.

**சிங்கம்:-** ஏன் இந்தப் படபடப்பு? சொல்வாக்கால் கலகம் ஏற்படலாம். தொழில் ஸ்தானத்தில் இதுவரை செய்த சேவையால் போற்றப்படவோ, இலாபம் அடையவோ இடம் உண்டு. பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். தேவையற்ற அரசியல் பேச்சு வேதனைகளைத் தரலாம். எதிலும் நிதானமாகச்செயற்படுங்கள். வாழ்த்திப் போற்றிச் சிலர் உங்களிடம் காரியமாற்ற முயல்வார்கள். காணிக்காகவோ, காசுக்காகவோ அதிக யோசனைகள் ஏற்பட்டபடி இருக்கும் காலமாகும். வாய்வுத் தொல்லை, நெஞ்சுவலி, கண்வலி, உஷ்ண பீடைகள் என்பன ஏற்படலாம். தெய்வத் தொண்டு தொடரப்படும். அதனால் நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி.

**கன்னி:-** அதிக பொருள், பெரிய பதவி, அழகுக்கவர்ச்சி இம்மூன்றிலும் அவதானமாக இருக்க வேண்டும். ஏனெனில் ஏழரைச்சனி இம் மூன்றிலும் ஏறிவந்து தொல்லை தரும். அட்டமத்துச்சனி நடக்கும் உங்களுக்கு அண்டி இருப்பவர்களுடனும், தொழில் ஸ்தானத்தில் இருப்பவர்களாலும் தாங்க முடியாத தொல்லைகளும், அதனால் நீங்கள் அடிக்கடி அமைதியற்று இருக்கும் நிலையும் ஏற்படச் செய்யும். எதிர்பாலாருடன் அவதானமாகநடந்து கொள்ளுங்கள். பொருள் இழப்பொன்று எதிர்பாராத ஏக்கம் அல்லது இழப்பு கொடுக்கும் காலமாகும். தெய்வ வழிபாடு உங்களுக்கும் குடும்பத்தினருக்கும் மிக முக்கியமாகும். நெஞ்சில் சளி, முட்டு, கைகாலில் கடி, இடுப்புவலி, வாத உளைவு என அடிக்கடி சொல்லுவீர்கள். வாய்வுத் தொல்லை இலேசில் போகாது இக்காலத்தில் வருத்தச்செய்யும். தெய்வ வழிபாட்டிலும் ஏழைகளுக்கு உதவுவதிலும் பாடசாலைகளுக்குஉதவுதலிலும்குழந்தைகளுக்கு உதவுதலிலும் பின்னிற்காதீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வெள்ளி.

**துலாம்:** 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இரடா கண்ணா' எனப் பாட்டி சொல்லுவதில் எவ்வளவு உண்மை உண்டு என நீங்கள் உணரும் காலம் இதுவாகும். தொழில் ஸ்தானத்தில் சிலர் ஆசை காட்டி ஏமாற்றப் பார்ப்பார்கள். உங்கள் உறுதி நிலையால் அவர்களின் திசையை மாற்றி விடும் வல்லமை உங்களுக்கு உண்டு. உதயத்தில் புதனிருந்து பல மின்னல் கருத்துக்களை மனதில் தோன்றச் செய்தபடி இருக்கும் காலமாகும். தந்தை வழியினருக்கு நல்லதல்ல; எதிர்ப்பாலாரின் பெற்றோர்களுக்கும் சோதனைக் காலமாகும். உங்கள் புத்திரருக்கோ சகோதரங்களுக்கோ மாற்றமும் அதனால் ஏற்றமும் ஏற்பட இடம் உண்டு. வயிற்றில் பொருமல், உஷ்ணபீடைகள், கைகாலில் கடிகள், சிறுசிறு காயங்கள் வந்து வருத்தியபடி இருக்கும். ரீ. விக்குச் செலவு, படிப்போ தொழிலோ சிந்தனையில்லை

## மகாதேவா ஜோதிடம்

என குடும்பத்தவரின் மனக்குறைகளுக்கு ஆளாகுவீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன், வெள்ளி.

**விருச்சிகம்:** என்னதான் கட்டுப்பாடாக இருந்தாலும் செவ்வாயின் பார்வை அடிக்கடி கோபித்தபடி இருக்கத்தான் செய்யும். தொழில் ஸ்தானத்தில் நன்மையான மாற்றம் அல்லது மேலதிகாரிகள், அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்க இடம் உண்டு. மற்றவர்களின் முணுமுணுப்பு இருக்கும். ஆனால் உங்களை எவரும் எதுவும் செய்துவிட முடியாது. நெஞ்சுநோ — நாரிநோ — அடிக்கடி உணர்ச்சி மேலிடுதல் — அதிக கோபங்கள் — உஷ்ணபீடைகள் — வாய்வுத் தொல்லைகள் என்பன அடிக்கடி கொடுக்கலாம். உங்களை இக்காலத்தில் பிறர் தூற்ற இடம் உண்டு. எனவே வார்த்தைகளை நிதானமாக அளந்து பேசுங்கள். அதனால் மாற்றங்கள் பல ஏற்பட இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

**தனுசு:** மனிதனாய் பிறந்தவன் ஏதாவது செய்து சாதனைபடைக்க வேண்டும் என அடிக்கடி சொல்லுவீர்கள். அளவுக்கு மீறிய திட்டம், வார்த்தையாடல்களால் அடிக்கடி மனக்கலக்கம் ஏற்படச் செய்யும். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். ஆயினும் எதிர்ப்பாலாரின் அன்பும், ஆதரவும் உங்களை உற்சாகப்படுத்தியபடி இருக்கும். எதிலும் எதிர் நீச்சலடித்து கரையேறியபடி இருப்பீர்கள். குடும்பத்தில் உங்களைப் பற்றி அபிப்பிராய பேதங்கள் ஏற்படும். நாட்டில் போராடலாம்; வீட்டில் போராட முடியுமா? எனவே நிதானமாக நடந்து கொள்ளுங்கள். நாரிநோ, வயிற்றில் சலசலப்பு, சளித்தொல்லை, வாய்வுக்குழப்பம் என்பன சுமாராக இருக்கத்தான் செய்யும். பலதையும் கதைக்காமல் செயற்படுத்துவதிலேயே உங்கள் சாமர்த்தியம் வேண்டும்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

**மகரம்:** பொறுமையாக, எளிமையாக, சாதுரியமாகச் செயற்பட்டபடி இருப்பீர்கள். உங்களை எல்லோரும் ஒரு கண்ணியமான மனுஷனாக நினைப்பார்கள். எதிர்ப்பாலாரின் ஆதரவு இருக்கும். தொழில் ஸ்தானத்தில் மெல்ல மெல்ல ஓடும் செயற்பாடுகளால் எதிர்ப்புக்கள் வந்தாலும் சில சமயம் எவராலும் சாதிக்கமுடியாத செயல்களால் சாதனை படைப்பீர்கள். எதையும் நிதானத்துடன் செய்வீர்கள். எந்த விஷயத்திலும் தாமரை இலையின் தண்ணீர் போன்று இருந்து வெற்றி பெறுவீர்கள். கைகால் உளைவு, வாய்வுத் தொல்லை, ஜீரணக் கோளாறு, தோல் வருத்தங்கள், உரசல்காயங்கள், சளித் தொல்லை என்பனவற்றால் வருந்த இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வியாழன்.

**கும்பம்:** நாலு மனுஷர்கள் ஏதாவது நல்லதைச் செய்ய மாட்டார்களா? இருக்கும் வீட்டையும், செய்யும் தொழில் பீடங்களையும் அடிக்கடி அழகுபடுத்தியபடி இருப்பீர்கள். எப்பொழுதும் ஏதாவது பொருளைப் பற்றியோ அல்லது எந்த மனுஷரைப்பற்றியோ ஆராய்ந்தபடிதான் இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி கலகமாக இருக்கும். ஒருவரின் செயற்பாடுகள் அவரின் மனவியல்பைப் பொறுத்து மாறுதல் அடையும் என்பதை அறிந்தவர்கள் நீங்கள். எதிர்ப்பாலாரைக் கௌரவப்படுத்த மறவாதீர்கள். எதையும் அளந்து அளந்தும், உணர்ந்து உணர்ந்தும் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள். உண்மைக்காகப் போராடும் நல்ல மனம் கொண்டவர்கள் நீங்கள். நாரிநோ, நரம்புச் சோர்வு, நெஞ்சுவலி, அடிக்கடி பயம், முட்டுச்சளி, அஜீரணம் என்பன கொடுக்கலாம்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.

**மீனம்:** நிலையில்லா உலகில் நிரந்தரமானது எதுவுமில்லை. எதிர்நீச்சல் அடித்தபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பாலாரால் வேதனையும், சோதனையும் ஏற்படச் செய்யும். சனீஸ்வரனின் தாக்கத்தால் எதிர்பாராத இழப்புக்கள் ஏற்படச்செய்யும். தொழில் ஸ்தானத்தில் பொருளால் அவதி ஏற்படலாம். சொந்தக்காரர்களையும், நண்பர்களையும் நம்பமுடியாது. சளித்தொல்லை, சஞ்சலமான சிந்தனைகள், கைகால் விறைப்பு, மலசலவருத்தங்கள் அடிக்கடி கொடுத்தபடி இருக்கும். இது சரியா? இது பிழையா? எனச் சிந்தித்துச் செயற்படுங்கள். கால வெள்ளத்தில் கலக்காமல் காரிய சித்தியுள்ளவர்களாகச் செயற்படுங்கள்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.

## மயக்கம் தவிர்!

மலரைக் காதல் கொள் — மலர்
மணத்தைக் காதல் செய்
மதுவைக் காதல் கொள் — மது
மயக்கம் தவிர்த்து நில்!

உழைப்பில் நாட்டங் கொள் — நீ
உலகை வாங்கிக் கொள்
உயர்வாய் வாழ்ந்து செல் — பணம்
உயர்வென்ற சிந்தை விடு!

படிப்பினில் தேர்ச்சி பெறு — பட்டம்
பதவிகள் பெற்று மிளிர்
பாரை உயர்த்தி விடு — மெலியோர்
முதுகை மிதிப்ப தொழி!

உரிமை வென்று எடு — இருப்பை
உலகில் நாட்டி விடு
கொடுமை கண்டு எழு — குண்டு
மழையைத் தவிர்த்து விடு!

பசுமை கண்டு மிளிர் — உலகை
வறுமை தின்னா தொழி
விளைவைப் பெருக்கிட வாழ் — பதுக்கல்
செயலைச் சரித்துவிடு!

சுரங்கம் அகழ்ந்து எடு — வளம்
சுரந்திட விண்ணினை வெல்
நிரந்தரம் கண்டு விடு — புதைகுழி
புரட்டல் தவிர்த்து விடு!

உலகெலாம் சென்று உயிர் — முந்தை
உன்தோம்பு சொல்லி மகிழ்
மடிவினில் அடிமையாய் வாழ் — போதை
மடிவிற்றுத் தாயை விலேல்!

— இராகவன் —

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விடைகள்

XI ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### வார்த்தை விளையாட்டு

பூரம், பூதம், பூரணம், பூமி, பூத கணம், பூகம்பம், பூனை, ரணம், ரதம், ரம்மியம், ரகம், ரம்பம், ரவி, தம்பம், தரம், தம், தகம், தகரம், தவி, தர, தவில், தசை, தவிர, தரல், தணல், தபம், மிதம், மிதவாதம், மிக, வாரம், வாதம், வாரணம், வால், வாவி, வாணம், கணம், கரம், கதம், கல், கயல், கரணம், கரகம், கம்பம், கவி, கல்வி, கசை, பணம், பதம், பயம், பகல், பல், பம்பரம், பயணம், பதவி, பரல், பரம், பரதம், பசை, வில், விவாதம், விபரம், விரதம், விரல், விரயம், விதம், விகல்பம், விம்பம், விசை.

### உங்களால் முடியுமா?

(1) வடம். (2) வனம். (3) வளம். (4) வதம். (5) வரம். (6) வசம். (7) வலம். (8) வரும்.

### முயன்று பாருங்கள்

(1) மது. (2) மரை. (3) துரை. (4) மாது. (5) நகரம். (6) கரம். (7) நகம். (8) நரை. (9) மரம். (10) கரை. (11) நமது. (12) நரகம். (13) மாமரம். (14) மகரம். (15) மதுரம். (16) மாமதுரை. 17. நகரை. (18) நம.

### இயலுமா?

பெண்ணின் ஏழு பருவங்கள்:-

(1) பேதை. (2) பெதும்பை. (3) மடந்தை. (4) பேரிளம் பெண். (5) தெரிவை. (6) அரிவை. (7) மங்கை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா | பே | வை | ரி | தெ | லா |
| ரீ | ரி | தை | ம | ன் | கை |
| அ | ள் | னு | ந் | ங் | ர |
| ன் | ம் | ன் | ம | ட | த |
| ந | பெ | து | ம் | பை | ம |
| கு | ண் | ர | கு | ம | ணா |

# கடலில் முடிந்த....

(VII ஆம் பக்கத் தொடர்)

தப்படும் சரக்கு விமானங்களில் சிலசமயங்களில் காயமடைந்த படையினரும், படையினருக்கான பொருள்களும் ஏற்றப்படுவதை ஒப்புக்கொண்டார். கடலில் வீழ்ந்த 'லயன்ஏயர்' விமானத்துக்குப் பின்னால் சற்றுத் தாமதமாகப் பலாலியில் இருந்து புறப்பட்ட 'லயன் ஏயர்' சரக்கு விமானம் ஒன்றில் எண்ணிக்கை வெளியிடப்படாத காயமடைந்த படையினர் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளனர். கிளிநொச்சி, பரந்தன் படை நிலைகள் மீது புலிகள் தொடுத்ததிடீர்த்தாக்குதலில் வழமையைவிட ஒரே சமயத்தில்பெரும் எண்ணிக்கையான படையினர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரையும் ஆனையிறவு, பலாலி ஊடாகவே மருத்துவ மனைகளுக்கு அனுப்பவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனையிறவில் இருந்து ஹெலிகளும், பலாலியில் இருந்து விமானங்களும் மாறிமாறி இடைவிடாது அவர்களை ஏற்றி இறக்கின.

'லயன் ஏயர்' விமானங்களைப் படையினர் பயன்படுத்துவதை அறிந்து வைத்திருந்த புலிகள் காயமடைந்த படையினரை ஏற்றிச் செல்லும் தருணம் பார்த்து அதன்மீது தாக்குதல் தொடுத்திருக்கலாம்; துரதிர்ஷ்டவசமாக அந்த விமானத்துக்கு முன்பதாகச் சென்ற பயணிகள் விமானம் அதில் சிக்கியிருக்கலாம் என்று சிலர் நம்புகின்றனர்.

பொதுவாக கடும் சண்டை நடைபெறும் சமயங்களில் பலாலி ஊடாகப் பயணிகள் விமான சேவைகள் நடப்பதில்லை. எனவே அன்றைய தினம் சகல தனியார் விமான சேவைகளிலும் கிளிநொச்சியில் காயமடைந்த படையினரே ஏற்றிச் செல்லப்படுவர் எனப் புலிகள் எதிர்பார்த்திருக்கலாம் என்றும்—

ஆனால் பயணிகள் செல்ல ஒரு விமானத்தை முதலில் அனுமதித்துவிட்டு பின்னால் காயமடைந்த படையினர் அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்றும் —

எனவே இலக்குத் தவறிவிட்டதாகவும் —

கொழும்புச் செய்தி ஊடக வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டிற்கான சகல தனியார் விமான சேவைகளையும் பாதுகாப்புஅமைச்சு இடைநிறுத்தி உள்ளது. எனினும் விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக முயற்சிகள் கொழும்பில் நடைபெறுவதாகத் தெரிகிறது. அவசர பயணங்களை மேற்கொள்ளவேண்டிய நூற்றுக்கணக்கானோர் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பயணம் தடைப்பட்டுக் காத்து இருப்பதால் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க அனுமதிபெற முயற்சி எடுக்கப்படுவதாகக்கூறப்படுகிறது.

ஆனால் புலிகளின் எச்சரிக்கை, அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற விமான அனர்த்தம் ஆகியவற்றின் பின்னர் தொடர்ந்தும் விமானங்களில் பயணம் செய்ய மக்கள் முன்வருவார்களா என்பது சந்தேகமே. ஆனால் தேவைகளும், அவசரங்களும் அதிகரிக்கும்போது பயண வழிகளில் உள்ள ஆபத்துக்களை உணரத் தவறிவிடுவது அவர்களின் இயல்பு. 'லயன்ஏயர்'விமானம் காணாமற் போன மறுநாள் காலை பயண ஆயத்தங்களுடன் யாழ். ரயில்நிலையப் பகுதிக்கு வந்திருந்த பயணிகளின் எண்ணிக்கை இதற்கு எடுத்துக்காட்டாகும். ஆனால் இது விடயத்தில் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளவேண்டியவை சம்பந்தப்பட்ட பயண நிறுவனங்கள்தான். விமானத்துக்கும், விமானிகளுக்கும் பயணிகளுக்கும் காப்புறுதி செய்துவிட்டால் மட்டும் தமது பொறுப்பு முடிந்துவிட்டதாகக் கருதக் கூடாது. யுத்தப் பகுதி வான்பரப்புகளில் சிவில் விமானங்களைச் சேவையில் ஈடுபடுத்தும்போது தள நிலைமைகளை அலட்சியம் செய்யவும் முடியாது. போரில் ஈடுபடும் தரப்புக்களின் உத்தரவாதத்தை நடுநிலைமையான அமைப்புக்களின் உதவியுடன் உறுதி செய்துகொள்ளாமல் அவசரமாக மீண்டும் சேவைகளை ஆரம்பிப்பது பயணிகளை ஆபத்தான பாதைக்கு அழைத்துச் செல்வதாகவே முடியும்.

### இலங்கையில் 'அன்ரநோவ்' அனர்த்தங்கள்

இதேவேளை உக்ரைன் நாட்டுத் தயாரிப்பான 'அன்ரநோவ்' ரக விமானங்கள் இலங்கையில் ஏற்கனவே பல தடவைகள் அனர்த்தங்களில் சிக்கியுள்ளன.

இலங்கையில் உள்ளூர்ப் பயணிகள் விமான சேவையிலும் இராணுவ போக்குவரத்துச் சேவையிலும் 'அன்ரனோவ்' ரக விமானங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

1995 இல் விமானப்படை விமானங்களை விடுதலைப் புலிகள் இலக்குவைக்கத் தொடங்கியதை அடுத்து குடாநாட்டில் முடங்கிப் போன துருப்புகளுக்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்காக மூன்று 'அன்ரனோவ் ஏ. என். 32 பி' ரக இராணுவப் போக்குவரத்து விமானங்களை அரசு அவசர அவசரமாகக் கொள்வனவு செய்தது.

ஆனால் இந்த விமானங்களில் இரண்டை அதே ஆண்டு விமானப்படையினர் அடுத்தடுத்து இழக்க வேண்டி ஏற்பட்டது.

முதலாவது விமானம் 13 – 09 – 1995 இல் இரத்மலானையில் இருந்து பலாலிக்கு வெள்ளோட்டம் வந்த சமயம் நீர்கொழும்புக்கு அருகே ஜா — எல கடற் பகுதிக்கு மேலே பறந்து கொண்டிருந்தபோது மர்மமான முறையில் வானில் வெடித்துச் சிதறி கடலில் வீழ்ந்து மூழ்கியது. அதில் இருந்த 75 படையினரும், விமானிகளும் பலியாகினர்.

இரண்டாவது 'அன்ரனோவ்' 95 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் திகதி பலாலி விமான நிலையத்தில் இருந்து 15 கிலோ மீற்றர் மேற்கே காரைநகர் கடற்பரப்பில் வீழ்ந்து நொறுங்கியது. அதிலிருந்த 60 படையினரும் நான்கு விமானச் சிப்பந்திகளும் உயிரிழந்தனர்.

மூன்றாவது 'அன்ரனோவ்' விமானம் அடிக்கடி இயந்திரக் கோளாறுகளுக்கு உள்ளாகி வந்தது. இவற்றை விட பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையே சேவையில் ஈடுபட்ட சமயங்களில் 'அன்ரனோவ்' ஏ.என். 24 ரக விமானங்களும் இயந்திரக் கோளாறுகளுக்கு உட்பட்ட சம்பவங்களும் அவ்வப்போது இடம்பெற்று வந்தன. ★

# குறும்பாவின்....

(VIII ஆம் பக்கத் தொடர்)

இப்படி ஒரு சந்தேகத்தை எழுப்புதல் வேடிக்கையாக இருக்கிறது. எனினும் இலக்கிய உலகில் இது புதுமையன்று.

''ஓடையிலே என் சாம்பல்
கரையும் போதும்
ஒண்தமிழே சலசலத்து ஓட
வேண்டும்''

எனும் பண்டிதர் சச்சிதானந்தனின் பாடலை பாரதிதாசன் பாடியதென்றும், காசி ஆனந்தன் பாடியதென்றும் சிலர் கூறித்திரிந்ததை நானறிவேன்.

ஓர் இலக்கிய விழாவில் மிகவும் பிரபலமான பேச்சாளர் ஒருவர், ''கேட்டது தமிழ் ஈழம், கிடைத்தது ஜப்பான் ஜீப்'' என பிறிதொரு கவிஞரின் பெயரைச் சிலாகித்து அவர் அற்புதமாகப் பாடியுள்ளார் எனக் கூறிவானளாவப் புகழத் தொடங்கிவிட்டார். அவர் பேசி முடிந்ததும் நான் தலையிட்டு இப்பாடலை ஆவரங்கால் கூட்டணி மகாநாட்டில் காரை செ. சுந்தரம்பிள்ளை தான் பாடியவர் எனக் கூறித் திருத்த வேண்டியதாயிற்று.

எனக்குச் சில்லையூர்செல்வராசனும் நண்பர்; மகாகவியும் நண்பர். ஆனால் எவ்வித காய்தல் உவத்தலின்றி நடுநிலைமை நின்று இதற்கு விடை கூறவேண்டும் என்ற காரணத்தினால் இக்கட்டுரையை எழுதியுள்ளேன். சில்லையூரார்தான் குறும்பாவின் தந்தை எனக் கூறுகின்றவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவினால் அவர்களுடன் தமிழ் கூறும் நல்லுலகத்தோடு நானும் ஏற்றுக் கொள்வேன். ★

# யாழ். மக்கள் இறுகப்...

(II ஆம் பக்கத் தொடர்)

திப்புகளின் போது மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு ஜோசப் அடிகளாரும் உடனிருந்தார்.

தென்பகுதியில் பேச்சு வார்த்தை, அரசியல் தீர்வு என்ற செய்திகள் பலமாக இருப்பதனால் விடுதலைப் புலிகளையும் நல்ல மனங்காட்டி இணங்கும் படியாகவும் —

மக்கள் அமைதியையே விரும்புவதனால் அமைதிக்கான நல்ல சமிக்ஞைகளை கொடுக்குமாறுமட்டுமே தாம் கேட்டுக் கொண்டதாகவும் ஆயர் தகவல் தெரிவித்தார்.

ஆளும் கட்சியான பொது மக்கள் ஐக்கிய முன்னணியும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் சேர்ந்து, இணங்கி தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்கட்டும். அதன் பின்னர் மூன்றாம் தரப்புமூலம்பேசலாம் —

கடந்தமுறை — 1995 இல் — நடைபெற்ற பேச்சுக்களை நாமே முறித்ததாக அரசாங்கம் இன்று வரைக்கும் பல சர்வதேச அரங்குகளிலும் கூறி வருகிறது. ஆகையால் அப்படி ஒரு நிலைமை இனியும் ஏற்படாத வகையிலேயே பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டும் என்பதே எமது விருப்பம் —

பேச்சுவார்த்தை உருப்படியானதாக இருக்கவேண்டும். அவ்வாறன்றி பேச்சு வார்த்தை நடப்பதாகக் கூறி காலத்தைக் கழிப்பது நல்லதல்ல. நாம் அத்தகைய ஒரு பேச்சு வார்த்தையை நடத்த விரும்பவில்லை. —

இவ்வாறு விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் தம்மிடம் கூறியதாக யாழ். ஆயர் 'சஞ்சீவி'க்கு தெரிவித்தார்.

போர் நீங்கி அமைதி ஏற்படுவதற்கு சகல தரப்பினரும் முயற்சி செய்ய வேண்டும்; ஒத்துழைக்க வேண்டும் என்பதே தமது விருப்பமாகும் என்று ஆயர் மேலும் விளக்கினார்.

★ ★ ★

யாழ்ப்பாணத்தில் மற்றுமொரு அரசியற் கொலை நடைபெற்றிருக்கிறது. கரவெட்டி பிரதேச சபை உறுப்பினரான கனகசபை இராஜதுரை இம்மாதம் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மரணமானார். கொலையுண்ட இராஜதுரை (46 வயது) ஈ. பி. டி. பி. கட்சியைச் சேர்ந்தவராவார்.

இவர் ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் தனது பணியை முடித்துக் கொண்டு வீடு சென்ற வேளை, வீட்டு வாசலில் வைத்து சுடப்பட்டார். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு முன்னர் அவரது வீட்டிற்கு இருவர் சென்று அவரைப்பற்றி விசாரித்ததாகச் சொல்லப்படுகிறது.

இவருடைய கொலைக்கான சரியான காரணம் இன்னும் தெரியவரவில்லை. அதே போன்று இந்தக் கொலையைச் செய்தவர்கள் யார் என்றும் நிச்சயமான தகவல்கள் இல்லை.

விடுதலைப் புலிகளே இந்தக் கொலையின் சூத்திரதாரிகள் என்று பரவலாகப் பேசப்பட்ட போதிலும் —

இப்போது அரசியலில் ஈடுபட்டு உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைக் கைப்பற்றியுள்ள கட்சிகளின் ஒன்றின் மீதும் இக் கொலை சம்பந்தமாக சந்தேகக் கண் விழுந்திருப்பதாக வேறு தகவல்கள் உள்ளூரப் படர்ந்து வருகின்றன.

இவை இரண்டிற்கும் மேலதிகமாக சில குறிப்பிட்ட காரணங்கள் கருதி இக் கொலை நிகழ்ந்திருக்கலாம் எனவும் மக்கள் மத்தியில் ஊகங்கள் சொல்லப்படுகின்றன.

காரணம் எதுவோ மந்திகையில் சுட்டுக் கொல்லப்பட்ட கரவெட்டிப் பிரதேச சபை உறுப்பினர் இராஜதுரையின் மரணம் கொலை என்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைக்கான உண்மைக் காரணம் உடனடியாகக் கண்டுபிடிக்கப்படுமா, அல்லது அறியப்படாத, புதிராகவே தொடருமா என்பது நாள்கள் நகரத்தான் தெரியும்! ★

# புதைகுழியில்.....

(I ஆம் பார்க்கத் தொடர்)

கொண்டு, அவ்வுடம்பு ஆணா, பெண்ணா என்பதையும் வயது என்ன என்பதையும் தொழில்நுட்ப ஆராய்ச்சி மூலம் கண்டு கொள்ளலாம்.

அவர் உயிருடன் இருந்த போது சிகிச்சைக்காக தலையிலோ, காலிலோ, கையிலோ 'எக்ஸ்றே கதிர்வீச்சுப்படம்' வைத்தியசாலையில் எடுத்திருந்தால் சிலசமயங்களில் அதனைப்பாவித்து அந்த உடலை அடையாளங்காட்டுவது சுலபமாகவிருக்கும்.

புதைக்கப்பட்ட உடலின் முதுகெலும்பு, தலை. கை, கால், விலாஎலும்புகள் ஆகியவற்றை அசையாது அப்படியே வெளியில் எடுப்பது அவசியம். அதற்கு இவ்விடயத்தில் நிபுணத்துவம் அடைந்த வல்லுநர்கள், சட்டம் சார்ந்த மருத்துவர் குழு அவசியமாகும். இத்தகைய உடல்களின்எலும்புக் கூட்டை அகற்றுவதற்கு அதற்கான உபகரணங்கள் அவசியம். இது விடயங்கள் சட்ட நுணுக்கத்தின்பால் அவசியமானதால் இவற்றை மிகவும் கவனமாக நடைமுறைப் படுத்தல் வேண்டும்.

சட்ட முறைப்படி அவை செய்யப்படாதுவிடின் புதைக்கப்பட்ட சடலம் தொடர்பாக உய்தறியப்படும் நிபுணத்துவ முடிவுகளை சட்டம் ஏற்காத நிலையும் உருவாகலாம். ★

# வித்தியாசமான.....

(VI ஆம் பக்கத் தொடர்)

லும் கலந்து வெளிவந்தன.

'பைத்தியக்காரக் கதை கதைக்காதையுங்கோ ... விஷநாகத்தை ஊருக்குள்ளை வளர்க்கிறதுதான் கேடு. எங்கையோ பழக்கப்பட்ட நாகமாக்கும்...... அதாலை சனத்தோடை நல்ல பாம்புமாதிரிப் பழகியிருக்கு... ஆனால் நச்சுப்பல்லு இல்லாமல் போயிருக்காது.'' திவாகரன் தீர்மானமாகச் சொன்னான்.

''ஓமம்மா... நஞ்சுப் பல்லை பிடுங்கினாக்கூட பிறகும் வளருமாம்.'' ரம்யாவும் அண்ணா பக்கம்தான் என்பது போலக் கூறினாள்.

''மற்றப் பாம்புகளை நீங்கள் என்னவேணுமெண்டாலும் செய்யுங்கோ... இந்தப் பாம்பு ஒருதருக்கும் ஒண்டும் செய்யேல்லையெண்டதுக்காக வேனும் கொல்லாமல் விட்டிருக்கலாம்...என்ன மனுசரப்பா!! பாம்பு செத்ததுக்காக கவலைப்படுகிறதுகூடப் பிழையெண்ட மாதிரி அப்போதை தொடங்கி இந்தப் பொடியன்......''

சியாமளாவின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

இந்த அளவுக்கு அவளை உணர்ச்சி வசப்படவைக்குமளவிற்கு இருந்ததால் அந்தப் பாம்பு வித்தியாமானது தானே?

நான் சிந்தனை வசப்பட்டேன். ★

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய நாடுகளுக்கு அச்சுறுத்தலாக மாறிவரும் வட கொரியா!


சீனா பெரும் வல்லரசாக உருவெடுத்த பின்னர், அப்பிராந்தியத்தில் உள்ள ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகளுக்கு வடகொரியா பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் கருதுகின்றன.

சீனாவின் கைப்பொம்மையாக வடகொரியா செயற்படுவதே இதற்குக் காரணம்.

அப்பிராந்தியத்தில் அமெரிக்கா சுமார் 1 லட்சம் படைகளைக் குவித்து வைத்திருக்கின்றது.

அமெரிக்காவின் படைக் குவிப்பை நியாயப்படுத்தும் வகையில் பனிப்போர் நடைபெறும் கடைசிப் பிராந்தியமாக இப்பிராந்தியம் இன்னும் இருந்து வருகிறது.

ஒகஸ்ட் இறுதியில் வடகொரியா விண்வெளியில் ஏவிய ஏவுகணையினால் ஏற்பட்ட பரபரப்பு இன்னும் அடங்கவில்லை. அது ஜப்பானுக்கு மேலாகச் செலுத்தப்பட்டது.



வடகொர்ரியா ஏவிய ஏவுகணை

தான் மூன்று கட்ட றொக்கட் ஒன்றின் மூலம் செய்மதி ஒன்றையே வானவெளியில் ஏவியதாக வடகொரியா தெரிவிக்கிறது.

''பிரைட் ஸ்ரார்'' என்ற இந்தச்செய்மதி பூமியை வலம் வந்து கொண்டிருப்பதாகவும் வடகொரியா கூறுகிறது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற 2 வாரங்களின் பின்னர் பூமியில் சுற்றுப்பாதையில் 13 கிலோ எடையுள்ள புதிய செய்மதிஒன்றுவலம்வருவதை அமெரிக்காவும் உறுதிப்படுத்தியது.

ஆனால் இதன் தொழில்நுட்ப திறன், இது ஏவப்பட்ட விதம் ஆகியவை அண்டைநாடுகளை — பிரதானமாக ஜப்பானை — கிலிகொள்ள வைத்திருக்கிறது.

இந்த விவகாரத்தை ஜப்பான் கையாண்ட விதம் ஜப்பானின் புதிய பிரதமர் ஒபுச்சிக்கு (Obuchi) உள்நாட்டில் நெருக்கடிகளைக் கொடுத்துவருகிறதுஎனலாம்.

இது றொக்கட் அல்ல. ''தேபொடாங்—1''(Taepodang —1) உந்துவிசை ஏவுகணை என்பதே பெரும்பாலான நாடுகளின் கருத்து.

### ''றொடோங்-1''

வடகொரியா 1993 இல் றொடோங்—1 (Rodong -1) என்ற ஏவுகணையை முதன் முதலில் பரீட்சித்தது. இந்த ஏவுகணை 1300 கிலோ மீற்றர் வீச்செல்லை கொண்டது.

குறுகிய தூர வீச்செல்லை கொண்ட ''ஸ்கட்'' (Scud) ஏவுகணை உற்பத்தியை வடகொரியா கைவிட்ட பின்பே ''றொடோங் —1'' ஏவுகணையை வெற்றிகரமாகப் பரீட்சித்தது.

1991 வளைகுடா யுத்தத்தின்போது ஏவுகணையின் முக்கியத்துவம் பெரும் அளவில் உணரப்பட்டது. உலக நாடுகள் ஏவுகணை உற்பத்தியில் போட்டா போட்டி போடத் தொடங்கின. சமீபத்தில் பாகிஸ்தானும் ஈரானும் ஏவுகணைகளைப் பரிசோதித்தன. இந்தியா ஏவுகணைப் பரிசோதனையுடன் அணுவெடிப்புப்பரிசோதனைகளையும் நடத்தியது. பாகிஸ்தானும் அணு வெடிப்புப் பரிசோதனைகளை நடத்தி இந்தியாவுக்குத் தான் சளைத்த நாடு அல்ல என்று காட்ட முயன்றது.

### "தேபொடாங் - 1"

கடந்த ஒகஸ்ட் இறுதியில் வடகொரியா ஏவிய தேபொடாங் — 1 ஏவுகணை 2000 கிலோ மீற்றர் தூர வீச்செல்லை கொண்டது.

தென்கொரியாவையும் ஜப்பானின் முழுப் பகுதிகளையும் ஜப்பானில் உள்ள குவாம் அமெரிக்க தளத்தையும் இதன் மூலம் தாக்கமுடியும்.

அடுத்த கட்டமாக ''தோபொடாங் —2'' ரக ஏவுகணையை வடகொரியா உற்பத்தி செய்துவருவதாக அமெரிக்க உளவு அறியும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

4000 கிலோ மீற்றர் முதல் 6000 கிலோ மீற்றர் வரை வீச்செல்லை கொண்டது இது. இத்தகைய ஏவுகணை மூலம் வடகொரியாவில் இருந்து அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்தை தாக்க முடியும். ஈரானில் இருந்து லண்டனைத் தாக்க முடியும்.

ஏவுகணை உற்பத்தியில் வடகொரியா மட்டும் அல்ல ஈரான், ஈராக் ஆகிய நாடுகளும் ஈடுபட்டு வருகின்றன. ஈராக் மீதான ஐ. நாவின் தடைகள் காரணமாக ஈராக்கின் ஏவுகணைத் திட்டம் பின் தள்ளப்பட்டுள்ளது. உற்பத்தி செய்து வைத்திருந்த நீண்ட தூர வீச்செல்லை கொண்ட ஏவுகணைகளையும் ஈராக் மறைத்து வைத்துள்ளது.

1993இல் 'றொடோங் —1' ஏவுகணையை வடகொரியா சோதனை செய்வதற்கு முன்னர் சோவியத் யூனியன் 1950 களில் உற்பத்தி செய்த 'ஸ்கட்' ரக ஏவுகணைகளையே வடகொரியா உற்பத்தி செய்து வந்தது.

இத்தகைய ஏவுகணைகளில் 400ஏவுகணைகளை 1981இல் ஈரானுக்கும் ஈராக்குக்கும் வடகொரியாவிற்றது. எட்டு ஆண்டுகள் நடைபெற்ற ஈரான் — ஈராக் யுத்தத்தில் இரு நாடுகளும் இத்தகைய ஏவுகணைகளையே பெரும் அளவு பயன்படுத்தி வந்தன.

ஆனால் 1990 இல் பனிப்போர் முடிவடைந்த பின்னர் ஏவுகணை உற்பத்தியில் ரஷ்யாவினதும் அமெரிக்காவினதும் பழைய தொழில் நுட்பங்களையும் நிபுணத்துவத்தையும் இலகுவாகப் பெற முடிந்தது. ஈரான், ஈராக், பாகிஸ்தான், இந்தியா, வடகொரியா ஆகிய நாடுகள் ஏவுகணை உற்பத்தியில் சுலபமாக ஈடுபட இதுவே காரணம் என்று நம்பப்படுகிறது.

உணவுப் பஞ்சம், பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள வடகொரியா தனது வருமானத்தின் மூன்றில் ஒரு பகுதியை மத்திய கிழக்குக்கான ஆயுத விற்பனை மூலம் பெற்று வருகிறது.

1950 களில் இருந்து வரும் அமெரிக்க பொருளாதாரத் தடைகள் வடகொர்யாவை பெரும் அளவு பாதித்து வருகின்றன. ஊட்டச்சத்துக் குறைவால் குழந்தைகள் மரணம் அடைகின்றன.

### 1994 உடன்பாடு

''றொடோங் — 1'' ஏவுகணையை வடகொரியா பரிசோதனை செய்த பின்னரே வடகொரியாவுடன் பேச்சு நடத்த வேண்டிய அவசியத்தை அமெரிக்கா உணர்ந்தது. சர்வதேச சமூகத்திலிருந்து வடகொரியாவை ஒதுக்கிவிட முடியாது என்பதையும் அமெரிக்கா ஏற்றுக் கொண்டது.

1994 இல் வடகொரியா, தென்கொரியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாக தனது அணு சக்தி திட்டங்களை கைவிட வட கொரியா இணங்கியது.

அதற்குப் பதிலாக அணுகுண்டு உற்பத்திக்கு பயன்படுத்த முடியாத 460 கோடி டொலர் பெறுமதியான இரு அணு உலைகளை வடகொரியாவுக்கு வழங்க இணக்கம் காணப்பட்டது.

வட கொரியா மீதான பொருளாதாரத் தடைகளை சிறிது சிறிதாக தளர்த்தவும் அமெரிக்க அதிபர் கிளின்ரன் இணங்கினார். அமெரிக்காவும் வட கொரியாவும் அதிகாரிகள் மட்டத்தில் தொடர்புகளை வைத்துக் கொள்ளவும் இணக்கம் காணப்பட்டது.

கொரியதலைவர் கிம்யொங் இல்லுக்கு கிளின்ரன் இது தொடர்பாக கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தார்.

### காற்றில் பறக்க விடப்பட்ட உறுதிமொழிகள்

ஆனால் இந்த உறுதிமொழிகள் அனைத்தும் காற்றில் பறக்கவிடப்பட்டுவிட்டதாக வட கொரியா தற்பொழுது கூறுகிறது.

460 கோடி டொலர் செலவான இந்த அணு உலைகள் வழங்கும் திட்டம் படிப்படியாக அமுல் செய்யப்பட்டு 2003 ஆம் ஆண்டில் பூர்த்தி அடைய வேண்டும்.

ஆனால் இந்த அணுஉலைகளுக்காக ஜப்பான் வழங்க சம்மதித்திருந்த 100 கோடி டொலரையும் ஜப்பானுக்கு மேலாக வட கொரியா செலுத்திய ஏவுகணை காரணமாக ஜப்பான் இடை நிறுத்திவிட்டது. ஜப்பானில் உள்ள கொரியர்களினால் நடத்தப்பட்டு வந்த ஜப்பான்—வடகொரியா விமானச் சேவையும் நிறுத்தப்பட்டுவிட்டது. வட கொரியாவுடன் நடத்தியபேச்சுக்களையும் ஜப்பான் முறித்துக் கொண்டு விட்டது.

### ஒபுச்சிக்கு உள்நாட்டில் எதிர்ப்பு

பிரதமர் ஒபுச்சிக்கு உள்நாட்டில் உருவான எதிர்ப்புணர்வே அவர் வடகொரியா விடயத்தில் கடுமையாக நடந்துகொள்ள காரணமாயிற்று.

ஜப்பானின் பாதுகாப்புக் குறித்து ஜப்பானிய எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டன. 1950—53 கொரிய யுத்தத்தில் வட கொரியா, சீனா தென் கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகளே நேரடியாகப் பங்கு பற்றின. எனினும் ஜப்பான் வட கொரியாவை இன்னும் சந்தேகக் கண் கொண்டே நோக்கி வருகிறது.

ஒகஸ்ட் 31 ஆம் திகதி வட கொரியாவின் உட்புற நகரான தேபொடாங் நகரில் இருந்து இந்த ஏவுகணை செலுத்தப்பட்டதாலேயே இது ''தேபொடாங்—1'' என்று அழைக்கப்படுகிறது.

வட கொரியா இதனை றொக்கட் என்று தெரிவித்தாலும் பெரும்பாலான நாடுகள் இதனை ஏற்க இன்னும் தயார் இல்லை.

இந்த ஏவுகணையின் முதலாவது கட்டம் ஜப்பானிய கடலில் விழுந்தது. இரண்டாவது கட்டம் ஜப்பானுக்கு மேலால் சென்று ஜப்பானிய கரையில் இருந்து கிழக்கே 400 கிலோ மீற்றர் தொலைவில் பசுபிக் சமுத்திரத்தில் விழுந்தது,

வேறு எந்த ஒரு நாடாவது இப்படி நடந்திருந்தால் அது யுத்த பிரகடனமாகக் கருதப்படும். ஆனால் வட கொரியாவைப் பொறுத்தவரை வட கொரியா உலக அபிப்பிராயத்தை மதிக்கும் நாடு அல்ல என்பதால் பொறுத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

### கடந்த ஜூலையில் எச்சரிப்பு

வட கொரியாவின் உந்துவிசை ஏவுகணை உற்பத்தி குறித்து அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் தலைமையிலான அமெரிக்க நாடாளுமன்றக் கமிஷன் கடந்த ஜூலையில் எச்சரித்திருந்தது.

ஆனால் ஒகஸ்ட் 31 ஏவுகணைப் பரிசோதனை குறித்து ஜப்பான் முன்கூட்டியே அறிந்திருக்கவில்லை.

அதுவும் ஜப்பானுக்கு மேலால் சென்று பசுபிக் சமுத்திரத்தில் விழுந்து ஐந்து மணித்தியாலங்களுக்குப் பின்னரே அது குறித்து ஜப்பானுக்குத் தெரிய வந்தது.

## உலக உலா

என்.பி.சீலன்

இந்த சம்பவத்தின் பின்னர் ஜப்பான் தனது பாதுகாப்புக்காக ஏவுகணை எதிர்ப்பு சாதனங்களை பொருத்த வேண்டும் என்றும் —

உளவறியும் செய்மதிகளை வானில் விட வேண்டும் என்றும்—ஜப்பானிய பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.

இதனை சாட்டாக வைத்து அமெரிக்காவும் தனது ஆயுத பலத்தை அப்பகுதியில் அதிகரித்துள்ளது.

ஜப்பானில் உள்ள தனது குவாம் தளத்துக்கு அமெரிக்கா புதிதாக மூன்று 'பி—2' ரக சண்டை விமானங்களையும் மூன்று 'பி—52' ரக குண்டு வீச்சு விமானங்களையும் அனுப்பி உள்ளது.



வடகொரிய ஜனாதிபதி கிம் யொங் இல் தமது படை உயர் அதிகாரிகள் மத்தியில் காணப்படுகிறார்.

### பிரதான பிரச்சினை பொருளாதார நெருக்கடி

வடகொரியாவின் ஆயுள் காலத் தலைவராக இருந்து மரணமான — வடகொரிய மக்களின் மாபெரும் தலைவராக (Great Leader) கருதப்பட்ட — கிம் இல் சுங்கின் மரணத்துக்குப் பின்னர் பதவிக்கு வந்தவர் அவரது மகனான கிம் யொங் இல்.

வயதில் குறைந்தவரான கிம் யொங் இல் இதுவரை வடகொரியாவின் பாதுகாப்பு கமிஷன் தலைவராகவே இருந்து வந்தார்.

சமீபத்திலேயே கிம் யொங் இல்லை வடகொரிய ஆட்சிச்சபை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தது.

ஏவுகணைப் பரிசோதனை மூலம் வடகொரியா எதனையும் பெரிதாகச் சாதிக்காவிட்டாலும் வடகொரியாவை ஒதுக்கி வைக்க முடியாது என்ற நிலையை அது உருவாக்கி இருக்கிறது.

வட கொரியாவின் தற்போதைய பிரதான பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினை. இந்த பிரச்சினை தீருவதற்கு பெருமளவு தடையாக இருப்பது அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளே.

வடகொரியா மீது அமெரிக்கா பொருளாதாரத்தடை போட்டதன் உள்நோக்கம் அந்த நாட்டைப் பலவீனப்படுத்தி கம்யூனிச் ஆட்சிக்கு முடிவு கட்டுவதே. அந்த நோக்கம் நிறைவேறும் வரை வடகொரிய விடயத்தில் அமெரிக்கா விட்டுக் கொடுக்குமா என்பது சந்தேகமே.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org